இலவச வெளியீடு: GERMANY , ENGLAND மார்கழி. Dec. 2016

Free Circulation

# வெற்றிமணி


Vettimaniy

மணி 66

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர்
மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை



Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

## ஒரு பெண்ணை அதிபராக்க ஏன் தயங்குகிறது அமெரிக்கா?



## நீ என்னவாக விரும்புகிறாய்?



## இசைகேட்டால் I Q நுண்ணறிவு அதிகரிக்கும்!

2017
அனைவருக்கும்
எங்கள் இனிய நத்தார்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
சகல Alarmanlage, Überwachung
Kamera,பொருத்துதல்..
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740

டோட்மூண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!
Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund



என்றும்
புதியது
அழகின்
இரகசியம்
அது.

S.K.Silks & Gold Paraadise

தரம்! அதிக தேர்வு!! அனைத்தும், தங்களை அசத்தும்!!!

புத்தம், புதிய, வரவுகளான எம்பிறோய்ட் சேலைகள் (Embroidery Sary)
மற்றும் திருமணப் பட்டுப்புடவைகள், அனைத்திற்கும் நாடுங்கள்.






Blous
அழகாகவும் அளவாகவும்
உங்கள் பிளவுஸ் சேலைக்கு மேலும்
மெருகூட்டும் வண்ணம்
தைத்துக் கொடுக்கப்படும்.

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

Tel:0231 9501 647
Mr.P.Sritharan.
Proprietor

Adler str 33 - 44137 Dortmund













# லண்டனில் மயிரிழையில் தப்பிய விமானம்

ஆள் உயர எட்டுமூலைப் பட்டம் கட்டி, முன்பக்கம் விண்ணும்பூட்டி, பறக்கும் போது அதன் கம்பீரமும் விண் சத்தமும் அந்த இளைஞர் பட்டாளங்களின் பெயர் சொல்லும்.
பெரும்பாலும் பட்டங்கள் கடற்கரை ஓரமோ, அல்லது வயல் வெளிகளிலேதான் விடுவார்கள்.

ஆனால் நாம் விட்டது விமான ஓடுதளத்தில்.
என்னடா எங்கடா என்று கேட்கிறீர்களா?

ஆம்! பலாலி விமானநிலையத்தில். அதுவும் பாவிக்காமல் இருக்கும் பெரும் ஓடுதளத்தில்,பட்டம் விடுவோம். பட்டம் மட்டுமா? குரும்பசிட்டி, கட்டுவன், வசாவிளான், இவை பலாலி விமான நிலையத்தை சூழ்ந்த கிராமங்கள்.
இந்தக் கிராமங்களில் காவாசிப்பேர் சைக்கிள் ஓடப் பழகியதும் இந்த விமான ஓடுதளத்தில்தான்.

அப்போ கைத்தொலைபேசி கிடையாது. நாம் செய்யும் திருகுதாளங்களை மேலிடத்தில் சொல்வது என்றாலும், ஒருவர் சைக்கிளில் சென்றுதான் முறையிடவேண்டும். அதற்குள் நாம் மாறிவிடுவோம்.
ஒரு முறை நாம் பட்டம் விட்டபோது அங்கு வேலை செய்யும் பிளேன் மாமா ( நாம் அப்படித்தான் அழைப் போம்) அவர் சொன்னார், "விமானத்தின் மின் விசிறிக்குள் பட்டம் சென்றுவிடும் எனவே இங்கு பட்டம் விடவேண்டாம்" என்றார்.
நாம் எப்ப விமானம் வரும்? பட்டம் எப்படிச் சிக்கும்? என்று கேட்டோம். அவர் சிரித்துக் கொண்டே சென்றுவிட்டார். ஆம் அப்போ காலை ஒரு விமானம் பின் மாலை சில வேளை ஒரு விமானம்தான் வரும்.

இப்போ 165 பயணிகளை ஏற்றிக் கொண்டு வானில் பறந்து கொண்டிருந்த விமானம் மீது ( இப்போ இங்கு திருமண வைபவங்களில் பறந்து பறந்து படம்பிடிக்கும் ) ஆளில்லா குட்டி விமானம் மோதி விபத்துகுள்ளாக இருந்த சம்பவம் அதிர்ஷ்டவசமாக லண்டனில் தடுக்கப்பட்டது.

இச்செய்தி அறிந்ததும், அன்று நாம் பட்டம் விட்டது பாரியகுற்றம் எனப் புரிகிறது.
ஒரு விமானமோ நூறு விமானமோ எத்தனை வந்தாலும் பட்டம் சிக்கினால் சிக்கினதுதானே.
A320 என்ற பயணிகள் விமானம் 165 பயணிகளுடன் மத்திய லண்டன் வழியாக வானில் பறந்து கொண்டிருந்தது.
அப்போது ஐரோப்பியாவின் மிக உயர்ந்த கட்டிடமான Shard அருகே விமானம் சென்று கொண்டிருந்த போது, இந்த விமானத்தின் அருகே விமான நிலையத்தில் இறங்கும் விமானங்களை படம் பிடிக்கும் ஆளில்லா குட்டி விமானம் ஒன்று வந்தது.




அதை விமானி ஜன்னல் மூலமாக பார்த்து சரியாக செயல்பட்டதால் அந்த குட்டி விமானமானது பயணிகள் விமானத்தின் மீது மோதாமல் சென்றது. இதனால் அங்கு நடக்கவிருந்த பெரும் விபத்து தடுக்கப்பட்டது. இது குறித்து பயணிகள் விமானத்தை ஓட்டிய விமானி கூறுகையில், அந்த குட்டி ஆளில்லா விமானமானது எங்கள் விமானத்தின் அருகில் வெறும் 20 மீட்டர் இடைவெளியில் தான் இருந்தது.
இது குறித்து விமான துறை அதிகாரிகள் கூறுகையில், இது போல சம்பவம் இதற்கு முன்னர் இரண்டு முறை நடந்துள்ளது. அதிலிலும் அதிஷ்டவசமாக விபத்துக்கள் ஏற்படவில்லை.
இது போல பயணிகள் விமானம் அருகில் ஆளில்லா விமானத்தை விடுவது குற்றமாகும். குறைந்தது 400 அடி (122 மீற்றர்) வரையே அது பறக்க அனுமதியுள்ளது. இதற்கு சிறை தண்டனை வழங்க கூட சட்டத்தில் இடமுள்ளது என தெரிவித்துள்ளனர்.
இந்தக் குட்டிவிமானம் எதிர்காலத்தில் பொதிகள் எடுத்துச்செல்லவும் பிற்சா பரிமாறவும் பாவிப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன. அவை வெற்றி அளிக்குமானால் வானத்திலும் சிக்னல் லைட்டுக்கள் தோன்றும்.



பிட்ஷா டிலிவறி

கமறாக் காமுகன்







திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிராரர்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி






சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450


அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 243



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

Vettimaniy Ltd




# ஒரு பெண்ணை அதிபராக்க ஏன் தயங்குகிறது அமெரிக்கா?













உலகில் முதலாவது பெண் பிரதமரைத் தேர்ந்தெடுத்து அரசியல் பாதைக்கு முத்தாரம் இட்டது இலங்கை. 1960 இல் முதலாவது பெண் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தேர்ந்தெடுக்கப்பட்டார்.
அதனைத் தொடர்ந்து இந்திரகாந்தி (1966)...... மாகிரட் தட்சர் (இங்கிலாந்து 1979) குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆனால் அமெரிக்கா!
ஒரு பெண்ணை அதிபராக்க ஏன் தயங்குகிறது அமெரிக்கா?
அமெரிக்க தேர்தல் முடிவுகளை உலகமே மிகுந்த ஆவலோடு கவனித்தது. குடியரசுக் கட்சியின் சார்பில் டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயக கட்சி சார்பில் ஹிலரி கிளின்டன் இருவரும் போட்டியில் இருந்தனர். அமெரிக்க வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண் அதிபராவார் என்று கருத்துக் கணிப்புகள் பலவும் தெரிவித்து வந்தன. இது உலகம் முழுக்கவே பெரும் ஆர்வத்தைத் தூண்டிவிட்டது.
காரணம்... பெண்கள் சுதந்திரமாக பல பணிகளில் ஈடுபடுவது, பல துறைகளில் ஆண்களுக்கு நிகராக போட்டிப் போடுவது என்று பலவற்றிலும் அமெரிக்கா முன்னோடியாக இருந்தாலும்... ஒரு பெண் அந்நாட்டின் அதிபராக முடியாத சூழலே நிலவி வந்ததுதான். இத்தகைய சூழலில்தான், உலகம் முழுவதும் நன்கு பரிட்சயமானவரும், முன்னாள் அமெரிக்க அதிபரின் மனைவியுமான ஹிலரி கிளின்டன், ஜனநாயக கட்சி சார்பில் நிறுத்தப்பட்டார். இதையடுத்து, பெண் அதிபர் எனும் கனவு நிச்சயம் நிறைவேறும் என எதிர்பார்ப்பு கூடியது. மூடிஸ் அனாலிடிக்ஸ், எலெக்டோரல் கல்லூரி உள்ளிட்ட பல கருத்துக் கணிப்புகளும் ஹிலரியே வெற்றி பெறுவார் எனச் சொல்லி வந்தன. ஆனால், தேர்தல் முடிவுகள்... அனைத்தையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டன.
இறுதியில், பெரும்பான்மை உலகம் எதிர்பாராத வகையில் டிரம்ப் வெற்றி வாகை சூடிவிட்டார். ஒரு பெண் அதிபராவது இந்த முறையும் இல்லை என்றாகி விட்டது.

இந்த நிலைக்கு என்ன காரணம்... பெண் என்பதாலேயே அமெரிக்கர்கள் ஒதுக்கித் தள்ளுகிறார்களா? என்ற கேள்விகளை மூத்த பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளர் வாஸந்தியிடம் வைத்தபோது,

"இந்தியாவில் பல ஆண்டுகளுக்கு முன்பே ஒரு பெண் பிரதமராக முடிந்திருக்கிறது. ஆனால், அமெரிக்காவில் இப்போது வரை அது நடக்கவில்லை. இந்தியாவில் பெண்ணுக்கு தெய்விக குணங்களைச் சூட்டி விடுவார்கள். பின் அதையே முன்மொழிந்து தேர்தலில் நிற்க வைத்து வெற்றி பெறச் செய்துவிடுவார்கள். வாக்குகளைச் சேகரிக்கும் வசீகரம்தான் இங்கு முக்கியம்.







## கவிதை 01 - வெளிநாட்டு வாழ்க்கை

சட்டிபாணை பந்தலுக்கு கீழ மழைக்கு
கோழி ஒதுங்கும் - அதை புடிச்சு தின்ன
வெள்ளம் ஏறாத புட்டி மேல நின்று கீரி பதுங்கும்.

கிளுவம் தடி நட்டு கிடுகு அடைச்சாலும்
வேலிக்குள்ளால் சாரப்பாம்பு நுழைஞ்சு வந்திடும் - அதை
சாகடிக்க வீட்டிலிருக்கும் வயதானவர்கள் விடுவதில்லை...
.
பின்னேர வேலை முடிய கிணத்து கட்டில் உட்க்காந்து
பசு மாட்டினை பற்றி பேசினாலும் - குழு மாட்டினை பற்றி
பேசினாலும் வாய் ஆவண்ட வேண்டியதுதான்.

எலி பிடிக்க வளர்த பூனை அடுப்படிக்குள்
நெத்திர கொள்ளும் - சனி கழிய காக்காய்கு சோறு
வைத்தால் சில்வர் பேனி களவு போகும்

நேத்திக்கு வெட்டின ஆட்டுப் பங்கு
வீட்டுக்கு வருகிறது என்றால் - அன்று
பள்ளிக்கூடத்துக்கு லீவு

ஊரில உடும்பு இறச்சிக்கு தடை - ஆனாலும்
நலம் அடிச்ச நாய் வளர்ப்பவர்களுக்கு
தெரியும் அதன் மீதி கதை

கிளி வளர்த்தவர்களில் பாதிப்பேர் - அது
தூசணம் பேசுதென்று அரை விலைக்கு வித்தார்கள்.
காதில் கேள்விப்பட்டதையே கிளி திருப்பி சொல்லுமாம்

எரிஞ்சு கொண்டிருக்கிற நுளம்பு திரிக்கு
மேல குந்தியிருந்து - கொட்டாவி விடுகிற
கொசுக்களையும் பாத்திருக்கிறேன்.

அடை மழை பெஞ்சால் தவளைகளின் சத்தம்
தூங்கவே விடாது - விடிய எழும்பி
பார்த்தால் எல்லாம் செத்து மிதக்கும்.

பூ வாடும் என்று தெரியாத வயதிலே
அதில் உட்க்கார விடாமல் - வண்ணத்திப்பூச்சியை
தூர கலைத்து விட்டதுண்டு.

செட்டைக் கறையானை பிடித்து
இதுதான் தும்பி என்று - பீய்தியது
உண்மைதான்..

மூத்திரக் குளவி கூட்டுக்கு நெருப்பு வைச்சு
அது துரத்திக் கொண்டு வர - நம்ம
காச்சட்டை நனைந்ததுதான் மிச்சம்






ஓடி திரியும் அணிலும் தலை குத்தன நிற்க்கும்
வெளவாலும் - மா மரத்தில் ஏற விட்டதேயில்லை...
கொறித்த பழத்தில் ருசி அதிகம்

பாயோடு சேர்த்து கொடுக்கானை நகிச்சால்
புழுத்த மணம் அடிக்கும் - நட்டுவக்காலி
என்றால் நாற்றம் இன்னும் மோசமாயிருக்கும்.

மழை தூறினால் நாக்கிளி பூச்சிக்கும்
தம்பள பூச்சிக்கும் பஞ்சமில்லை - வாசல் படியை
சுற்றி கறுப்பு அட்டை குடியிருக்கும்
.
பல்லி சொல்லும் போதெல்லாம் பஞ்சாங்கத்தில்
பலன் பார்ப்பதும் - முதுகில் மூட்டப்பூச்சி கடிச்சால்
கட்டில் செய்தவனை திட்டுவதும் வழமைதான்.

இயற்கை அழிவில் இருந்து ஓரளவு
தப்பி கொள்ளலாம் - ஆனால்
இலையானிடம் இருந்து தப்பவே முடியாது.

புறாவுக்கு வச்ச கண்ணியில் கொட்டாமட்ட குருவி
மாட்டி இருக்கு - யாருக்கும் தெரியாமல் போக
நினைத்த இடத்தில் ஆட்காட்டி குருவி கத்தியிருக்கு.

என்னோடு வாழ்ந்த இத்தனை யிவ ராசிகளையும்
இப்போது இணையத்தில் தேடி பார்க்க வைத்து விட்டது
வெளிநாட்டு வாழ்க்கை

## கவிதை 02 - சந்தோசமாய் இருக்கிறேன்

நீண்ட நாட்களுக்கு பிறகு ஓய்வு என்பதை விட
எனக்கு நின்மதியே கிடைத்திருக்கிறது.

நான் சம்பாதிக்கும் பணத்தை - முதல்முதலாய்
எனக்காக செலவு செய்ய ஆரம்பித்திருக்கிறேன்.

விடுமுறை நாட்களில் ஊருக்கு போகவும் ஓரளவு
உறவினரோடு பேசவும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

நாளுக்கொரு புது சட்டை போடும் பழக்கத்திலிருந்தும்
வாரத்துக்கு இரு முறை முகச்சவரம் செய்யும்
வேலையிலுமிருந்தும் ஒதுங்கிவிட்டேன்.

இப்போது கடற்கரைக்கு போகையில் குடை
வாங்குவதுமில்லை - சினிமாவுக்கு போகையில்
பின் இருக்கையை முன் பதிவு செய்வதுமில்லை...

சேலை கடைக்காரனுக்கும் வாசலில் நின்று
சிமிக்கி விற்பவனுக்கும் தற்சமயம்
கும்பிடு போடுவதில்லை...

சாப்பிட்டதும் கோட்டலில் டிப்ஸ் கொடுப்பதை
நிறுத்தி விட்டேன் - வீதியில் கை நீட்டுபவனுக்கு
சில்லறையாவது கொடுக்கிறேன்.

நேரத்துக்கு தூங்குகிறேன் - தொலைபேசியை
அலாரத்துக்காகவும் பயன்படுத்துகிறேன்.

நம்பி ஏமாந்த பிறகும் என் வாழ்வில்
இப்படி ஒரு விடியல் கிடைக்கும் என
நான் எதிர்பார்கவேயில்லை...



Wilhelm Str.09
33602 Bielefeld
Lakshmi Jewellery &Silks
நத்தார், புத்தாண்டை முன்னிட்டு
பட்டுச்சேலைகள் தவிர்ந்த ஏனைய
ஆடைகள் 50% தள்ளுபடியில்
பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் மிக மிக மலிவு விலையில் கிடைக்கும்
அழகிய டிசைன்களில் தரமான தங்க நகைகளுக்கு
எம்மை நாடுங்கள்
தொலைபேசி: Ruban 0179 72 35 729
Tel:0521 4283 510

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்



அன்பான நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்!
2017
AMMA's food
Sri Lankan & South Indian Specialities
அம்மா'ஸ் உணவகம்
மலரவிருக்கும் நத்தார் புத்தாண்டினை முன்னிட்டு
21.12.2016 முதல் 15.01.2017 வரை
Mittags Buffet
Um 12.00 Uhr bis 15.00 Uhr
Tel:0231 33 89 86 91
அமைதியாகவும், ஆனந்தமாகவும், பிரியாணி,
கொத்துறொட்டி, இடியப்பக்கொத்து.
தோசை, இட்டலி, மசாலத்தோசை, பாலப்பம்.
இன்னும் ...
நீங்கள் விரும்பியவகை உணவுகளை உண்டு மகிழ்ந்திட
Amma's Food
Rheinische str.80 A - 44137 Dortmund
Tel:0231 33 89 86 91


TKS BEST FOODS
TKS BEST FOODS
Asia Afro & Europäische Lebenamittel Einzelhandel
www.tks- bestfoods.de
Dortmund நகரில்
2017
நத்தார், புத்தாண்டினை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
1.12.2016 முதல் 05.01.2017 வரை
Öffnungzeiten
9:00-20.00
Son & feiertage
geschlossen
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட
மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப் பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்
மற்றும்
சமையல்
உபகரணப்
பொருட்கள்,
பூஜைப்
பொருட்கள் ...
தரமானதும், நியாயமான விலையிலும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியது
TKS Best Food
Rheinische str.79 - 44137 Dortmund
Tel: 0231 950 46 881 Fax:0231 950 46 882


முற்பதிவுக்கு முந்துங்கள்
Bochum
Lucky Fly Reisebüro
என்றும் மலிவான விலையில்
தரமான சேவையை வழங்குவது
Lucky Fly Reisebüro
இந்தியா
செல்வதற்கான
1 மாத,2.மாத,3.மாத
விசாக்கள்
பெற்றுத்தரப்படும்
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
எசன் மாநகரில்
புதிய கிளை நிறுவனம்.
Altendorfer Str:266
45143 Essen
Germany
Tel: 0201 8009 3749
Mob:No: 0179 1484 892
2017 கோடை கால
விடுமுறைக்கான முற்பதிவுக்கு
முந்துங்கள்!
Lucky Fly Reisebüro
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
Mob:No: 0179 1484 892
Lucky Fly Reisebüro
கொழும்பு விமான நிலையத்தில் இருந்து
உங்கள் இடத்திற்கு அழைத்துச்செல்ல
பிரத்தியேக பிரயாண ஒழுங்கள்
(Car,Van, Bus ) செய்து தரப்படும்.
Summer
Holidays
2017
air port pickups
e.mail:siva 0108 @hotmail.com
Graphic Design Vettimaniy Ltd
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச்
சேவை!!!
MoneyGram.
WESTERN UNION WU
moving money for better

# Dr.நிரோஷனின் அதிசய உலகம் 2

## நாளைய மனிதனுக்கு இறப்புண்டா?




(Transcendence) என்கின்ற பெயரில் ஒரு ஹாலிவுட் திரைப்படத்தைக் கூட எடுத்துள்ளார்கள். அதில் கதாநாயகனாகிய ஜானி டெப் (Johnny Depp) தனது மரணத்திற்குப் பின், தன்னை ஒரு கணினிக்குள் பதிவேற்றி விடுகின்றார். இந்தப் படத்தைப் பார்க்காதவர்கள் கண்டிப்பாகப் பாருங்கள். எனக்குப் பிடித்த படங்களில் இதுவும் ஒன்று தான்!

நாளைய மனிதனுக்கு இறப்புண்டா?

இறப்பு... இறப்பு என்கின்ற வார்த்தையைக் கேட்டாலே போதும், எங்கள் எல்லோருக்குமே பயம் வந்துவிடும். உதாரணத்திற்கு நான் வாழும் ஜெர்மனியை எடுத்துக்கொண்டால் இங்கே ஒரு மனிதன் சராசரியாக 77 வருடங்கள் வரை உயிருடன் இருப்பான் என்று புள்ளிவிவரத்தில் பார்க்கலாம். இதே போல் தான் ஒரு நாட்டின் சூழ்நிலை, மருத்துவ வசதி போன்ற காரணங்களின் அடிப்படையில் அந்த நாட்டு மக்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை உயிருடன் இருப்பார்கள். இப்படிப் பார்த்தால், நாங்கள் எல்லோருமே ஒரு முடிவை நோக்கித் தானே சென்றுகொண்டிருக்கிறோம். அதாவது நமது பூமியில் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் இறப்பு என்பது நிச்சயம் தானே? அது, சரி தானே...?






இல்லவே இல்லை என்று விஞ்ஞானம் கூறுகின்றது! குறிப்பாகக் கூகுள் (Google) நிறுவனத்தில் பொறியியல் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் (Director of Engineering) ரேய் குர்ஸ்வைல் (Ray Kurzweil) என்பவர் ஒரு நம்ப முடியாத விஷயத்தைக் கூறியிருக்கிறார். இதில் அதிசயம் என்னவென்றால், இவர் கடந்த காலங்களில் கூறிய அதிகமான விஷயங்கள் உண்மையாகவே நடந்து விட்டன! எனவே, இதுவும் சும்மா அறிவியல் புனைவு (Science Fiction) என்று சொல்லிவிட்டுப் போக முடியாது! சரி, சரி போதும், இனி அவர் அப்படி என்ன தான் கூறியிருக்கிறார் என்று பார்ப்போமா?




அவரின் கணிப்புப் படி இன்னும் ஒரு 30 ஆண்டுகளில் நாம் நமது மூளையில் பதிந்திருக்கும் அனைத்தையும் ஒரு கணினியில் பதிவேற்ற, அதாவது upload பண்ண முடியும் என்று கூறியிருக்கிறார். நண்பர்களே, அதன் விளைவு என்ன என்று உங்களுக்குப் புரிகிறதா? அப்படி ஒரு நிலைமை வந்தால், நமது உடல் இறந்துவிட்டாலும், நாம் ஒரு கணினியினுள் நமது வாழ்க்கையைத் தொடரலாம் என்பது தான். எனவே எதிர்கால மனிதனுக்கு இறப்பே இல்லை! அதாவது உடல் இறந்தாலும், தனது கனவுகள், நினைவுகள் எல்லாவற்றுடனும் ஒரு செயற்கை வாழ்க்கையைக் கணினிக்குள் தொடரலாம். இதை ஒரு விதமான டிஜிட்டல் வாழ்க்கை என்றும் கூட அழைக்கலாம்.

ஏன், இந்த விஷயத்தை அடிப்படையாக வைத்து டிரான்சன்டன்ஸ்

நண்பர்களே, மனித மூளை போல் ஒரு அதிசயம் இந்த உலகில் மட்டும் இல்லை, இந்தப் பிரபஞ்சத்திலேயே இல்லை என்பதில் எந் வித மாற்றுக்கருத்தும் இல்லை. எனவே, ஒரு செயற்கை மனித மூளையை உருவாக்கு வதற்குத் தற்போது இருக்கும் கணினிகள் போதாது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். ஆனால், கணினியியலில் மூர்ஸ் லாவ் (Moore's law) என்று அழைக்கப்படும் ஒரு சட்டம் இருக்கின்றது. அதன் அடிப்படையில் கணினிகளின் கணக்கீட்டு ஆற்றல் ஏறத்தாழ ஒவ்வொரு இரண்டு வருடத்திற்கும் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது. இந்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்துத் தான் ரேய் குர்ஸ்வைல் அவர்கள் 30 வருடங்களில் இருக்கும் கணினிகளுடன் ஒரு செயற்கை மனித மூளையைக் கட்டாயம் உருவாக்க முடியும் என்று கூறி இருக்கிறார்.



முன்னொரு காலத்தில் முடியவே முடியாது என்று கூறப்பட்ட விஷயங்கள், இன்று நமது வாழ்க்கையில் ஒரு சாதாரணமான விஷயம் ஆகிவிட்டது. அதே போலத் தான் இன்று முடியாது என்று சொல்லும் ஒரு விஷயம், எதிர்காலத்திலும் சர்வ சாதாரண ஒரு விஷயம் ஆகிவிடும். என்ன நண்பர்களே, நான் சொல்வது சரி தானே?

இனி நீங்கள் கூறுங்கள்! மனிதனுக்கு இறப்பு இல்லாமல் கணினிக்குள் வாழ்வது சரியா? இப்படி ஒரு நிலைமை வந்தால், நீங்களும் உங்களை ஒரு கணினிக்குள் பதிவேற்றி விட்டு உங்கள் டிஜிட்டல் வாழ்க்கையை ஆரம்பித்து விடுவீர்களா?

2

## இசைகேட்டால் நுண்ணறிவு அதிகரிக்கும்!

6ம் பக்கத் தொடர்ச்சி



# இசைகேட்டால் நுண்ணறிவு அதிகரிக்கும்!




இசைக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?

5ம் பக்கத் தொடர்ச்சி

உங்களுக்குப் பிடித்த பாடல் என்ன? அம்மம்மாவைக் கேட்டால் „பச்சைக் கிளி முத்துச்சரம் முல்லைக்கொடி யாரோ“ பிடிக்கும் என்பார். அப்பாவிடம் கேட்டால் „வா வெண்ணிலா உன்னைத் தானே வானம் தேடுதே“ என்பார். அதுவே ஒரு இளைஞரிடம் கேட்டால் „போற போக்கில் ஒரு லுக்க விட்டு என்ன செஞ்சிட்டாளே, என்ன செஞ்சிட்டாளே“ என்பான். தமிழர்களிடம் மட்டும் இல்லை, இந்த உலகில் யாரைக் கேட்டாலும் சரி, இசையைப் பிடிக்காதவர்கள் இருக்கவே மாட்டார்கள். அனைவருக்கும் பிடித்த பாடல்கள், பிடித்த பாடகர், பிடித்த இசையமைப்பாளர் என இருக்கத்தான் செய்யும். ஆனால், ஏன் எல்லோருக்கும் இசை என்றால் பிடிக்கிறது? சிலருக்கு இசை ஒரு போதை போன்று மகிழ்ச்சியைக் கொடுக்கிறதே. இசையில் அறிவியல் ரீதியாக அப்படி என்ன தான் இருக்கிறது?







இசை எல்லோருக்குமே புரிகின்ற ஒரு மொழி என்றே கூறலாம். வார்த்தைகளால் நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதை விட இசையால் வெளிப்படுத்துவது மிகவும் இலகுவாக இருக்கும். அடிப்படையில் இசை என்பது வேறு ஒன்றும் இல்லை: பல ஒலி அதிர்வெண்கள் (audio frequency) கலந்து விதம் விதமான வடிவங்களில் காற்றில் மிதந்து நமது செவிகளை அடைவதைத் தான் இசை என்று கூறுகின்றோம். நமது கண்கள் ஒளியை எவ்வாறு செயலாக்கம் செய்கின்றனவோ, அதே போன்று தான் நமது காதுகளும் ஒலியைச் செயலாக்கம் செய்கின்றன. உண்மை சொல்லப்போனால் நாம் பிறப்பதற்கு முன்பே இசையைக் கேட்க ஆரம்பித்து விடுகின்றோம். என்ன நண்பர்களே, புரியவில்லையா? நாம் நமது தாயின் கருப்பையில் இருந்த போது, நமது கண்களால் ஒன்றுமே பார்க்கமுடியாமல் இருந்தோம். ஆனால், நாம் நமது காதுகளால் எப்போதுமே இசையை ரசித்துக்கொண்டு தான் இருந்தோம். அது வேறு ஒன்றுமே இல்லை, நமது தாயின் இதயத்துடிப்பு தான். எப்போதுமே நமக்கு தாலாட்டு போல் அந்த இதயத் துடிப்பின் இசையில் நாம் உறங்கிக்கொண்டு இருந்திருக்கிறோம்.

மனித உடலில் இருக்கும் ஒரு சுவாரசியமான குணம் என்னவென்று தெரியுமா? உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான சம்பவங்கள் நமது உடலுக்குள் நடைபெறும்போது நமது மூளை மகிழ்ச்சி மற்றும் திருப்தி போன்ற உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறது. உதாரணத்திற்குப் பசிக்கும் போது நாம் தேவைக்கு ஏற்ற மாதிரி உணவு அருந்திவிட்டதும் நமது பசி தீர்ந்துவிட்டு, உடனடியாக சந்தோஷமும் திருப்தியும் அடைந்து விடுகின்றோம். ஆனால், உண்மையில் அந்நேரம் என்ன நடைபெறுகிறது என்றால் டோபமீன் (dopamine) எனப்படும் வேதியியல் பொருள் நமது மூளைக்குள் வெளியிடப்படுகிறது. இது நரம்புக்கடத்தியாக (neurotransmitter) பணிபுரிந்து இந்தச் சந்தோஷமும் திருப்தியும் கலந்த உடல்நிலைக்குக் காரணமாக இருக்கிறது. இதேப்போன்று தான் போதைப்பொருட்கள் பாவிக்கும் வேளையில் டோபமீன் வெளியிடப்பட்டு நாம் வானத்தில் மிதப்பது போல் இருக்கிறது. நமது உடலில் அந்தப் போதைப்பொருள் குறையும்போது டோபமீன் வெளியிடுவதும் நிறுத்தப்படுகிறது. எனவே, தொடர்ந்து மகிழ்ச்சி நிலையை அடைவதற்காக மேலும் அந்தப் போதைப்பொருளை உள்வாங்க வேண்டியதாகிவிடும். அத்துடன் நமது உடலும் அந்தப் போதைப்பொருளுக்கு அடிமை ஆகி விடுகிறது.

இதில் சுவாரசியமான விஷயம் என்ன தெரியுமா? நாம் இசையை ரசிக்கும் போது நமது உடலில் பல செயல்கள் நடைபெறுகின்றன. இரத்த அழுத்தம் அதிகரித்து நமது மூளையில் உள்ள பல்வேறு பகுதிகள் இயங்கத் தொடங்கிவிடுகின்றன. இசை, நாம் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானது இல்லை என்றாலும், அதை ரசிக்கும் போது நமது மூளையில் டோபமீன் வெளியிடப்படுகிறது. அதன் விளைவு என்னவென்று உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும். அதாவது, நாம் மகிழ்ச்சி கலந்த திருப்தி நிலையை அடைந்து விடுகின்றோம். இன்று வரை அதன் காரணத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடிக்கவில்லை. போதைப்பொருட்கள் நம்மை அடிமை ஆக்குவது போல் இசையும் ஒரு விதமாக நம்மை அடிமை ஆக்கிவிடுகிறது. ஒவ்வொரு மனிதனின் இசைச் சுவை வித்தியாசமாக இருந்தாலும் அதன் விளைவு எப்போதும் ஒன்றாகத்தான் இருக்கிறது.

டோபமீன் வெளியிடுவது மட்டும் இல்லாமல் இசை கேட்கும் போது நமது உடலில் மேலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக நமது உடலில் எல்லாமே ஒரு தாளத்திற்கு அடங்கியதாகத் தான் இருக்கிறது. நமது இருதயம் துடிப்பது ஒரு தாளத்தில். நாம் சுவாசிக்கும் போது பிராணவாயு உள்வாங்கி கரியமிலவாயு வெளியேற்றுவது இன்னும் ஒரு தாளம். கடினமான வேலை செய்யும் போது இருதயத் துடிப்பு மற்றும் சுவாசத்தின் தாளம் அதிகரித்துவிடுகிறது. அதே போன்று தான் நாம் இசை கேட்கும் போதும் இந்தத் தாளங்கள் மாறிவிடுகின்றன. அதன் விளைவாக இரத்த அழுத்தம் மற்றும் மூளையின் செயல்பாடும் மாறிவிடுகின்றது. பொதுவாக நமது இருதயம் ஒரு நிமிடத்தில் 72 தடவைகள் துடிக்கின்றது. இந்தத் துடிப்பை 72 பீட்ஸ் பேர் மினிட் (Beats per Minute, BPM) என்று சொல்வார்கள். அதே போன்று தான் இசையின் தாளத்தையும். BPM ஊடாக அளக்கலாம். ஆராய்ச்சியாளர்கள் அறிந்தது என்னவென்றால் இசையின் தாளம் பொறுத்து நமது உடல் வெவ்வேறு உணர்ச்சிகளை உணர்கின்றது என்பது தான். 72 BPMF அதிகமாக இருக்கும் இசை கேட்கும் போது நாம் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறோம், அதுவே 72 BPMF குறைவாக இருக்கும் இசை கேட்கும் போது நாம் அமைதி ஆகி விடுகிறோம்.

இசையில் இன்னும் ஒரு மிக முக்கியமான விசேஷம் இருக்கிறது. சிறுவர்களின் வளர்ச்சி நேரம் இசை அவர்களின் மூளை விருத்தியைத் தூண்டுகிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் அறிந்துள்ளார்கள். அதுவும் அவர்களின் நுண்ணறிவு எண் எனப்படும் Intelligence Quotient (IQ) அதிகரிப்பதற்கு இசை கேட்டாலே போதும் என்று கூறுகின்றார்கள்.




எனவே, பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை சிறு வயதினிலேயே சங்கீதம், பியானோ, புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்ள விடுங்கள். அவர்கள் மேலும் புத்திசாலிகள் ஆவதற்கு வாய்ப்புகள் உள்ளன. உண்மை சொல்லப்போனால் இப்படி அடுத்து அடுத்தாக இசையினால் நாம் பெறும் பயன்களைப் பற்றி கூறிக்கொண்டே போகலாம். இருந்தாலும் இத்துடன் நிறுத்தி விடுகின்றேன். இனி நீங்கள் கூறுங்கள் நண்பர்களே, உங்களுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு என்ன? உங்களுக்கு பாடத் தெரியுமா அல்லது ஏதும் இசைக்கருவி வாசிக்கத் தெரியுமா? உங்களுக்குப் பிடித்த பாடல் என்ன? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook. com/scinirosh) அறியத் தாருங்கள்!






**என்ன சொல்கிறது கிறிஸ்து பிறப்பு ?**

கிறிஸ்மஸ் என்றதும் வண்ண விளக்குகளும்இ ஒளிரும் நட்சத்திரங்களும், வாழ்த்து அட்டைகளும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தான் நமது மனதில் நிழலாடுகின்றன. ஆனால் கிறிஸ்து பிறப்பு அத்தகைய கொண்டாட்டங்களுக்கானதல்ல.

கிறிஸ்து பிறப்பு ஒரு தூய்மையான வாழ்க்கைக்கான அழைப்பு. அதன் பின்னணியை அறிவது பயனளிக்கும்.

படைப்பின் துவக்கத்தில் கடவுள் தந்தைஇ மகன்இ தூய ஆவி எனும் மூவொரு இறைவனாக இருந்தார். உலகம் படைக்கப்பட்டது. ஆறு நாட்கள் வார்த்தைகளால் இறைவன் உலகைப் படைத்தார். மண்ணிலிருந்து மனிதனை உருவாக்கினார். ஆணிடமிருந்து பெண்ணை உருவாக்கினார். பின்னர் ஏழாம் நாள் ஓய்வெடுத்தார்.

ஆதாம்இ ஏவாள் எனும் ஆதி மனிதர்கள் இருவரும் இறைவனின் ஏதேன் தோட்டத்தில் இருந்தனர். பாவத்தின் சோதனை சாத்தான் வடிவில் வந்தது. இறைவனின் கட்டளைக்கு எதிராய் மனிதன் பாவம் செய்தான். உலகில் பாவம் நுழைந்தது.

காலம் கடந்தது. இப்போது உலகம் பாவத்தின் கூட்டுத்தொகையாய் மாறியிருந்தது. கடவுள் கலங்கினார். மக்களை நல்வழிப்படுத்த இறைவாக்கினர்களை அனுப்பினார். மக்களோ அவர்களை நிராகரித்தனர்.

மீண்டும் மீண்டும் இறைவனின் வார்த்தைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. மக்கள் மீண்டும் மீண்டும் பாவத்தையே நாடினார்கள். உலகின் பாவங்களை மீட்க ஒரு மிகப்பெரிய பலி தேவைப்பட்டது. தனி மனித பாவங்களை சிறு பலிகள் தீர்த்து விடும். முழு மனுக்குல பாவங்களை மீட்க இறை பலி அவசியமானது.

தந்தையாம் இறைவன்இ தனது மகன் இயேசுவை உலகிற்கு அனுப்ப தீர்மானித்தார். மகனும் அதை மனமுவந்து ஏற்றார்.

இயேசு மனிதனாய் பூமிக்கு வந்ததன் நோக்கங்கள் இரண்டு.

ஒன்றுஇ மனுக்குலத்தின் பாவங்களுக்காக தன் உயிரைக் கொடுப்பது. அதை நம்பும் அனைவருக்கும் பாவ விடுதலையை வழங்குவது.

இரண்டுஇ பாவமற்ற புனித வாழ்க்கையை ஒரு மனிதன் எப்படி வாழலாம் என்பதை தனது வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து காட்டுவது.

இயேசுவின் பிறப்பும் வாழ்க்கையும் மரணமும் பல வாழ்க்கைப் பாடங்களை நமக்கு கற்றுத் தருகிறது. அந்தப் பாடங்களின் கூட்டுத் தொகையே கிறிஸ்தவ வாழ்க்கை. அந்த பாடங்களை நினைவு கூர்வதே கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படை நோக்கம். அப்படி எதைத் தான் கற்றுத் தருகிறது கிறிஸ்துவின் பிறப்பு ?

1. அன்பு செய்தல்

இயேசுவின் வருகைக்கு முதல் காரணம் மனுக்குலத்தின் மீது அவர் கொண்டிருந்த அன்பு. இருக்கும் மனுக்குலத்தை அழித்து விட்டு புதிய மனுக்குலத்தைப் படைக்க இறைவன் விரும்பவில்லை. இருக்கும் மனுக்குலத்தை மீட்க நினைத்தார். அதற்கு தனது உயிரையே தர இயேசு விரும்பினார். அது இந்த உலகின் மீது அவர் கொண்டிருந்த அதீத அன்பை வெளிப்படுத்துகிறது.

இயேசுவின் போதனை அன்பை மட்டுமே அடிப்படையாக கொண்டிருந்தது. இறைவனையும்இ மனிதனையும் அன்பு செய்வதில் அவருடைய போதனை அடங்கியிருந்தது. எதிரியைக் கூட அன்பு செய்ய இயேசு அழைப்பு விடுத்தார். அன்பே இறைவன். கண்ணில் காணும் சகோதரனுக்கு அன்பு செய்யாமல் கண்ணில் தெரியாத இறைவனுக்கு அன்பு செய்ய முடியாது என்றார் இயேசு. அன்பே முதல் பாடம்.

**விரதம் இருக்கிறாயா ? முகத்தில் அதன் சாயல் எதையும் பூசாதே. இவையெல்லாம் உனக்கும் கடவுளுக்குமான உறவு.**

2. தாழ்மை பழகுதல்

இயேசு தனது இறை தன்மையை விட்டு விட்டு மனிதனாய் வந்ததில் அவரது தாழ்மை வெளிப்பட்டது. தொழுவத்தில் நிகழ்ந்தது அவரது ஜனனம். கால்நடைகளின் தீவனத் தொட்டியே அவரது படுக்கை. ஏழைத் தச்சனுக்கு மகனாய் வந்தார் அவர். அவரது பிறப்பு தாழ்மையின் பாடம்.

மரணத்தின் போது அவருக்கு சிலுவை மரணம். அதுவும் அவமானப்படுத்தப்பட்டு அடிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட நிலையில் நிகழ்ந்தது. அவருடைய சிலுவையின் இருபுறமும் கள்வர்கள் இருவர் அறையப்பட்டனர். இயேசுவையும் கள்ளனாய் சித்தரிக்க. இயேசுவின் மரணம் தாழ்மையின் வெளிப்பாடு.

வாழ்க்கையின் போது இயேசு ஏழைகளோடு வாழ்ந்தார்இ ஏழையாய் வாழ்ந்தார். தங்கவும் இடமின்றி அலைந்து திரிந்தார். சீடர்களின் பாதங்களைக் கழுவக்கூடிய பணிவை கொண்டிருந்தார். இயேசுவின் வாழ்க்கை பணிவின் பயணம். தாழ்மை நாம் கற்க வேண்டிய முக்கிய பாடம்.

3. மன்னிப்பு வழங்கல்

இயேசு தனது போதனைகளில் மன்னிப்பை வலியுறுத்திக் கொண்டே இருந்தார். எத்தனை முறை என கணக்கு பார்க்காமல் மன்னிக்க வேண்டும் என்பதே அவரது போதனையாய் இருந்தது. சட்டங்கள் ஏழு முறை மன்னிக்கச் சொன்னதுஇ இயேசுவோ எல்லையற்ற மன்னிப்பை வழங்க வலியுறுத்தினார்.

அதை தனது வாழ்விலும் அவர் செயல்படுத்தினார். தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்தார். சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில்இ "தந்தையே இவர்களை மன்னியும்" என உரக்கச் சொன்னார். தனக்கு அருகே இருந்த கள்வனும் மன்னிப்புக் கேட்டதும் மன்னித்தார்.

நமது வாழ்க்கையில் நாம் கொண்டிருக்க வேண்டிய முக்கியமான பண்புகளில் ஒன்று மன்னிப்பு. மன்னிக்கும் மனம் இருந்தால் வாழ்க்கை வாசமாகும்.

தொடர்ச்சி 08ம் பக்கம்...

GTV நிகழ்ச்சிகளை சித்திரம் IP TV யில் பார்த்து மகிழலாம்.



என்ன சொல்கிறது கிறிஸ்து பிறப்பு ?

7ம் பக்கத் தொடர்ச்சி



4. பிறருக்கு உதவுதல்

பிறருக்கு உதவுகின்ற இளகிய மனதை இறைவன் விரும்புகிறார். இரக்கமான இதயம், இறைவன் தங்கும் இல்லம். இறுதி நியாயத் தீர்ப்பு நாளின் போது கடவுள் கேட்பது இதைத் தான்.

நான் பசியாய் இருந்தேன் உண்ணக் கொடுத்தாயா ? தாகமாய் இருந்தேன் பருகக் கொடுத்தாயா ? அன்னியனாய் இருந்தேன் வரவேற்றாயா ? ஆடையின்றி இருந்தேன் உடுத்தினாயா ? நோயுற்று இருந்தேன் சந்திக்க வந்தாயா ?.
"நான்" என கடவுள் சொல்வது, ஏழை எளிய சகோதர சகோதரிகளைத் தான். "சின்னஞ் சிறிய சகோதரர் ஒருவருக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோ தெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்கிறார் இயேசு. ஏழைகளுக்கு இரங்காதவன் விண்ணகத்திற்குள் நுழைய முடியாது என்பதே இயேசு சொல்லும் பாடம். மனித நேயத்தை மரணிக்க விடாமல் பாதுகாப்போம்.

5. இறையில் இணைதல்

நானே திராட்சைக் கொடி. நீங்கள் அதன் கிளைகள். என்னில் நிலைத்திருந்தால் மட்டுமே நீங்கள் கனி தருவீர்கள். என்றார் இயேசு. இயேசுவில் எப்போதும் இணைந்திருப்பதில் நமது ஆன்மீக வாழ்வின் ஆழம் வெளிப்படுகிறது. கொடியில் இணைந்திருந்தால் கனிகொடுப்போம்இ இல்லையேல் விறகாவோம்.
இயேசுவின் போதனைகளோடும், அவரது வாழ்க்கையோடும் நமது பயணத்தை அமைத்துக் கொள்வதே அவரோடு இணைந்திருப்பது. எப்போதும் அவரோடு இணைந்திருக்க வேண்டும். கிளையானது தினமும் ஒரு மணி நேரம் கொடியில் இணைந்திருந்து விட்டுஇ பின்பு வெளியே போய்இ பின்பு மீண்டும் ஒட்டிக் கொள்வதில்லை. வாரம் ஒரு நாள் ஆலயம் சென்று விட்டு மற்ற நாட்கள் இறைவனை விட்டு அகன்று இருப்பதில் அர்த்தமில்லை.
நமது வாழ்க்கையும், இயேசுவோடு எப்போதுமே இணைந்திருக்க வேண்டும். அப்போது தான் அவர் விரும்பும் செயல்கள் நம்மில் நிறைவேறும்.

6. கர்வம் தவிர்த்தல்

அன்பின் செயல்களைச் செய்யும் போது பிறருடைய பாராட்டுக்காகவோ, அங்கீகாரத்துக்காகவோ அல்லது வேறு எந்த பிரதி பலனுக்காகவோ செய்தால் அதனால் பயன் ஏதும் இல்லை. எல்லாவற்றையும் மறைவாய் செய்ய வேண்டும் என்பதே இயேசு சொல்லும் பாடம்.
பிறருக்கு உதவுகிறாயா ? உன் வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாமல் இருக்கட்டும். செபம் செய்கிறாயா ? தனி அறையில் போய் செபம் செய். விரதம் இருக்கிறாயா ? முகத்தில் அதன் சாயல் எதையும் பூசாதே. இவையெல்லாம் உனக்கும் கடவுளுக்குமான உறவு. மனிதரின் பெருமைக்காய் எதையும் செய்யாதே. மனிதரின் பாராட்டு வேண்டுமென்றால் இறைவனின் பாராட்டு கிடைக்காது என்றார் இயேசு.
கர்வம் கொண்டதால் லூசிபர் எனும் தலைமை தேவதூதன் சாத்தானாய் மாறினான். தாழ்மை கொண்டதால் தொழுவம் பிறந்த குழந்தை மீட்பராக மாறினார். கர்வம் தவிர்ப்பது கற்க வேண்டிய கட்டாய பாடம்.

7. தூயஆவி பெறுதல்

தூய ஆவி இயேசுவின் மரணத்துக்குப் நமக்கு அருளப்பட்டார். அவர் மூவொரு இறைவனின் மூன்றாம் நபர். ஆதி முதல் இருப்பவர். இயேசுவின் மரணத்தின் மூலம் வானுக்கும் பூமிக்கும் இடையேயான இடைவெளியை தூய ஆவியானவர் மூலம் இணைக்கும் அற்புத அனுபவம் நமக்குக் கிடைத்திருக்கிறது.
தூய ஆவியானவரை இதயத்தில் ஏற்றுக் கொள்ள, பாவத்தை அறிக்கையிட்டு இயேசுவிடம் மன்னிப்புக் கேட்பது முதல் நிலை. தூய ஆவியானவரே என் வழிகாட்டியாய் வாரும் என அழைப்பது இரண்டாம் நிலை.
தூய ஆவியானவர் நம்முள் இருக்கும் போது நமது செயல்களை அவர் நெறிப்படுத்துவார். நமது ஒவ்வொரு செயலின் போதும் மனசாட்சியைப் போல தூய ஆவியானவர் நமக்கு சரியான பாதையை உணர்த்துவார்.

8 மீட்பை அறிதல்

விண்ணக வாழ்க்கையும்இ பாவ வாழ்க்கையும் ஒன்றுக்கொன்று முரணானவை. எப்படி பகலும் இரவும் இணைய முடியாதோ அப்படியே பாவமும், புனிதமும் இணைய முடியாது. பாவமான வாழ்க்கை வாழ்பவர்கள் விண்ணக வாழ்க்கையில் நுழைய முடியாது.
இயேசுவின் வருகை மீட்பின் அறிவிப்பாய் வந்தது. பாவத்திலிருந்து விடுபடும் வழியை இலவசமாய் வழங்கியது. நானே வழியும், உண்மையும், உயிருமாய் இருக்கிறேன். என்னையன்றி யாரும் தந்தையிடம் வர முடியாது என இயேசு மீட்பின் பாதையை அறிமுகப்படுத்தினார்.
இயேசுவை நம்புதல் மீட்பின் முதல் நிலை. இயேசு வாழ்ந்த வாழ்க்கையை வாழ்தல் அந்த பயணத்தின் உயர்நிலை. இயேசுவின் பிறப்பு மீட்பின் கதவைத் திறந்து வைத்ததுஇ அதுவே பலர் இறையில் இணைய வழிசெய்தது. மீட்பை அணிந்து கொள்வோம்.

9. மகிழ்ச்சி கொள்தல்

இயேசு தந்த மிகப்பெரிய செய்தி "எப்போதும் மகிழ்ச்சியாய் இருங்கள்" எனும் ஆனந்தத்தின் செய்தியே. மகிழ்ச்சி என்பது பொருட்களில் இருக்கிறது என்றும், புகழில் இருக்கிறது என்றும், உலக சாதனைகளில் இருக்கிறது என்றும், சிற்றின்ப தேடல்களில் இருக்கிறது என்றும் உலகம் நமக்குக் கற்பிக்கிறது.
ஆனால் உண்மையான மகிழ்ச்சி என்பது அவற்றில் இல்லை. தூய்மையான வாழ்க்கை வாழ்தலில் இருக்கிறது. பகிர்தலில் இருக்கிறது. இயேசுவின் தலைமையில் நம்மை அர்ப்பணிப்பதில் இருக்கிறது. அன்பை விளம்புவதில் இருக்கிறது. நீதிக்காக பாடுபடுவதில் இருக்கிறது. அந்த உண்மையை நமக்கு விளங்க வைக்கிறது இயேசுவின் பிறப்பு. அதை புரிய வைக்கிறது அவரது போதனைகள்.
நான் தரும் மகிழ்ச்சி உலகம் தரும் மகிழ்ச்சி போன்றதல்ல என்கிறார் இயேசு. உலக மகிழ்ச்சி ஈசல் போல முடிவது, இறைவன் தரும் மகிழ்ச்சியோ முடி வில்லாதது.

10 சரியானதைத் தேர்ந்தெடுத்தல்

நமது வாழ்க்கை நமது முடிவுகளின் கூட்டுத் தொகை. நாம் சரியான முடிவுகளை எடுக்கும் போது நமது பயணம் சரியான இலக்கை சென்றடையும். தவறான முடிவுகளை எடுத்தால் சேருமிடம் தவறாய் இருக்கும்.

உதாரணமாக, உலக செல்வமா ? விண்ணக செல்வமா எனும் கேள்விக்கு உலக செல்வம் என்று நாம் தேர்ந்தெடுத்தால் நமது ஆன்மீக வாழ்க்கை வலுவிழக்கும். இப்படி பல விஷயங்கள் நமக்கு முன்னால் வந்து பல்லிளிக்கையில் எதை தேர்ந்தெடுக்கிறோம் ?

**பொய் சொல்லவா உண்மை சொல்லவா ?**
**கோபத்தில் கத்தவா அமைதி காக்கவா ?**
**சபலம் கொள்ளவா விலக்கவா ?**
**வரி செலுத்தவா ஏய்க்கவா ?**
**அலுவலக பொருளை எடுக்கவா வேண்டாமா ?**
**இப்படி நாள் தோறும் எழும் கேள்விகளுக்கு**
**நீங்கள் ஆன்மீக வெளிச்சத்தில்**
**முடிவெடுத்தால் உங்களுக்கு**
**விண்ணகம் வாய்க்கும்.**

இந்த சிந்தனைகளை மனதில் கொள்வோம். கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாடுவோம். இறைமகன் இயேசு அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

விழா நாட்கள் .... மனிதம் விழா நாட்களாய்
யாரும் அழா நாட்களாய் ஜொலிக்கட்டும்.




Dr. IN



கை நடுக்கம்
கால் நடுக்கம்
விரல் நடுக்கம்

# நடுக்கம் என்றால் என்ன?

## Parkinson's disease

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

பனி சூழ்ந்த போதிட்ட கடும் குளிரில் உடல் நடுங்குவதைக் கூறலாம். அதேபோல சில காய்ச்சல்களும் நடுக்கத்துடன் வருவதுண்டு. மலேரியா சிறுநீரத் தொற்று, செலுலைடிஸ் போன்றவை அதற்கு உதாரணங்களாகும். இந்த வகை நடுக்கத்தை ஆங்கிலத்தில் shivering என்பார்கள். பயத்தினால் நடுங்குவது மற்றொன்று. இவற்றைத் தவிர மற்றொரு நடுக்கமும் உண்டு. விரல்களும் கைகளும் நடுங்குவது. கோப்பை பிடித்தால் கிடுகிடுவென நடுங்கி தேநீர் தரையில் சிந்தும, சேவ் செய்யும்போது கை நடுங்கி சொக்கையை ரணமாக்கிவிடும், சமையலறையில் பாட்டியின் கை நடுங்கி பாத்திரங்கள் பொத் பொத்தென விழுந்து நொருங்கும்.
பொதுவாக வயதானவர்களில் கண்டிருப்பீர்கள். சில நோய்களாலும் வருவதுண்டு. மருத்துவத்திட்ட tremors என்பார்கள். ஒருவரது விருப்பின்றி தாமாகவே உடலின் சில உறுப்புகள் நடுங்குவதை அவ்வாறு கூறலாம். பொதுவாக விரல்களில் ஏற்படும். வயதானவர்களிலும் நடுத்தர வயதினரிடையேயும் அதிகம் காணப்படும் என்றபோதிலும் எந்த வயதிலும் ஏற்பட வாய்ப்புண்டு. விரல்களில் மாத்திரமின்றி கைகள், தலை முகம் உதடுகள் குரல்வளை உடல் என எங்கும் ஏற்பட வாய்ப்புண்டு.

ஒருவர் தான் அதைச் செய்ய வேண்டும் என்று எண்ணாதபோது அதாவது சுயவிருப்பின்றி அவரது முயற்சியுமின்றி எதிர்பாராது ஏற்படுவதே இத்தகைய நடுக்கம் ஆகும். தசைகளின் அசைவியக்கத்தை கட்டுப்படுத்தும் மூளையும் நரம்பு மண்டலமும்தான் இதற்குக் காரணமாகும்.

மூன்று முக்கிய வகைகள் உண்டு. முதலாவது வகை ஒருவர் எதுவும் செய்யாது வாழாதிருக்கும்போது ஏற்படும் நடுக்கமாகும் இதை resting tremors என சொல்லுவார்கள். அத்தகைய நடுக்கம் அவர் ஏதாவது செய்ய முனையும்போது தற்காலிகமாகத் தணிவதுண்டு.

சாதாரணமாக கை நடுக்கம் உள்ள ஒருவர் எழுத முனையும்போது அல்லது ஒரு பொருளைப் பற்ற முயலும்போது இத்தகைய நடுக்கம் தணியும். இதற்கு முக்கிய உதாரணம் பார்க்கின்சன் (Parkinson's disease) நோயாகும்.

இந்நோயின்போது அவரது இயக்கம் மெதுவாவதுடன் நடையும் தளும்பலாக இருக்கும். சில ஈரல் நோய்கள், நடுமூளையில் பக்கவாதம் போன்றவை ஏனைய காரணங்களாகும். வேறு சில நடுக்கங்கள் ஒருவர் ஏதாவது செய்ய முனையும்போது மோசமாகும்.
இதை Intention tremors என்பார்கள். உதாரணமாக ஒரு பொருளைப் பற்ற முனையும்போது அல்லது எழுத முனையும்போது நடுக்கம் மோசமாகும். மூளையின் செரிபடலம் பகுதியில் ஏற்படும் நோய்களால் இவை ஏற்படும்.
இன்னும் சில நடுக்கங்கள் எந்நேரமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். Action tremors என்பார்கள். இவற்றில் சில ஏதாவது ஒரு புறத்தில் மட்டும் இருப்பதுண்டு. உதாரணமாக இடது கை நடுங்கும் ஆனால் வலது பக்கத்தில் எதுவும் இருக்காது.
நடுக்கங்களில் பல காரணம் சொல்ல முடியாதவை ஆகும். இவற்றில் பல பரம்பரை பரம்பரையாக வருவதுண்டு. காரணம் சொல்ல முடியாத நடுக்கங்களில் பல 65 வயதிற்கு பின்னரே ஆரம்பிக்கும்.ஆயினும் பரம்பரையில் தோன்றுபவை நடுத்தர வயதிலேயே தோன்றுவதுண்டு. பெற்றோரில் ஒருவருக்கு இருந்தாலே பிள்ளைகளுக்கு வர வாய்ப்புண்டு. ஆனால் எல்லாப் பிள்ளைகளுக்கும் வரும் என்றில்லை.

கை நடுக்கம் மட்டுமின்றி தலைஆடுவது குரல் நடுங்குவது போன்றவையும் பரம்பரையில் வரலாம்.
மருந்துகளால் நடுக்கம் "எனக்கு நேற்றிலிருந்து கை நடுங்குகிறது" என ஒரு நோயாளி சொன்னார். திடீரென ஏன் ஏற்பட்டது?
"ஏதாவது மருந்துகள் புதிதாக உபயோகிக்க ஆரம்பித்தீர்களா" எனக் கேட்டபோது "எனக்கு ஒரு வருத்தமும் இல்லை" என்றவர் சற்று யோசித்துவிட்டு 'இருமல் சிரப் ஒன்று குடித்தனான்' என்றார். ஆம் பல மருந்துகள் நடுக்கங்களுக்கு காரணமாகின்றன.
ஆஸ்த்மா நோய்க்கு உபயோகிக்கும் பல மருந்துகள் காரணமாகலாம். Terbutaline. Salbutamol, Theophylline போன்றவை முக்கியமானவை. இம் மருந்துகள் சுவாசக் குழாயை
விரிவுபடுத்தி சளி இலகுவாக வெளியேறுவதற்கு உதவுகின்றன. இதனால் பல இருமல் சிரப் மருந்துகளில் குறைந்த அளவில் கலந்துள்ளன.
ஸ்ரோயிட் வகை மருந்துகள் (egPrednisolone, betamethasone) பலவகையாகும். இவை பல வகைநோய்களுக்கும் உபயோகிக்கப் படுவதுண்டு. இவையும் நடுக்கத்தை ஏற்படுத்தலாம் மருத்துவ ஆலோசனையின்றி தானாகவே மருந்தை வாங்கிக் குடித்ததால் அவரைப் போல பலருக்கு நடுக்கம் ஏற்படுவதுண்டு.

வலிப்பு நோய்க்கு உபயோகிக்கும் Vaborate, மனநோய்களுக்கு உபயோகிக்கும் lithium, மனச்சோர்விற்கு உபயோகிக்கும் பல மருந்துகள், சில அன்ரிபயோடிக் மற்றும் அன்ரி வைரஸ் மருந்துகளும் நடுக்கத்தை ஏற்படுத்துவதுண்டு.
பார்க்கின்சன் நோய்க்கு நடுக்கம் ஏற்படும் என்றேன். அதேபோல அந்நோய்க்கு உபயோகிக்கும் Levodopa மருந்தாலும் ஏற்படலாம்.

தைரொக்சின் மருந்தின் அளவு கூடினாலும் வரலாம். தைரொயிட் சுரப்பி அதிகமாக வேலை செய்யும் நோயிலும் நடுக்கம் வருதுண்டு. இன்னும் பல மருந்துகளால் நடுக்கம் ஏற்படலாம் என்பதால் ஒருவர் தனக்கு புதிதாக நடுக்க நோய் ஏற்பட்டு மருத்துவரிடம் செல்ல நேர்ந்தால் தான் உபயோகிக்கும் அனைத்து மருந்துகளின் பட்டியலை மருத்துவரிடம் கொடுத்து ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

### போதையும் நடுக்கமும்

போதைப் பொருட்கள் நடுக்கத்தை ஏற்படுத்தலாம். முக்கியமாக மதுபானமும் புகைத்தலும் நடுக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். அதேபோல போதையில் மூழ்கியவர் அதைத் திடீரென நிறுத்தினாலும் நடுக்கம் ஏற்படலாம். நிறுத்தும்போது ஏற்படும் நடுக்கம் தற்காலிகமானது சில நாட்களில் தணிந்துவிடும். சிகிச்சை நடுக்கம் ஏற்பட்டால் அதற்கான அடிப்படைக் காரணத்தை கண்டறிய வேண்டும். எனவே மருத்துவ ஆலாசனை பெறுவது அவசியம். பெரும்பாலான காரணங்களை விரிவாகவும் தெளிவாகவும் பேசுவதன் மூலம் கண்டறிய முடியும்.

இருந்தபோதும் இரத்தப் பரிசோதனைகள் மற்றும் CT scan MRI போன்றவையும் தேவைப்படலாம். சிகிச்சையின் அடிப்படை காரணத்தை துல்லியமாகக்கண்டறிவதே. மருந்துகள் காரணமாயின் அவற்றை இனங்கண்டு மருத்துவ ஆலோசனையுடன் வேறு மருந்துகளை உபயோகிக்க வேண்டும். போதைப் பொருள்கள் காரணமாயின் அவற்றை நிறுத்த வேண்டும். மது சற்று அருந்தினால் சிலருக்கு நடுக்கம் குறையும். ஆயினும் அவ்வாறு குடிப்பது ஆபத்தானது. அவர்கள் அமதுவிற்கு அடிமையாகி சீரழிந்து போவது பெரும் பிரச்சனை ஆகும். நடுக்கம் உள்ளவர்கள் கோப்பி தேநீர் கொக்கோ போன்ற பானங்கள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.

மனப்பதற்றமும் காரணம் என்பதால் அதைத் தணிக்க முயலவேண்டும். அரிதாக சத்திர சிகிச்சையும் தேவைப்படலாம்.

நன்றி : தமிழர் தகவல் -கனடா



T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

# அமானுஷ்யத்தின் அறிவியல் விஞ்ஞானம்



DJ வினோ

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி" என்ற வாக்கியம் எத்தனையோ அறிவியல் உண்மைகளை சொல்லி நிக்கின்றது. ஆனால் தமிழன் தற்பெருமை பேசாமட்டுமே இந்த வாக்கியத்தை உருவாக்கினார்கள் என்று தமிழை முழுமையாகப் படிக்காதோர் நினைத்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் பௌதீகத்தின் அடிப்படையே அங்குதான் மறைத்து வைக்கப் பட்டுள்ளது. இந்த உலகம் எவ்வாறு உருவானது என்று சொல்ல முனைவதே அந்த வரிகளின் நோக்கம்.



கல் தோன்றி (சூரியனில் இருந்து வெடித்து சிதறிய நெருப்புக்கு குளம் புகள், கொதிநிலை குறைந்து கல்லாக மாறின). கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே, ( கல்லில் இருந்து இயற்க்கை உபாதைகளால் அதன் பின் தான் மண் தோன்றியது) என்ற விஞ்ஞான உண்மை தான் இந்த வாக்கியத்தின் நோக்கம்.

அவ்வாறு இயற்கை உபாதைகள் நடக்கும் போதே உயிரினங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன.

அவ்வாறு தோன்றிய உயிரினம் என்பதை முதலில் சொன்னவர்கள் தமிழர்களே, ஆகவே கல் தோன்றி மண் தோன்றும் இடைப்பட்ட காலத்திலேயே தோன்றிய மூத்த குடி தமிழ் குடி என்று கூற வருகின்றது அந்த வாக்கியம்.

இவ்வாறு பெரிய வாக்கியத்தில் உள்ள உண்மையை விளங்கி கொள்ளவே போதிய அளவு அறிவு வளர்ச்சி காணாமல் உள்ளது எமக்கு. காரணம் என்னவென்றால், குழந்தையாக உள்ளபோது அறிவுத்தன்மை அதிகமாக இருக்கும் ஆனால் அதை அடுத்த கணமே மறக்கும் தன்மையும் அதிகமாக இருக்கும், வாலிப வயது வரும் பொது அறிவுத் தன்மை அதிகரிக்கும் அதே கணம் மறதியும் குறைவடையும், அவ்வாறே முதுமைப் பருவம் கொண்டால் மறதி அதிகரிக்கும் அறிவித்த தன்மை அருகிப் போகும். அது போன்று ஆரம்பத்தில் உருவான மொழி என்பதால் அதில் எம் முன்னோர்கள் காண்பித்த பல அறிவியல் வித்தைகள் புரிந்து கொள்ளுமளவு அறிவு ஞானமோ மொழிப் புரிதலோ இல்லாமல் போய்க் கொண்டுள்ளது.

அமானுஷ்யம் என்றவுடன் அடிமனதில் ஒருவகை ஆழ்ந்த பயம் உருவாகின்றது காரணம் எம்மையறியாமல் நடக்கும் பல மாற்றங்களை அமானுஷ்யம் என்று அழைப்பது வழக்கம். உதாரணமாக மாலை நேரங்களில் இரவுப் பொழுதிலோ ஊருக்கு வெளிப்புறமாக கழிவுகள் கொட்டப்படும் சதுப்பு நிலப்பகுதிகளில் நடந்து போகும் பொழுது சில இடங்களில் நிலத்துள் இருந்து அமானுஷ்ய நெருப்பு வெளிவருவதை பார்க்கக் கூடியதாக இருக்கும் உடனே நெருப்பைக் கண்டு பயங்கொள்ளும் மனிதன் ஓடத் தொடங்குவான் ஓடும் மனிதனை அந்த அமானுஷ்யம் துரத்தத் தொடங்கும்.

இது ஒரு அமானுஷ்யம் என்றால்,சில வீடுகளில் இரவு நேரங்களில் பொருட்கள் கீழே விழும் கட்டில் அலுமாரி போன்றவைகளில் நடுக்கம் காணப்படும். சில மனிதர்கள் பிறர் மனதில் நினைப்பதை கண்டு பிடித்து அதற்கு இணங்க நடந்து கொள்வார்கள் அவ்வாறு செய்வோர்களும் அமானுஷ்யத்தை நீக்குவோர் என்ற போர்வையில் திரியும் அமானுஷ மனிதர்களாகும்.இவ்வாறு ஆயிரக் கணக்கான அமானுஷ்யங்கள் அகிலத்தில் உருவாகி மறைகின்றன. ஆனால் இவற்றுக்குப் பின்னால் எல்லாம் எம் முகக் கண்ணுக்கும் மனக்கண்ணுக்கும் புலப்படாத அகக்கண்ணுக்கு மட்டும் பல அந்த ஆய்விற்குப் பின் புலப்படக் கூடிய அதீத விஞ்ஞானம் ஒழிந்துள்ளது. முகக் கண் என்றால் பார்த்ததை அப்படியே மூளையில் பதிய வைப்பது முகக் கண்ணின் வேலை, மனக் கண் என்றால் மூளையில் மீண்டும் மீண்டும் பதிந்ததை ஏற்றுக் கொண்டு அதை மூளைக்கு அடுத்தபடியாக உள்ள மூளிப் பகுதியில் பதிய வைத்து அதை தன்னிச்சையாக நம்பத் தொடங்குதல் அதுவே மனக் கண்ணின் வேலை. உதாரணமாக ஒரு மனிதனோ மிருகமோ தினமும் காலை 7 மணிக்கு சரியாக சாப்பிட்டு 8 மணிக்கு கழிவகற்றி வந்தால் ஒரு குறிப்பிட்ட கால இடைவேளையின் பின் ( மனக் கண்ணில் பதிவடையும் காலப் பகுதி) 7 மணி ஆகிவிட்டது என்றால் உணவு உண்ணாவிடினும் வாயில் உமிழ் நீர் உருவாவதைக் காணலாம். மனிதன் அதைக் கட்டுப் படுத்தும் திறன் கொண்டவன் என்பதால் மிருகங்களை வைத்து இந்தப் பரிசோதனையைச் செய்து பல விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

தொடர்ச்சி 24ம் பக்கம்...



# இவ்வருடம் இமயத்தைத் தொட்டுவிட வேண்டும்



2017

கௌசி

ஆண்டுதோறும் புத்தம் புதிய முதலாம் நாள் அழகழகாய் வான வேடிக்கைகள், வகைவகையாய் வாழ்த்தொலிகள், ஆலய தரிசனங்கள், அறுசுவை உணவுடன் அற்புத உணவுச் சமையல்கள், இவ்வருடம் இமயத்தைத் தொட்டுவிட வேண்டும் என்ற கங்கணங்கள் என்று ஒவ்வொரு வருடத்தின் முதலாம் நாள் மக்கள் குதூகலத்தில் பூரித்து நிற்பார்கள். புதிய ஆண்டை எல்லோரும் மன மகிழ்வுடனேயே வரவேற்கின்றார்கள். இவ்வாண்டில் இவ்வாறான தீர்மானங்களை எடுத்துவிட வேண்டும் என்று முனைந்து நிற்கின்றார்கள். ஆனால், அடுத்தநாள் வழமைபோல் வாழ்க்கையை ஆரம்பித்துவிடுகின்றார்கள்.

இப் பூமிப் பந்திலே நாம் எம்மை அறியாமலே இராட்டினம் போல் சுழன்று கொண்டும்இ வாழ்ந்து கொண்டும் இருக்கின்றோம். எம்மைத் தாங்கி நிற்கும் இப்பூமி தோன்றியது 13.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரேதான். அண்டப்பெருவெடிப்பில் (Bigbang) சிதறிய நட்சத்திரக் கூட்டத்திலே ஒன்றுதான் சூரியன். அச்சூரியனிலிருந்து 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் வெடித்துச் சிதறிய கோள்களில் ஒன்றுதானே நம்மைத் தாங்கி நிற்கும் இப்பூமிப்பந்து. தாயை விட்டகலாது 100.000 கி.மீ வேகத்தில் தாயாகிய சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்கும் இப்பூமியின் வயதில் ஒரு அணுவளவாக எம்முடைய வாழ்நாளை எண்ணமுடியுமா! உயிரினங்கள் மெல்ல மெல்ல அமீபாவில் ஆரம்பித்து அழகான எம் தோற்றம் அடைவதற்கு எத்தனை கோடி ஆண்டுகள் எடுத்திருக்கும் என்று நம்புகின்றீர்கள்! நெருப்பு உருண்டையான பூமி இன்றைய மாற்றம் காண 400 கோடி ஆண்டுகள் ஆயின என் ஆராய்வு கூறுகிறது. சுற்றிச்சுழலும் இராட்டினத்திலே 365 நாள்களை நாம் எப்படிக் கடக்கின்றோம் என்று அறியாமலே நாம் அடுத்த ஆண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொள்கின்றோம். அதற்கிடையில் எத்தனை மாற்றங்கள்இ எத்தனை கண்டுபிடிப்புக்கள்இ எத்தனை இழப்புக்கள்இ எத்தனை புது வருகைகள். உலகத்தின் பல விடயங்கள் எம்மால் விளக்க முடியாது. ஆச்சரியம் ஆனால்இ உண்மை என்பதுபோல் வாழ்க்கையில் எத்தனையோ விடயங்கள் நடந்து பின் மறக்கப்பட்டுப் போகின்றன

உலகின் பிறப்புகள் அத்தனையும் ஏதோ வகையில் தனிச் சிறப்புக்களைப் பெற்றிருக்கின்றன. அவற்றையெல்லாம் எம் கண்கள் வியப்புடன் நோக்குவதில்லை. எமக்குள்ள திறமைகளை மட்டும் வியந்து வாய் பிளக்கின்றோம். அடுத்த முயற்சிக்கு நாள்குறித்து புதுவருடம் பிறக்கட்டும் என்று சபதம் இடுகின்றோம். ஒவ்வொரு மனிதனும் இந்நாளை ஒரு கணக்காக வைத்து இன்றிலிருந்து ஒரு காரியத்தைத் தொடங்குவதாகச் சவால் எடுக்கின்றார்கள். நல்ல காரியத்தை எடுப்பதற்கு நல்ல நாள் தேவையில்லை. அன்றிலிருந்தே ஆரம்பிப்பதுவே முயற்சி. உலகில் சாதித்த மனிதர்கள் பட்டியலில் முயற்சி என்ற மூலதனத்தை மட்டுமே அவர்கள் கையில் எடுத்தார்கள் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. சாகித்திய அக்கடமி விருது பெற்று தலைசிறந்த நாவல்களையும் திரைப்படங்களையும் தந்து மறைந்த ஜெயகாந்தன் அவர்கள் 5 ஆம் வகுப்பு வரைதான் கல்வி கற்றார். ஒரு ஏழை அமெரிக்கக் குடும்பத்தில் பிறந்து படிக்க லாயக்கில்லை என்று பாடசாலையிலிருந்து துரத்தப்பட்டுஇ இரயில்வண்டி அதிகாரியால் கன்னத்தில் அடி வாங்கி ஒரு பக்கக் கேள்விப்புலனை இழந்தவர்தான் 1300 கண்டுபிடிப்புக்களை உலகுக்கு அறிமுகப்படுத்திய தோமஸ் அல்வா எடிசன் அவர்கள். சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து தந்தையின் மண்வெட்டியில் எழுதிப்படித்தவர் தான் மாவீரன் நெப்போலியன். ஒரு நிமிடத்தில் 2.500 அமெரிக்க டொலர் பெறக்கூடியவர்தான் மைக்ரொஸொப்ற் (Microsoft) உரிமையாளர் பில் கேட்ஸ் அவர்கள். இவ்வாறு உலக வரலாறு சாதித்த மனிதர்கள் பட்டியலில் நாள் குறித்து வெற்றி கண்டவர்களை அறிமுகப்படுத்தவில்லை. நாளும் முயன்று வென்றவர்களைத்தான் அடையாளம் காட்டியுள்ளது.

இன்றுடன் குடிப்பழக்கத்தை விட்டுவிடுவேன் என்பவன்தான் வெற்றி காண்பான். தை ஒன்றில் மதுவை தள்ளிவிடுவேன் என்பவன் தை 5 இல் மதுப்புட்டிலுடன் திரிவான் என்பதே நிச்சயம். விதையிலிருந்து செடி முளைப்பதைப் போல எண்ணத்திலிருந்தே செயல் பிறக்கின்றது. உள்ளத்திலிருந்து எண்ணத்தைப் பிரித்துக் கொண்டால் எளிதில் விடிவு கண்டுவிடலாம். மாற்றம் ஒன்றே மாறாதது என்பது யாவரும் அறிந்த உண்மை. எண்ணங்களை பெரிதாகக் கொண்டிருக்கும் நாம் அது நிறைவேறவில்லையென்றால் அதிலே தொங்கிக் கொண்டிருக்க முடியுமா. அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக நாளும் உழைக்க வேண்டாமா! உறுதி கொண்ட மனம் உச்சத்தைத் தொடவேண்டும். உன்னைத் திருத்து உலகம் திருந்தும் என்னும் சொற்கள் உள்ளத்தில் விழவேண்டும். சுற்றுச் சூழலின் அவதானம் எங்கள் செயல்களைக் கொண்டுசெல்லும். அதன்படி கீழ்குறிப்பிட்டவற்றில் அவதானம் எடுப்போம்.

**குழந்தை:**

வெற்றுக் கடதாசி, பக்கம் இருந்து கிறுக்குபவர்கள் கீறல்களே பதியும் கடதாசி. அக்கீறல்களே அதன் எதிர்காலம். அதனால் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் பேசத்தெரியாத வாழத்தெரியாத அவ் எதிர்கால மாமனிதனுக்காய் அவதானம் எடுங்கள்.

**பெற்றோர்,கணவன் மனைவி:**

தங்கள் வாழ்க்கைக்காக வந்து பிறந்த உங்கள் மகிழ்ச்சியானது தம் சொந்த மகிழ்ச்சியை கொண்டாட வழிவிட்டு, வழிகாட்டி, வழிநோக்குங்கள். அவர்தம் மனவிருட்சம் மகிழ் விருட்ஷமாய் இவ்வாண்டு சிறக்கட்டும்.

ஆண்களே! உங்களை நம்பி தங்கள் சொந்த விருப்புகள் விட்டு, என் குடும்பம் என் கணவன் என் பிள்ளை என வாழவந்த மனைவியின் மனம் அறிந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள். அவள் எதிர்பார்ப்புக்களை முடிந்தவரை முடித்து வைக்க முயற்சி எடுங்கள். திருமணத்தின் முன் அவள் இருந்த நிலை மறக்க திருமணத்தின் பின் அவள் இருக்கும் நிலையை மாற்றி அமையுங்கள். கணவன் ஆக நீங்கள் நடந்து கொள்ளும் முறையிலேயே மனைவி எண்ணப்போக்கு மாற்றம் காணும்.

அதேபோல் தனக்காக ஒரு பாரிய பொறுப்பு இருக்கின்றது என ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து நடந்து கொள்ள சந்தர்ப்பம் அமைவது திருமணத்தின் பின்புதான். எதிர்கால சமுதாயத்தின் ஒரு துளி என் கையிலும் இருக்கின்றது என்னும் எண்ணம் கொண்டு அவதானத்துடன் பொறுமையைத் துணைக்கொண்டு இல்லத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அச்சாணியாய் நடமாட வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமையும் ஒவ்வொரு பலவீனமும் இருக்கின்றது. அனைத்து ஆண்களின் திறமையும் என் கணவனிடம் இருக்க வேண்டும். அனைத்து ஆண்களின் பலவீனத்தில் ஒன்று கூட என் கணவனிடம் இருக்கக் கூடாது என்று நினைத்தல் கூடாது. விட்டுக்கொடுத்தல் என்னும் பண்புடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் . கணவன் குறையை மற்றவர்களிடம் பறைசாற்றக் கூடாது. சின்னச் சின்ன அன்பளிப்புக்கள் அன்புக்குத் துணை ஆகின்றது. கணவனுக்கு நிகரான இடம் பிடிக்க பெண்களே நீங்கள் நடந்துகொள்ளும் முறையைப் பொறுத்தே அமைகின்றது. இவ்வருடம் குடும்பங்களில் அமைதியும் அன்பும் நிறைந் திருக்கட்டும். அதன் மூலம் அகிலம் சிறக்கட்டும்.

சகோதரர்கள்:

ஒரு வயிற்றில் பூத்த மலர்கள் ஒருவருக்கு ஒருவர் துணையாக கணனித் துணை இன்றி வீட்டில் கலந்துரையாடுங்கள். உங்கள் பெற்றோர் ஏங்கும் எதிர்பார்க்கும் அன்பைத்தாருங்கள். உங்கள் வீட்டில் இருந்து உலகு வியக்கும் சாதனை ஒன்றை உருவாக முயற்சி எடுங்கள் அதன் மூலம் இவ் ஆண்டு நல்லாண்டாய் அமையட்டும்.

**நண்பர்கள்:**

உன்னத உறவென்பார்,தவிடும் துணை என்பார் உலகமே மெச்சிடும் தொடர்பாடல் மனிதப்பிறவி என்பார். ஆனால், நீதான் என் நண்பேன்டா என்று சொல்லி மறுமுனையில் நண்பன் சிறப்பை மனதுள் புதைத்துப் புழுங்குவது, அவன் உயர்வை சகிக்க முடியாது போட்டி போடுவது, போன்ற எண்ணங்கள் இன்றி ஒற்றுமையாய் வாழப் பழகிக்கொண்டால் நீங்கள் இணைந்த முயற்சிகள் உலகின் கண்ணைத் திறக்கும் உயர் திறமை இவ்வருடத்தில் புலப்படும்.




# யாழ்ப்பாணத்து வாழ்வியலில் பஞ்சாங்கம்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

## யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்

தொடுகுறி சாத்திரம்




வித்துவசிரோன்மணி கணேசையரைப் பற்றிய ஆய்வில் நாம் ஈடுபட்டிருந்தவேளை புன்னாலைக்கட்டுவன், கட்டுவன், மருதடி விநாயகர் ஆலயச்சூழல் ஆகிய இடங்களுக்குச் சென்றிருந்தபோது பல முதியவர்களை அணுகிக் கணேசையரைப் பற்றி வினாவியபோது, சாதாரண பொதுமக்களிற் பலர் அவரைத் தாம் நேரில் கண்டிருப்பதாகவும் அவரிடம் தான் தாம் பஞ்சாங்கம் பார்க்கச் செல்வதாகவும் நினைத்த காரியம் சித்தியாகுமா எனக் கேட்பதும் வழக்கம் என்றும் கூறினர். படிப்பறிவற்ற கிராமத்து விவசாயிகளுக்கு அவர் தொல்காப்பியக் கடலைக் கடந்தமை எங்கே தெரியப்போகிறது என்று எண்ணிக்கொண்டோம்.

தொடுகுறி சாத்திரம்: இந்த இடத்திலேதான் நினைத்த காரியம் சித்தியாகுமா என்பதற்கும் பஞ்சாங்கத்திற்கும் உள்ள உறவை ஒப்பிட்டு நோக்க வேண்டும். பஞ்சாங்கத்திலே ஸ்ரீ ராமசக்கரம் என்றும் ஆடுடச்சக்கரம் என்றும் இரண்டு விடயங்கள் உண்டு. இவற்றைத் தொடுகுறி சாத்திரம் என்றும் கிராமத்தவர்கள் அழைப்பார்கள்.

ஒரு தீர்மானத்தை எடுக்க முடியாமல் சபலம் ஏற்படும்பொழுது சாதாரண பொதுமக்களுக்குப் பஞ்சாங்கத்திலுள்ள தொடுகுறி சாத்திரமே வழிகாட்டியாக அமையும். தொடுகுறி சாத்திரத்திலே இடம்பெறும் வாசகங்களுக்கும் மக்களின் எதிர்பார்ப்புக்கும் உளவியலுக்கும் நெருங்கிய உறவிருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக ஆடுடச் சக்கர வாசகங்களில் சிலவற்றைச் சுட்டிக்காட்டலாம். சுகமுண்டு, செய்யுந் தொழில் விருத்தியாகும், நினைத்த காரியம் கைகூடும், ஒரு விசயத்தில் துன்பப்படுகிறாய், துயர் நீங்கும் இவ்வாறு 108 வாசகங்கள் இடம்பெற்றுள்ளன. நான்கு, ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் கிராம மக்களிற் பெரும் பாலானவர்கள் தொடுகுறிச் சாத்திரத்தினைப் பஞ்சாங்கம் ஊடாகப் பார்த்தார்கள் என்பதை இன்றைய தலைமுறையினர் அறியமாட்டார்கள்.

ஓரளவுக்குப் படித்தவர்கள் பஞ்சாங்கத்தை வாங்கியதும் மாதகோஷரப் பலனைப் பார்ப்பதுண்டு. தாமும் பார்த்துப் பிறருக்கும் படித்துச் சொல்லுவார்கள். இன்று இந்த வழக்கம் மிக அருகிவிட்டது.

யாழ்ப்பாணத்து விவசாயிகள், தொழிலாளர்கள் தமது தொழில்சார் விடயங்களைத் தீர்மானிப்பதற்குப் பஞ்சாங்கத்தையே பெரிதும் பயன்படுத்தினர். (உதாரணமாக கெற்போட்டம், அக்கினிநாள், அட்டமி, நவமி முதலானவை.)

ஆலய உற்சவ விழாக்கள்: பஞ்சாங்கங்களின் பயன்பாடுகளிலே ஆலய விழாக்கள் பற்றிய விபரங்களை அறிவதும் குறிப்பிடத்தக்கதும் முக்கியத்துவம் வாய்ந்ததும் எனலாம். ஆலய மகோற்சவங்கள், அலங்கார உற்சவங்கள், சங்காபிஷேகம், பொங்கல், திருக்குளிர்த்தி என விசேட விழாக்கள் பற்றிய விபரங்கள் இடம்பெற்றிருக்கும்.

யாழ்ப்பாணச் சமூக மாற்றத்தினைக் கண்டுகொள்ள இந்த ஆலய உற்சவங்கள் பற்றிய விபரம் பெரிதும் உதவுகின்றது. இற்றைக்கு மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன் பஞ்சாங்கத்திலே இடம்பெறாத பல ஆலயங்களின் உற்சவ விபரங்கள் தற்போதைய பஞ்சாங்கங்களிலே இடம்பெற்றுள்ளன. சிறிய கோயில்களாக இருந்தவை திருப்பணிகள் செய்யப்பட்டு விழாக்கள் செய்யப்படுகின்றன. அவை பஞ்சாங்கங்களிலும் இடம் பெறவேண்டும் என்பதிலே ஆலய உரிமையாளர்கள் (சபையினர்) பெரிதும் விரும்புகின்றனர்.

பொங்கல், குளிர்த்தி என முன்னர் குறிப்பிட்ட சில ஆலயங்கள் இப்போது உற்சவம், மகோற்சவம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது. இவை யாழ்ப்பாணச் சமூக அடுக்கமைவில் ஏற்பட்ட மாற்றங்களைச் சுட்டுவதாகக் கருதலாம். கிராமிய வழிபாடுகள் ஆகம வழிபாட்டுக்குள் உள்வாங்கப்பட்டமையைப் பஞ்சாங்கங்களினூடு கண்டுகொள்ளலாம்.

பஞ்சாங்கத்திலே குளிர்த்தி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பேச்சு வழக்கிலே குளுத்தி என்றே வழங்குவர். கிராமிய வழிபாட்டு மரபுகள் பஞ்சாங்கங்களிலே பெருமளவுக்குப் பதிவாகவில்லை.

அண்மைக் காலமாக இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்று ஐரோப்பிய நாடுகளிலும் கனடா, அமெரிக்கா முதலான நாடுகளிலும் கோயிலமைத்து விழாக்கள் நடத்தி வருகின்றனர். அந்தந்த நாட்டுக் காலநேரக் கணிப்புப்படி புலம்பெயர் மக்களின் கோயில் விழாக்கள் பற்றிய விபரங்கள் பஞ்சாங்கங்களிலே இடம்பெற்றுள்ளன. உதாரணமாக அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயம் (பாரிஸ் - பிரான்ஸ்), சித்தி விநாயகர் ஆலயம் (பிரான்ஸ்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறே கனடா, ஜேர்மனி, நியூசிலாந்து முதலான இடங்களிலுள்ள சைவாலயங்களின் கிரியா விபரங்களையும் பஞ்சாங்கம் கூறுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே சிங்கப்பூர் முதலான இடங்களிலுள்ள சைவ ஆலயங்களின் உற்சவ விபரங்கள் பஞ்சாங்கத்திலே இடம்பெற்றமை குறிப்பிடக்கூடியது.

நாம எழுத்து: பஞ்சாங்கத்தின் குறிப்பிடக்கூடிய அம்சங்களில் ஒன்றாக நாம எழுத்து என்பதையும் கொள்ளலாம். குழந்தை பிறந்ததும் அக்குழந்தைக்குப் பெயர் வைக்கும்பொழுது இன்ன எழுத்தில் அமையவேண்டுமெனக் குறிப்பிட்டிருப்பர். ஆனால் அவை பெரும்பாலும் வடமொழி ஒலியமைப்புக்கு உரியனவாதலினால் அந்த எழுத்துக்களிலே இக்காலத்தில் பெயர் வைக்கும் வழக்கம் அருகிவிட்டது. எண் சாத்திரத்தையே பெரும்பாலானோர் கடைப்பிடிக்கின்றனர். மக்கள் வாழ்விலே பிரதான பங்கை வகிக்கும் பஞ்சாங்கத்திற்கும் ஜோதிடத்திற்கும் உள்ள உறவு தனியே ஆராயப்பட வேண்டியது.

நன்றி: நூல் யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்

தொடரும்







# யேர்மனியின் ஒரு தலைவர் புகைத்தல் மன்னனாகத் திகழ்ந்துள்ளார்!

**வ.சிவராஜா**

புகைத்தல் என்பது மனிதர்களிடையே காணப்படும் ஒரு கெட்ட பழக்கம் என்றுதான் கூறப்படுகின்றது. இந்தப்புகைத்தல் பழக்கத்தை உலகிலுள்ள பெரும்பான்மையான மக்கள் கொண்டிருக்கிறார்கள். புகைத்தல் பழக்கத்தால் மனித ஆயுள் குறைவடைவதாக வைத்திய வட்டாரங்கள் எப்படி எப்படி எல்லாம் எடுத்துக் கூறியும் மனிதன் விட்டானா. "சொல்லுவார் சொல்லட்டும் நாம் செய்வதை விடாமல் செய்வோம்" அதாவது நாம் விடாமல் புகைத்துக்கொண்டே இருப்போம் என்று கூறுபவர்களிடம் இந்தப் புகைத்தல் பழக்கத்தை ஒழிக்க முடியுமா?..

இன்றைய காலகட்டத்தில் மது அருந்துபவர்கள், போதைவஸ்த்து பாவிப்பவர்கள், புகைப்பவர்கள், பாலியல் நடவடிக்கைகள், கொலை, கொள்ளைகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் பல்வேறு குற்றச்செயல்கள் பலமடங்கு அதிகரித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் புள்ளி விபரங்கள் எடுத்துக்கூறுகின்றன. சிறியோர், இளையோர், முதியோர் என்ற வேறுபாடுகள் இல்லாமல் இந்தக் குற்றச் செயல்களைப்புரிந்து தாமும் கெட்டு மற்றவர்களையும் கெடப்பண்ணி வாழ்வைச் சீரழிக்கும் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

இங்கு இந்தக்கட்டுரையில் ஒரு புகைத்தல் மன்னனைப்பற்றியே குறிப்பிடுகிறேன். ஐரோப்பாவில் சகல வளங்களிலும் சிறந்து விளங்கும் நாடு ஜேர்மனியாகும். சனத்தொகையில் பெரியநாடு மட்டுமல்ல, பணம், பொருள், ஏற்றுமதி, வர்த்தகம், அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற பல விடையங்களில் ஏன் அகதிகளை பராமரிக்கும் நாடுகளில்கூட முதன்மை நாடாக இது விளங்குகின்றது. இந்த நாட்டின் அதிஉயர், அதிகாரம்மிக்க அரசியல்ப் பதவிதான் ஜேர்மனிய கான்சிலர் பதவியாகும். இந்தப் பதவியை வகித்தவர்தான் கெல்முட் சிமித் (Helmut Schmidt) இவர் இந்தப் பதவியை 1974 தொடக்கம் 1982 ஆண்டுவரை வகித்திருக்கிறார். 23.12.1918ம் தேதியில் பிறந்த இவர் 10.11.2015ம் தேதி தனது 97வது வயதில் காலமானார். இவர் காலமாகி தற்போது ஓராண்டு முடிவடைந்துள்ளது. முன்னைய பின்னைய தலைவர்களான கெல்மட் கோல் (Helmut Kohl) வில்லி பிறண்ட் (Willy Brandt) கேகாட் சுரொடர் (Gerhard Schroder)போன்ற தலைவர்களைப் போல் பிரபலமானவராகத் திகழ்ந்தவர்தான் இந்தப் புகைத்தல் மன்னன்.

மாநில அரசிலும் மத்திய அரசிலும் அதி உயர் பதவிகளை வகித்த இந்தப் புகைத்தல் மன்னன்தான் இந்தக்கட்டுரையின் கதாபாத்திரமானவர். 15 வயதில் புகைத்தலை ஆரம்பித்தவர். அவர் 97 வயதில் இறக்கும்வரை புகைத்துத் தள்ளியுள்ளார். சுமார் 82 வருடங்கள் புகைத்துச் சாதனை படைத்திருக்கிறார்.

**40 சிகரட்டுக்கள்**

இவர் தினமும் சுமார் 40 சிகரட்டுக்களை புகைத்து மகிழ்ந்திருக்கிறார் என்றால் பாருங்கோவன். சாதாரணமாகப் பெரிய பணக்காரர்கள்கூட ஒரு நாளைக்கு 10 12 சிகரட்டுக்களைப் புகைக்க வறியவர்கள் 2 - 3 சிகரட்டைப் புகைக்கிறார்கள். இன்னும் பல லட்சம் பேர் பீடி, புகையிலை, சுருட்டு, வெள்ளைச்சுருட்டு, கஞ்சா போன்றவற்றையும் புகைத்து மகிழ்கிறார்கள். ஆனால் இவரோ தினமும் சராசரியாக 40 சிகரட்டுகளை புகைத்துத்தள்ளியது வியப்பாகத்தான் உள்ளது.

**14.600 சிகரட்டுகள்**

தொடர் புகைத்தல் பழக்கமுள்ள இவர் ஒரு வருடத்தில் (40x365) சுமார் 14.600 சிகரட்டுக்களை ஊதிப்புகைவிட்டு மகிழ்ந்திருக்கிறார். ஆப்போ 12.00.000 (லட்சம்) சிகரட்டுகள்

இவர் 97வயதுவரை வாழ்ந்திருக்கிறார். அதாவது 15 வயதில் புகைத்தலை ஆரம்பித்தவர் என்றால் சுமார் 82 ஆண்டுகள் விடாது புகைத்தலை மேற்கொண்டிருக்கிறார். இவர் தனது வாழ்ந்த காலத்தில் சுமார் 1.2 மிலியன் (12 லட்சம்) சிகரட்டுகளைப் புகைத்துச் சாதனை படைத்திருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

3.51.000 யூரோ

சுமார் 82 ஆண்டுகள் புகைத்தல் பழக்கத்தைக் கொண்டிருந்த இவருக்கு இன்றைய கணக்கின்படி பார்த்தால் இதனால் 3லட்சத்து 51 ஆயிரம் யூரோ பணத்தை புகைத்தலுக்குச் செலவழித்துள்ளார் என்றால் யோசித்துப் பாருங்கள். இவ்வளவு பெரிய தொகைப் பணத்தை எரித்துச் சாம்பலாக்கியிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும். புகைத்தல் மணம் தாங்கமுடியாமல் இவரது மனைவி பிள்ளைகள், சுற்றத்தார், அரசியல் வாதிகள் போன்றோர் என்ன பாடுபட்டிருப்பார்கள்.

7.1 கிலோகிராம் நிக்கடின்

(Nikotin) நிக்கடின் எனப்படும் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வேதியல் நஞ்சுப்பொருள் இவரின் சுவாசப்பைக்குள் சென்றிருக்கிறது. அவர் நோயுற்ற பொழுதுகளில் எல்லாம் வைத்தியர்களின் திறமையால் அவை அகற்றப்பட்ட போதும் அவர் புகைத்தல் பழக்கத்தை விடவே இல்லை. அப்படி இதற்கு அடிமையாகி இருந்தாலும் 97 வயது வரை உயிர் வாழ்ந்திருக்கிறார் என்பதும் அதிசயம்தான். இறுதியாகப் புகைத்துக் கொண்டே 10.11.2015ம் தேதி காலமானார். தற்போது ஒருவருடம் ஓடிவிட்டது. இருப்பினும் இவரின் அரசியல் சமூக வாழ்வு என்பது ஜேர்மனிய மக்களிடையே நன்மதிப்புப் பெற்ற தலைவராகவே போற்றப்படுகிறார்.

**சிகரட் பிரியஉகளே!...**

இக்கட்டுரையை வாசித்துவிட்டு நாங்களும் நீண்ட காலம் புகைத்து நீண்டகாலம் உயிர் வாழலாம் என்று ஒருவரும் எண்ணிவிடாதீர்கள். யாராவது பல லட்சம் பேருக்கு ஒருவர் இப்படி வாழ்ந்திருக்கலாம். ஆனால் புகைத்தல், மது பாவனை, போதைப்பொருள் பாவனை, பாலியல் போன்ற தீ பழக்கங்களையுடையவர்கள் லட்சக்கணக்கானோர் வயது முந்தியே இறப்பைத் தழுவிக்கொள்கிறார்கள் என்பதுதான் உண்மையான விடையமாகும். இப்பழக்கத்தால் நாளுக்குநாள் லட்சக்கணக்கான மக்கள் மடிகிறார்கள். பெருமளவு பணம் வீண் விரயமாகி காசு கரியாகிப் போவதும் உண்மையாகும்.

மேலும் பல வியாதிகளை வரவழைத்து புற்று நோய் போன்ற கொடிய நோய்களுக்கு ஆளாகுவதும் இயல்பாகும். இவற்றைவிட இப்பழக்கங்களால் மனைவி, பிள்ளைகள், குடும்ப உறவுகளிடையே பிரிவு ஏற்படுகின்றது.

பணக்கஸ்டங்கள் பெருகுகின்றது. உயிர் இழப்புக்களும், வயதுக்கு முந்திய உயிரிழப்புக்களும் நிகழ்ந்து மனித வாழ்வு அழிந்து போவதையே நாம் வேதனையுடன் நோக்க வேண்டும். இச்சம்பவங்களை நாம் நேரில் கண்டும் கேட்டும் பார்த்தும் அனுபவித்தும் இந்தக் கெட்ட பழக்கங்களை கைவிட்டோமா? கைவிட வேண்டும்!.. ஆகவே இப்டியான கெட்ட பழக்கமுள்ளவர்கள் இவற்றைப் படிப் படியாகக் கைவிட வேண்டும். உடனடியாக முற்றாக நிறுத்தாவிடினும் சிறிது..சிறிதாக இவற்றை அடியோடு நிறுத்தி நீண்ட காலம் வாழ்வோம். முற்றாக நிறுத்திவிட்டால் குடும்பமும் குதூகலிக்கும். நல்வாழ்வு மலரும். நம்மைச் சுற்றி வாழ்வோரும் சுகவாழ்வு வாழ்வார்கள். இதனால் வீடும் நாடும் நலம் பெறும்!...









# கலை வளர்க்கும் தலைமுறை

## செல்வன் நிமலன் சத்தியகுமார்





நம் முன்னோர்கள் உருவாக்கிய மொழியும் கலைகளும் அழியாது இருக்கப் பாதுகாத்தல் வேண்டும். ஆகவே நம் தலைமுறையினருக்கு இக்கடமை இருக்கிறது. வெளிநாட்டில் வாழ்பவர்களுக்கு கடினம் தான். என்றாலும் நமது பெற்றோர்கள் எங்களை தமிழ் உணர்வோடு வளர்த்திருக்கிறார்கள். அவர்களும் தமிழ்மொழி கலாச்சாரம் மறவாது இங்கு வந்து வாழ்ந்து வருகிறார்கள்.

எனது பெற்றோர் என்னை தமிழ் உணர்வோடு வளர்த்து வந்தமையால் தான் எனக்கு வெற்றிமணியில் எழுதவும், ”கலை வளர்க்கும் தலைமுறை” என்ற தலைப்பில் எழுதவும் சந்தர்ப்பம் கிடைத்தது. எனது சொந்த அனுபவத்திலே, நான் கண்டவற்றையும் உணர்ந்தவற்றையும் பற்றி எழுதவுள்ளேன்.

பரதநாட்டியம் எனக்குப் பிடித்த ஒரு கலை. சிறுவயதிலே சென்று இக்கலையைப் பயின்று அரங்கேற்றம் கண்டேன்.

திருமதி றெஜினி சத்தியகுமார் அவர்களிடம் இருபது வருடங்கள் பயின்று வந்தேன். தாயின் கலை உணர்வும் திறமையும் இவரின் இரத்தத்திலே இருக்கின்றது. நான்கு வருடங்களாக அவரின் மகன் செல்வன் நிமலன் சத்தியகுமார் எங்கள் அனைவருக்கும் 2012ஆம் ஆண்டில் இருந்து, அவரின் பதினான்கு வயதிலேயே, மாணவ மாணவிகளுக்கு நடனம் கற்பித்து வருகிறார். அவரைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். நடனக்கலையை வெவ்வேறு விதமாகப் பயிற்றுவிப்பதில் கெட்டிக்காரன். எனது தங்கையும் நானும் எங்களின் அரங்கேற்றத்தில் ஆடிய அனைத்துப் பாடல்களையும் பொறுத்தமாக தெரிந்தெடுத்து, நன்றாகவும் அழகாகவும் கற்பித்தார். இவர் முதன்முதலில் எங்கள் அரங்கேற்றத்தில் நட்டுவாங்கம் செய்ததில் மிக்க மகிழ்ச்சி.

ஓர் ஆசிரியருக்கு இருக்கு வேண்டிய அமைதி, கனிவு, அன்பு மற்றும் பொறுமை அனைத்தும் இவரிடம் இருக்கின்றன. சினம் கொள்ளாமல் இக் கலையைக் கற்பிப்பவர் தான் இவர். எங்களை விட வயதில் சிறியவராக இருந்தாலும் மரியாதையோடு ”றஜினா அக்கா” என்று அழைத்துக் கற்பிப்பார்.

நட்டுவாங்கம் என்பது பரதநாட்டியத்தில் மிகவும் முக்கியமானது. இதனைச் சரியாகச் செய்பவர் தான் நிமலன். மேடையில் இவர் நட்டுவாங்கம் செய்வதைப் பார்க்கவே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். இவ்வருடம் நடைபெற்ற அரங்கேற்றத்தில் நிமலன் நட்டுவாங்கம் செய்தார். நடன மங்கைகளின் தாளத்தைக் கட்டுப்பாடுடன் கொண்டு சென்றார். பதினெட்டு வயதில் இவ்வளர்ச்சி, திறன் கண்டு நான் வியந்தேன். எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

## தமிழும் கலையும்





றஜினா தருமராஜா

நான் தமிழாலயத்தில் இவருக்குத் தமிழ்மொழிக் கற்பித்தேன். எனக்கு மிகவும் பிடித்த மாணவன். என்னிடம் தமிழ் கற்ற மாணவனிடம் நான் நடனக்கலையைக் கற்றதில் மிக்க மகிழ்ச்சி.

செல்வன் நிமலன் சத்தியகுமார் ”கலை வளர்க்கும் தலைமுறை” என்ற தலைப்புக்கு நிகரானவர். இவர் பரதம் மட்டுமல்ல சங்கீதமும் பயிலும் மாணவன்.
தனது ஓய்வு நேரங்களில் இக்கலையை மற்றவர்களுக்குக் கற்பித்து வருகிறார். இவர் இக்கலையை உணர்ந்து ஆடுபவர். சில சமயங்களில் பார்வையாளர்களுக்கு கண்ணீர் வரும் வரை ஆடியிருக்கிறார்.
தமிழ் மொழியையும் கலையையும் அழியாது பாதுகாத்து வளர்க்கும் மாணவன் இவர். புலம்பெயர் நாட்டில் எல்லோரும் முன்வந்தால் தமிழ்மொழியும் கலாச்சாரமும் பண்பாடும் வெளிநாட்டில் அழிந்துபோகாது.
இவரின் கலைப்பயணம் ஒரு குறையும் இன்றி தொடரவேண்டும் என்பது எனது கலைஞர்களது ஆசை.



# 2016 ஆண்டில் வெற்றிமணி கண்டெடுத்த இளம் நட்சத்திர எழுத்தாளர்கள்!




வெற்றிமணியில் வலம் வரும் இளம் நட்சத்திரங்கள் , Dr.நிரோஷன். Dj.வினோ, நெடுந்தீவு முகிலன், ரஜினா தர்மராஜா, கலாசூரி திவ்யா சுஜேன் இவர்களின் எழுத்துக்களை வியந்து பார்க்கிறோம். அந்த வியப்புக்குரியவர்கள் இவர்கள்தான்.

நுண்மண் நுழைபுலம் தேடும் எண்ணத்தில் தம்மையும் எம்மையும் இணைத்து வெற்றிமணியில் உண்மைக்கு விடை தேடும் இளையவர்கள் இவர்கள்.
இயற்கையின் படைப்பு எதுவானாலும் அதற்கான காரணம் காண கங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட்ட பாதை வெற்றிமணி.
தங்களுடன் எங்களையும் இணைத்து, இதயத்தைத் திறந்து வைத்து, உண்மையைக் காணத் துடித்து, தேடலின் சுரப்பை ஊக்கப்படுத்தி, சீர்தூக்கிப் பார்த்து தீர்வு கண்டு உண்மையை புலப்படுத்துகிறார், Dr. நிரோஷன்.

புதுமைக்குள் காணும் பொக்கிசங்களை கண்டு அவற்றைப் பழைமையுடன் கண்காணித்து பழைமையின் அற்புதங்களை மறந்துவிடாது அவற்றின் மகிமையை ஒப்பிட்டு காலம் கரைந்தாலும் அக்கால அற்புதங்களை அறிவிக்கத் துடிக்கும் Dj வினோ.

புதிய சிந்தனையில் சமுதாயத்தை சீர்தூக்கும் எண்ணங்களுடன் வலம் வரும் நெடுந்தீவு முகிலனின் படைப்புக்கள் சிந்திக்க வைக்க மனிதர்களை வெற்றிமணி நோக்கி அழைக்கிறது.

தண்ணீரில் வளர்ந்தாலும் மண்ணை விட்டுப் பிரிந்தால் வாடி மடிந்துவிடும் தாமரை போல் ஒட்டிக் கொண்டிருக்கும் மண்ணின் பாசம் விட்டுவிடாதபடி தாய் மண்ணையும் தான் வாழும் மண்ணையும் சேர்த்து சிந்தித்து வாசகர்களைத் தூண்டில் போட்டு இழுக்கும் ரஜினா தர்மராஜா

முண்டாசுச் சித்தரின் அமிழ்தப் பாடல்களின் அருஞ்சுவை யாம் அருந்தவே, இலங்கை மண்ணிலிருந்து நின்னைச் சரணடைந்தேன் என மாதந்தோறும் வெற்றிமணியில் வலம் வரும் நாட்டிய தாரகை கலாசூரி திவ்யா சுஜேன் அவர்கள் பத்மா சுப்ரமணியம் விருது பெற்றது மட்டுமல்ல வாசகர்கள் மனதிலும் நீங்கா இடம் பிடித்திருக்கின்றார்.

இம்முற்றத்து மல்லிகைகளின் வாசத்தையும் நேசத்தையும் இணைந்தே வாழ்த்தி மகிழ்வோமே. சமுதாய விழிப்புணர்வு நாடும் இளமையை நேசிப்போமே.

--கௌசி

**2017 ஆம் அண்டு**
**மேலும் மேலும் பல இளம்பூக்கள்**
**மணம் பரப்பட்டும்**

வெற்றிமணி

## சகோதரிகள் கவனத்திற்கு







சகோதரிகள் கவனத்திற்கு

2017 புதுவருட வெளியீடாக சகோதரிகள் கவனத்திற்கு குறும்படம் வெளிவருகின்றது . ஈழ கலைஞர்களும் புலம்பெயர் ஈழ கலைஞர்களும் சேர்ந்து உருவாக்கும் புதிய குறும்படம் ""சகோதரிகள் கவனத்திற்கு"" பரிசில் படமாக்கப்பட்ட இக்குறும்படத்தில் மன்மதன் பாஸ்கி - கிரிஷா - விஜயன் அருன் மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள். சொ. அனுதீபன் ஒளிப்பதிவிலும் படத்தொகுப்பிலும் கந்தப்பு ஜெயந்தன் இசையிலும் நெடுந்தீவு முகிலனின் இயக்கத்திலும் (2017) புது வருட வெளியீடாக வெளிவரவிருக்கின்றது. இந்த வருட (2016) சர்வதேச மகளிர் தினத்தில் இந்த கூட்டணியில் வெளிவந்த அந்தியில் உதயம் குறும்படம் குறுகிய காலத்திலே ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட பர்வையாளர்களால் இணையத்தில் பார்வையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது






தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

# சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.

10

சேவியர்



## நீ என்னவாக விரும்புகிறாய்?

"நீ என்னவாக விரும்புகிறாய்" இந்தக் கேள்வியை பல வேளைகளில் பலரும் நம்மிடம் கேட்டிருப்பார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு பதில் நம்மிடம் தயாராய் இருந்திருக்கும். "நான் டாக்டராவேன், நான் இன்சினியராவேன், நான் டீச்சராவேன்" எனும் பதில்கள் பள்ளிக்கூடத்துக்கு. அந்தப் பதில்கள் பெரும்பாலும் நமது பெற்றோரைப் பார்த்தோ, தெரிந்தவர்களைப் பார்த்தோ உருவாக்கிய பிம்பமாகவே இருக்கும். பலவேளைகளில் "டீச்சர் கேட்டா, சயிண்டிஸ்ட் ஆவேன்னு பதில் சொல்லுப்பா" என குழந்தைகளிடம் அவர்களுக்கான பதிலையும் நாமே உருவாக்கி அனுப்பி வைக்கிறோம்.

கல்லூரி காலத்தில் இலட்சியம் ஒருவேளை நல்ல ஒரு வேலை கிடைப்பதாய் இருக்கலாம். வேலைக்குச் சென்றபின்போ, நமது மேலதிகாரியின் இருக்கையை எட்டிப் பிடிப்பதே ஒரே இலட்சியமாகிப் போகிறது. இன்னும் சில சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட ஒரு கேள்வியை எதிர்கொள்ளவே முடியாமல் தடுமாறிப் போய் விடுகிறோம்.
உண்மையிலேயே நாம் என்னவாக விரும்புகிறோம் ? . எப்போதாவது ஆர அமர இதைப்பற்றி யோசித்திருப்போமா ? "இல்லை" என்பதே நமது உள்மனம் சொல்கின்ற பதிலாய் இருக்கும். இப்படி ஒரு சிந்தனையே தேவையில்லை எனும் சூழலே நமக்குச் சின்ன வயது முதல் அமைந்தும் விடுகிறது.

"ஞானத்தின் துவக்கம் தன்னை அறிதலில் இருந்து துவங்குகிறது" என்கிறார் அரிஸ்டாட்டில். "பிறரைப் பற்றி அறிவது அறிவு. தன்னைப் பற்றி அறிவதே ஞானம்" என்கிறார் லியோ ட்ஸு. தான் யார், தனது இயல்புகள் என்ன ? தனது ஆழ்மன ஆசைகள் என்ன ? தனது பாதை ஏது ? என்பதை உணர்கின்ற வினாடியில் தான் புதிய உலகமே நமது கண்களுக்கு முன்பாக விரியத் துவங்குகிறது.
வில்மா ரொடோல்ஃப் அமெரிக்காவிலுள்ள டென்னிஸி மாகாணத்தில் பிறந்தார். பிறந்தபோது அவளுடைய எடை வெறும் இரண்டு கிலோ. குறைப்பிரசவம். சின்ன வயதிலேயே போலியோ வந்து பற்றிக்கொள்ள இடது கால் செயலிழந்து விட்டது. உலோகக் கவசம் போட்டால் மட்டுமே கால் நேராக நிற்கும் எனும் சூழல். அவளிடம் சின்ன வயதில் "நீ என்னவாக விரும்புகிறாய்?" என்று கேட்டார்கள். "விளையாட்டு வீராங்கனையாக வேண்டும். ஓட்டப்பந்தயங்களில் வெற்றி பெறவேண்டும்" என்றாள் அவள் கண்கள் மின்ன.

நேராக நிற்கவே முடியாத கால்கள். மனதிலோ ஓட்டப்பந்தய வீராங்கனையாகவேண்டும் எனும் தழல். காலத்தின் கோலம் அவளை சின்னவயதில் ரொம்பவே சோதித்தது. கடுமையான காய்ச்சல், சின்னம்மை, பெரியம்மை, இருமல் என இல்லாத நோய்களெல்லாம் அவளை வந்து பிடித்தது. ஒருவழியாக பன்னிரண்டாவது வயதில், உலோகத்தின் துணையில்லாமல் நிற்கத் துவங்கினாள்.

அதன்பின் வாய்ப்புக் கிடைத்த அனைத்து ஓட்டப் பந்தயங்களிலும் ஓடினாள். தவறாமல் கடைசியில் வந்தாள். ஆனால் அவளுக்குள் இருந்த ஆவலும், வேட்கையும் கொஞ்சமும் அணையவேயில்லை. படிப்படியாய் தனது இலட்சியத்தின் பாதையில் ஒட்டிக்கொண்டே இருந்த அவர் 1956ம் ஆண்டு தொடர் ஓட்டத்தில் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கம் வென்றார் !

1960ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் ஒட்டுமொத்த விளையாட்டு ரசிகர்களையும் நிலை குலைய வைத்தது. நூறு மீட்டர் இருநூறு மீட்டர், நானூறு மீட்டர் என மூன்று ஓட்டங்களிலுமே தங்கப்பதக்கங்கள் வென்று உலகையே பிரமிக்க வைத்தார். எல்லாமே சாதனை வெற்றிகள். உலகின் மிக வேகமான வீராங்கனை என அவளை உலகம் கொண்டாடியது. நேராக நிற்கவே தடுமாறிய வில்மா, வரலாற்றின் பக்கங்களில் புயலாக புகுந்து கொண்டார்.

என்னவாகவேண்டும் எனும் தெளிவு உள்ளுக்குள் குடிகொள்ளும்போது எல்லாமே தொட்டுவிடும் தூரத்தில் வந்து சேர்ந்து விடுகிறது. எல்லாவற்றையும் அடையும் அளவிட முடியாத வலிமையை மனம் தந்து விடுகிறது.







என்னவாக விரும்புகிறோம் என்பதில் தெளிவாக இருப்பவர்கள் பாதியிலேயே பாதை மாறிப் போவதில்லை என்பதற்கு உதாரணங்களாக கோலிவுட் கவுண்டமணி முதல் விமானம் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் வரை வரிசையில் நிற்கிறார்கள். எது தனது உண்மையான வலிமை, எதை நோக்கி நான் செல்ல வேண்டும் எனும் தெளிவைப் பெற்றவர்களே வெற்றியாளர்களாய் பரிமளித்திருக்கிறார்கள் என்பதை வரலாறு கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்கிறது !
மாமரத்துக்கு என்னதான் உரம் போட்டாலும், மினரல் வாட்டரையே ஊற்றினாலும் அதில் ஆப்பிள் காய்க்கப் போவதில்லை. ஆப்பிள் தான் வேண்டுமென அதில் பழங்களை ஒட்டி வைத்தாலும் அது பயன் தரப் போவதில்லை. மாறாக, மாமரத்தின் இயல்பை அறிந்து அதற்கேற்ற பராமரிப்பை நல்கினால் மிகச்சிறந்த மாமரமாய் அது மாறும். அப்படியே மனிதனின் இயல்புகளும்.
அதன் முதல் படியாக இருப்பது உணர்தல் ! தன்னுடைய உண்மையான விருப்பம் எது ?. தனது இயல்பான வலிமை எது என கண்டறிவதே முதல் தேவை. இரண்டாவது அந்த விருப்பத்தை நோக்கிய பாதையில் பயணிப்பது. விருப்பமான பாதையில் பயணிப்பதைப் போன்ற ஆனந்தமான அனுபவம் வேறு இருக்க முடியாது. இலட்சியங்கள் காதலைப் போல !. காதலிக்காகவோ, காதலனுக்காகவோ கடற்கரையில் கொளுத்தும் வெயிலில் சுவாரஸ்யமாய்க் காத்திருக்கும் அற்புதத் தருணம் போன்றது அது. பலருக்கும் அத்தகைய வாழ்க்கை அமைவதில்லை என்பது தான் துயரம்.




ஸ்ரீ மகா காளி ஜோதிட நிலையம்

Sri Maha Kali Jothida Nilayam

யேர்மனி வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி



Astro Palmist
Pandit Thulasidasan

அகில உலகப் பிரசித்திபெற்ற ஜோதிடர்
பண்டிற் துளசிதாஸ் அவர்களின் வருகை

ஆன்மீக அன்பர்களின் வாழ்வு மேலும் வளம் பெறவும், திருமணங்கள், காதல்விவகாரங்கள்,வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும் மற்றும் குடும்ப முரண்பாடுகளை நீக்கியும்.குழந்தைச் செல்வங்கள் தடைப்பெறும் சர்ப்பதோஷம் ராகு கேது நிவர்த்திப் பரிகாரங்கள் வழங்கியும் நோய் நொடிகள் கடன் தொல்லைகள் மற்றும் பணம் பொருள் வீடு வாசல் பெற்று பயன்பெற உங்களிடம் யாதகக்குறிப்பு இல்லாவிடினும் கணித்து பலன் சொல்லப்படும். இல்லையேல் கைரேகைமூலம் பலன் சொல்லப்படும்..





Heiderstr.86. 45476 Mülheim
(Bushaltestelle:Steinmetzstr)

காலை 9.00 மணியில் இருந்து
இரவு 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:
0152 181 33 859

## “நீ என்னவாக விரும்புகிறாய்”






உங்கள் அருகில் இருக்கும் நபரிடம் கேட்டுப் பாருங்கள், “இது தான் நீங்கள் விரும்பிய வாழ்க்கையா ?” என்று ! பெரும்பாலானவர்களின் பதில் உங்களை வியக்க வைக்கும். எழுத்தாளராக விரும்பி கிளார்க்காக வேலை செய்பவர்கள், பாடலாரிசியராக விரும்பி ஹோட்டலில் வேலை செய்பவர்கள், டீச்சராக விரும்பி ஐ.டியில் வேலை செய்பவர்கள் என பல முகங்களை நீங்கள் தரிசிக்கலாம். கிடைத்த வேலையைத் தக்க வைத்துக் கொள் வதற்காக தங்கள் இலட்சியங்களையும், இயல்புகளையும் பரணில் தூக்கிப் போட்டவர்கள் இவர்கள்.

இன்னும் சிலர் இலட்சியத்தின் பாதையில் ஓட்டத்தை ஆரம்பிப்பார்கள். கால் இடறியவுடனே பாதை மாற்றி விடுவார்கள். அல்லது போதுமடா சாமி என ஒதுங்கிவிடுவார்கள். அப்படி ஒதுங்காதவர்களைக் கூட சுற்றியிருப்பவர்கள் உசுப்பேற்றுவார்கள். “இதெல்லாம் உனக்கு விதிச்சதில்லைப்பா… ”, “இதெல்லாம் உனக்குச் சரிப்படாது” எனும் விமர்சனங்கள் அவர்களைத் தடம் மாற்றி ஏதோ மூலையில் மிச்ச வாழ்க்கையைக் கழிக்க வைக்கும்.

நீங்கள் விரும்பிய வாழ்க்கையை வாழ உங்களுக்குத் தடையாக இருக்கும் சிக்கல்கள் எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம். பின்னுக்கு இழுக்கும் நண்பர்களாய் இருக்கலாம், படிப்பாய் இருக்கலாம். தங்குமிடமாய் இருக்கலாம். வேலையாய் இருக்கலாம். அந்த சிக்கல்களை அடையாளம் கண்டு கொண்டால் அதிலிருந்து மீள்வதும் எளிதாகிவிடும்.

“எல்லாத்துக்கும் ஒரு நேரம் வரணும்பா” என்று பலரும் தங்கள் இலட்சியங்களின் மேல் காலத்தின் கூடாரமடித்துப் படுத்துறங்குவதுண்டு. உண்மையில் அப்படி ஒரு நேரம் வருவதேயில்லை. நாம் தான் பயணத்தைத் தொடரவேண்டுமேயன்றி, கூரையைப் பிய்த்துக் கொண்டு தெய்வம் கொட்டுவதெல்லாம் கதைகளில் மட்டுமே சாத்தியம்.

இலட்சியங்கள் சமரசமற்ற ஆழ்மன விருப்பத்தின் வெளிப்பாடாய் இருக்க வேண்டும். நண்பன் சொன்னான், மாமா சொன்னார், மச்சான் சொன்னான் என்றெல்லாம் உங்கள் இலட்சியங்களை உருவாக்காதீர்கள்.

அது போல இலட்சியம் மிகவும் தெளிவான ஒரு புள்ளையை அடைவதாக இருந்தால் நல்லது. உதாரணமாக, சினிமா துறையில் வெற்றி பெறவேண்டும் என்று சொல்வதை விட, சினிமா துறையில் இயக்குனராக வேண்டும் எனும் சிந்தனை கூர்மையானது. இத்தகைய தெளிவான பார்வை அதை நோக்கியப் பயணத்தை நெறிப்படுத்துகிறது. சஞ்சலங்களை விட்டு விலகி நடக்கும் பலம் தருகிறது.

புல்லாங்குழல் இசைக்க விருப்பம் இருப்பவர், காலம் முழுதும் வீணை கற்றுக் கொண்டிருந்தால் அவருடைய ஆசை எப்போதுமே நிறைவேறப் போவதில்லை. புல்லாங்குழலுக்கான இசைப்பயிற்சியில் நுழைவதே ஒரே வழி.

இலட்சியங்களைக் குறித்த தெளிவான பாதை இத்தகைய தயாரிப்புகளை எளிதாக்கித் தரும்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் இலட்சியம் எதுவாகவும் இருக்கலாம். இலட்சியங்கள் ஒரு பதவியையோ, இருக்கையையோ சென்றடைய வேண்டிய கட்டாயமில்லை. அன்பான, கருணையான, நேர் சிந்தனையுடைய, கோபப்படாத மனிதனாக மாறவேண்டும் எனும் இயல்புகளின் இலட்சியம் கூட ஆராதிக்கப்பட வேண்டியதே.

நீங்கள் என்னவாக விரும்புகிறீர்களோ அந்த நிலையை அடைந்து விட்டதாகவே மனதில் உங்களைக் கருதிக் கொள்ளுங்கள். அவர்களைப் போலவே உங்களுடைய சிந்தனைகளையும், செயல்பாடுகளையும் அமைத்துக் கொள்ளுங்கள். அப்போது விரைவாகவே அந்த இடத்தை அடைந்து விடுவீர்கள் என்கிறார் ஜான் கால்ஹன் எனும் வல்லுனர்.

வெற்றியாளர்கள் கருப்பாகவோ, வெள்ளையாகவோ, ஒல்லியாகவோ, குண்டாகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். எல்லாரிடமும் பொதுவாக ஒரே ஒரு விஷயம் இருக்கும். அது தன்னைக் குறித்த தெளிவான புரிதலும், இலக்கைக் குறித்த விலகாத பார்வையும், அதை நோக்கிய தளராத பயணமும் தான்.

**இலக்கு எதுவெனும் அறிதல் கொள் வெல்லும் மனதிடம் அதையே சொல்.**

# ராசவள்ளிக் கிழங்கு அல்வா




தேவையான பொருட்கள்:

ராசவள்ளிக் கிழங்கு 2 கிலோ
சீனி 250. கிறாம்
சவ்வரிசி சிறியது 100 கிறாம்
உழுத்தம்மா 2. மே.கரண்டி
தேங்காய்ப் பால் கெட்டியானது 1/2 கப்
வனிலா 1. தே.கரண்டி
கயூ 25. சிறு துண்டுகளாக வெட்டினது
உப்பு 1. சிட்டிகை

செய்யும் முறை:

ராசவல்லிக் கிழங்கை தோல் சீவி சிறு துண்டுகளாக வெட்டி வழு வழுப்புத் தன்மை போகும் வரை 4,5 முறை கழுவிய பின் ஒரு பாத்திரத்தில் கிழங்கைப் போட்டு அளவான தண் ணீரும் ஒரு சிட்டிகை உப்பும் சேர்த்து மூடி வேக விடவும்.

அரைப் பதம் வெந்ததும் சவ்வரிசியை யும் சேர்த்து கட்டி படாமல் மெல்லிய தீயில் அடிப்பிடிககாமல் பார்த்து வெந்த பின் மசித்து தேங்காய்ப்பாலில் உழுத் தம் மாவையும் கட்டி படாமல் கரைத்து சீனி வனிலாவையும் சேர்த்து ஒரு நிமிடத்தின் பின் இறக்கி ஒரு Tray இல் ஊற்றி பரவி அதன் மேல் கயூவையும் தூவி ஆறிய பின் விரும் பிய வடிவில் வெட்டி பரிமாற வும்.




# நிகழ்வின் நிழல்கள்





## நாவலர் எமக்கோர் காவலர்







## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டில் மாணவர்கள் குடை, கொடி, ஆலவட்டம் போன்ற மங்களப் பொருட்களை ஏந்தியவாறு சிறப்பான ஊர்வலம்!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வு கடந்த மாதம் 18ம் திகதி முற்பகல் நாவலர் பிறந்த நல்லூர் மண்ணில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி அதன் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நல்லூர் ஆலய முன்றலில் அமைந்துள்ள ஆறுமுகநாவலர் மண்டபத்தில் நாவலரின் திருவுருவச் சிலைக்கு குருபூசை இடம்பெற்றது.

நல்லை நகர் நாவலரின் திருவுருவப் படமானது மங்கள வாத்தியங்கள் முழங்க குடை, கொடி, ஆலவட்டம் போன்ற மங்களப் பொருட்களுடனும் மாணவர்கள் ஏந்தியவாறு வந்த நந்திக் கொடியுடனும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து விழா ஆரம்பமானது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனுடன் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவருமான சீனித்தம்பி யோகேஸ்வரனும் இணைந்து சம்பிராதயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து விழாவில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் ச.பத்மநாபன் ஆகியோர் நிகழ்த்தினர்.

மேலும் இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆகியோர் நாவலர் பெருமான் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிய பணிகள் தொடர்பில் உரைகள் ஆற்றினர்.

தொடர்ந்து நாவலர் பெருமான் என்ற நூலை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வெளியிட்டு வைத்தார். குறித்த நூலின் முதற் பிரதியை வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரன் பெற்றுக் கொண்டார்.
சிறப்புப் பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. நூலின் அறிமுகவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரீகத் தலைவர் மா.வேதநாதன் நிகழ்த்தினார். நாவலர் எமக்கோர் காவலர் எனும் தலைப்பில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிறப்புரையாற்றினார்.

ஆரம்பநாள் வைபவத்தில் புத்தகக் கண்காட்சியொன்று இடம்பெற்றதுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் அழகிய திருவுருவப் படங்கள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

ஆரம்ப வைபவத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் ஆ.சிறீ, யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா, ஆலயக் குருமார்கள், மதத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், கல்வியலாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan | Tel. 05723-914519 | www.rklimmo.de | info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com

## போற்றி போற்றி!

போற்றி போற்றி ஜெய ஜெய நாமம்
போற்றி யேசு பகவானே போற்றி
போற்றி போற்றி பரமனின் சுகனே!
போற்றி பார்படைத்த பரமனே
போற்றி போற்றி பாவக்கறை போக்க
வந்தவனே
போற்றி தூய்மையின் பிரகாரமே
போற்றி போற்றி இருள் அகற்றும் ஒளியே
போற்றி சூசை மேரி மைந்தா
போற்றலின் நாயகனே இதயத்தில்
ஊம்மை நிறுத்தி பூஜிக்கின்றோம்.
போற்றி போற்றி தூய பாலகனே
போற்றி போற்றி என்றுமே போற்றி



ஏ.நி.இம்மானுவேல்
வூப்பெற்றால்.




# காதல்! காதல்!! காதல்!!!

"நின்னைச் சரணடைந்தேன்
காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்"

என்று ஆழ்ந்த காதலின் அதியுன்னத அற்புதத்தை அகத்தில் செதுக்கிய காதற் சிற்பி பாரதி. உள்ளத் தெழும் காதலுக்கும் காதல் வெள்ளித்தினால் நிரம்பும் தூய இன்பத்திற்கும் உச்சி மலை தீபமென ஒளியிட்டு துலங்கும் மொழி தந்த கவிஞன் ஆயினும் சிற்றின்பத்தின் செருக்குக்கு மொத்தமாய் திரையிடும் புனிதனுமாகிறான்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நினற் துணை

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க தேச நலத்தினை ஆதார ஸ்ருதியாய் கொண்ட பாரதியும் திருமண பந்த குடும்ப வாழ்க்கையே மற்றெல்லா வாழ்க்கை முறைகளிலும் சிறந்தது என்கிறார். அவரது காலகட்டத்தில் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சட்டமாக்கப்பட்ட விவாகரத்து முறைக்கும், கலாசாரங்களில் ஊடுருவிப் பரந்த காதல் - விடுதலை (Free Love) எனும் சுதந்திரத்திற்கும் ஆமோதிக்காது நியாயம் சொன்னவர்.

அக்னி சாட்சியாய், சப்த படி கண்டு, அம்மி மிதித்து, அருந்ததி காட்டி அன்றும் இன்றும் தொடரும் ஆச்சார வழக்கங்களை செய்துவிட்டு கணவனோ, மனைவியோ கண்களினால் கருத்தினைப் பரிமாறும் புரிதல் இல்லாவிடினும் வார்த்தைகளினாலான பகிர்தலிலாவது விவாதம் இல்லா விவாக முறை இருப்பின் குழந்தைகளின் நிலை உயர் தேசமும், சீர்படும் என்று இல்வாழ்க்கையின் இலக்கணமே ஆதாரம் என்று ஆரோக்கிய பாதையை நினைவுகூருகிறார். சமாந்தரமாய் மென்மொட்டுக்களின் சுகந்த நாதத்தில் பேருருவி சிதறித் தாளமிடும் பேரானந்த பெருவெளியில் மென் காட்டுக்குள் எண்ணங்களை ஒருமுகப்படுத்தி ஒன்றிக்கும் காதல் யோகம் கற்றறியும் தேவ வழிக்குள்ளும் அழைத்துச் செல்கிறார். அது கடவுளை அடையும் மார்க்க வழி என்று தெளிந்திடல் வேண்டும்.

"மோகத்தைக் கொன்றுவிடு அல்லல் என்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்திவிடு அல்லால் அதில்
சிந்தனை மாய்திவிடு"

மோகம் எனும் பெருமாயப் பேய் என்னுள் வெடித்தெழுந்து ஆடி சிற்றின்ப ஆசைகளை சிதறலிடும் எனில்….. தயை செய்து உறுதியாய் இறைஞ்சி கேட்கின்றேன். என் மூச்சையே நிறுத்திவிடு என்று சிற்றின்ப அழற்சிக்கு அகலிட்டு எரித்து எதிர்த்தார். வெறும் சரீரத்தோடான சிந்தனைகளை கட்டுக்கடங்காது வட்டமிட்டு சுழலும் எண்ணங்களை கொன்றுவிடு. இல்லையேல் தேகத்தை என் உடம்பை வீழ்த்திவிடு என்கிறார். எண்ணச் சுதந்திரம் மட்டும் அழியாது யாவர்க்குள்ளும் இருக்கும் வேகப்பரி. அதனை அமுதாக்குவதற்கும் விஷமாக்குவதற்குமான பயிற்சியின் சாவியும் எம்மிடமே உள்ளது.

யோகத்(து) இருத்திவிடு அல்லால் என்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத்து இருந்(து) உலகம் - இங்குள்ள
யாவையும் செய்பவளே!

சுதந்திரமாய் அவையும் எண்ணங்களை கூட, விழிப்புணர்வாய் ஒருமுகப்படுத்தி இறை தன்மையோடு ஒன்றித்திருக்கும் உண்மை நிலையான யோகநிலையை என்னுள் இருத்திவிடு இல்லையேல் இந்த உடம்பினை சிதைத்துவிடு என சிற்றின்ப மோகம் என்பது புற உடலோடான செயற்பாடு மட்டுமே என்பதை வலியுறுத்தும் வண்ணம் கருத்தாழத்தை புதைக்கிறார்.

"பந்தத்தை நீக்கிவிடு அல்லால் உயிர்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு அல்லால் இதைச்
செத்த உடலாக்கு"

பிற்பறுக்காது தொடர்ந்துவிடும் ஜன்ம பந்தத்தின் கட்டுக்களை நீக்கி விடுதலை தந்துவிடு இல்லை அவை வினைகளை பெருஞ் சுமையாய் தாக்குகின்றன. ஆதலால் என் உயிர் தரும் பாரத்தை போக்கிவிடு. ஏண்ணங்களுக்கு மிக சக்தியுண்டு. நாம் எதை சிந்தையில் எண்ணுகிறோமோ அதுவாகவே மாறிக் கொண்டிக்கிறோம். ஆக, எம் சிந்தையை தெளிவாக்கு இல்லையேல் செத்த உடலாக்கு என்று தெளிவற்ற எதிர்மறை சிந்தை கொண்டோர் செத்த உடலுக்கு சமானமாய் உட்கருத்து கூறுகிறார்.

உள்ளம் குளிராதோ? பொய் ஆணவ
ஊனம் ஒழியாதோ?
கள்ளம் உருகாதோ? அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ?

இவ்வாறு மோக வலைக்குள் அல்லலப்பட்டு உழலும் என் உள்ளம் அமைதியடைந்து ஆறுதல் படாதோ? மெய் வசப்படுத்தல் ஆண்மையின் வீரம் எனும் பொய் ஆணவ ஊனம் ஒழிந்திடாதோ? லௌகீக திளைப்பினை அடைய வேண்டும் என போடும் கள்ளம் குறையாதோ?

எப்பொருளிலும் உள்ளே நின்று இயங்கிக் கொண்டிருப்பவளும் வையத்திலுள்ள யாவற்றையும் படைப்பதோடு அனைத்து கர்மாவிற்கு கர்மாவினால் ஆன செயல்களுக்கும் தனியொருத்தியாய் இருந்து செயல்படுபவளுமான மஹாசக்தியே! சிற்றின்பத்தை வென்று பேரின்ப பக்தி பெருக்கில் உன்னை முழுமையாய் உணர்ந்து மொழி தோற்க விழி ஏங்கி கண்ணீர் பெருகி வழிந்து மெய்யினை நினைத்து சக்தியே நின்னடி சரணடைந்தேன் என்றும், இழிகுணம் இருப்பின் நாயிற்கு இணையாவேன்.

நின்னடி சேரவேண்டும் எனும இந் நாயின் மிகச் சிறு ஆசையை நின் அளப்பெருங் கருணையால் தீர்த்து வைக்க வேண்டும் என்று சொற்களுக்கு அப்பாற்பட்ட எல்லாவற்றிலும் நீக்கமற கலந்துள்ள மஹாசக்தியிடம் விண்ணப்பம் வைக்கிறார் சக்திதாஸன் பாரதி.

"வெள்ளக் கருணையிலே- இந்நாய்சிறு
வேட்கை தவறாதோ?
விள்ளற்(கு) அரியவளே அனைத்திலும்
மேவி இருப்பவளே"

S.J. ASIAN - AFRO STORE




**Mannheim**
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

**Ludwigshafen**
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de

Indo-Afro
Indo Afro Travels
68161 Mannheim

# நாவலரின் ஆழமானதும் அகலமானதுமான அறிவு இன்று எம்மிடையே குறைந்தளவே காணப்படுகின்றது!



**வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன்**

இந்து சமயத்திற்கு இருந்த மிக நெருக்கடியான காலகட்டத்தில் அனைத்து வகையான நெருக்கடிகளையும் தனி ஒருவராக அல்லது இன்னும் குறிப்பிட்ட சிலருடன் இணைந்து கொண்டு முறியடித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்பாணம் நல்லூரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குரு பூசை ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி 18.11.16 நடைப்பறெ்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களை நினைவு கூர்வதும் அவர்களின் குருபூசை நிகழ்வுகள் பற்றிய மாநாடுகளை நடாத்துவதும் அன்னாரின் நினைவை எம்முடன் எக்காலமும் சுமந்து செல்ல உதவுகின்றன.

சமய சடங்குகள் மற்றும் இன்னோரன்ன நிகழ்வுகள் பல தடங்கல் இன்றி நடைபெறுவதற்கும் அன்றே வழிவகுத்து வெற்றியும் கண்டார்.என சி.வி விக்னேஸ்வரன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் அருமை பெருமையை அற்புதங்களையும் விளக்கி கூறியுள்ளார்.
யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் சைவ சமயிகளாக வாழ்ந்த கந்தப்பிள்ளை சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகவாகப்பிறந்த நாவலர் ,ஆறுமுகம்பிள்ளை என்ற இயற்பெயரைக் கொண்டிருந்தார்.

அவரின் நாவன்மையையும் பேச்சாற்றலையுங் கண்ணுற்ற தமிழ் அறிஞர்களும் கற்றறிந்தவர்களும் அவரைப் பாராட்டி அவருக்கு நாவலர் அதாவது நாவன்மையில் வல்லவர் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். ஆகவே ஆறுமுகம்பிள்ளை மறைந்து ஆறுமுகநாவலரே அவரின் நாமமாக இன்றும் நிலைத்துள்ளது.
சிறுவயதில் இருந்தே கற்றலில் கூடிய கவனம் செலுத்திய நாவலர் அவர்கள் தமது ஒன்பதாவது வயதில் தந்தையாரை இழந்த போதும் அவரின் மூத்த சகோதரர்களின் வழிகாட்டலில் சேனாதிராச முதலியாரிடம் உயர் கல்விகற்க அனுப்பப்பட்டார்.
அவர்தமது பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் மிகத் திறமை பெற்று அக்கால இலக்கியங்களையும் புராணங்களையும் படித்து அவை பற்றிய ஆழ்ந்த அறிவைப் பெற்றிருந்தார்.
அவரின் தமிழ்ப் புலமையை கண்ணுற்ற அவரின் சகோதரர்கள் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் முன்னணி ஆங்கிலப் பாடசாலையாக விளங்கிய மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் (இப் பாடசாலை பின்னர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது) ஆங்கிலம் கற்க அனுப்பி வைத்தனர்.
ஆங்கிலப் புலமையை கண்ணுற்ற அக்கல்லூரியின் அதிபர் பேர்சிவல் பாதிரியார் அவர்கள் நாவலர் அவர்களை அவரின் 19 வயதில் தமது கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்பிப்பதற்கும் பைபிள் நூலை தமிழ் மொழி பெயர்ப்பு செய்வதற்கும் மிகப் பொருத்தமானவர் என்ற எண்ணப்பாட்டில் அவரை ஆங்கில ஆசிரியராக பணிக்கமர்த்தியிருந்தார்.
எனினும் நாவலர் அவர்கள் தான் பண்டிதர் ஆகிய போது பாதிரியாருக்கு சில நிபந்தனைகளை விதித்துக் கொண்டாராம். தாம் ஒரு காலத்திலும் தன் நெற்றியில் அணிந்த திருநீரை அழிக்கமாட்டார் என்றும்,தான் கிறிஸ்தவ மத கண்டனம் செய்வதைப் பற்றி அவர் குறை சொல்லக் கூடாதென்றும் வேறு சில நிபந்தனைகளின் அடிப்படையிலும் கடமையாற்ற முன்வந்தார்.

பாதிரியாரும் தமக்கு கீழுள்ள கிறிஸ்தவர்கள் சம்பளத்தை நோக்காக கொண்டவர்கள் என்றும் சைவராயினும் இந்த பணிக்கு நாவலரே மிகப் பொருத்தமானவர் என்றும் அவர் போன்ற வேறு பண்டிதர்கள் கிடைக்கமாட்டார்கள் என்ற அடிப்படையிலும் அவருடைய நிபந்தனைகளுக்கு உடன்பட்டு அவரைப் பாடசாலையில் இளம் வயதிலேயே இணைத்துக் கொண்டனர்.
பாதிரியாரோடு நாவலர் பெருமான் வாழ்ந்த காலம் பாண்டிய மன்னனுடன் மாணிக்கவாசகர் சுவாமி இணைந்து இருந்தது போலப் பொருத்தமாக அமைந்தது. பைபிளை அவர் மொழி பெயர்க்குக் காலத்தில் அதனையும் அதன் உரைகளையும் நன்றாக கற்றுக் கொண்டமையால் கிறிஸ்தவ விவிலிய நூல் சம்பந்தமாக அவருக்குண்டான அறிவு பாதிரிமார்களுக்குக் கூட இருக்கவில்லை.

அவர் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் இந்து சமயம் பற்றியும் நன்றாகக் கற்றிருந்தார். எனவே எல்லாத் துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்ததுடன் பிற சமயங்களைப் பற்றி நன்றாக அறிந்துமிருந்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் பேசவும், எழுதவும், புரிந்து கொள்ளவும் சிறந்து விளங்கிய நாவலர் அறிவு, அவரைப் பார்த்துப் பலர் அஞ்சி ஒதுங்க வழிவகுத்தது.
அவரின் சிறப்பு மேலோங்கியது. சமயத்தின்பால் கொண்டுள்ள அதீத பற்றின் காரணமாக குடும்ப பந்தங்கள் தமது சமய வாழ்க்கைக்கு ஒவ்வாதவை எனக் கருதி திருமண பந்தத்தில் இருந்து தூர விலகியிருந்து தமது பணிகளை ஆற்றினார். அவரின் சகோதரர்களும் அவரின் குருமார்களும் எவ்வளவோ வற்புறுத்தியும் நாவலர் தமது பிடியில் நின்றும் சற்றும் தளராது பிரம்மச்சாரியாகவே காலத்தைப் போக்கினார்.
நாவலரின் ஆழமானதும் அகலமானதுமான அறிவு இன்று எம்மிடையே குறைந்தளவே காணப்படுகின்றது. பன்மொழிப் பாண்டித்தியமே பல்கலை விற்பன்னர்களாகவும் பலர் கருத்தறியும் பாங்களாகவும் கைப்பெற்றுவர எம்மை ஆக்க வல்லன என்பதை அவர் வாயிலாக அறிகின்றோம்.

அவரின் திறமைகள் இந்தியாவிலும் பேசப்பட்டது.அவர் தமது வாழ் நாட்களில் அரைவாசிப் பகுதியை இந்தியாவிலேயே கழிக்க வேண்டியிருந்தது. அவர் இலங்கையிலும் இந்தியாவிலும ஆற்றிய பிரசங்கங்கள் அனைவராலும் பெருமையாகப் பேசப்பட்டன.
பிரசங்க முறைமையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் ஆறுமுக நாவலர் அவர்களே. இவர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை சிவன் கோவிலிலே ஆற்றினார் எனக் கூறப்படுகின்றது. இலகு மொழிநடையில் பிரசங்கம் பண்ணும் போதும் அர்த்தம் சொல்லும் போதும்,பேசும் போதும் சொற்கள் மடைதிறந்த வெள்ளம் போல வந்து கொண்டே இருக்குமாம்.
சொற்பஞ்சம் என்பது இவருக்கு ஒரு காலத்திலும் இருந்ததில்லை. ஒரு சொல்லையாவது அல்லது விடயத்தையாவது திருப்பிச் சொல்லும் வழக்கம் அவருக்கு இருக்கவில்லை. அந்தளவுக்கு ஒத்தகருத்துள்ள பல சொற்களை அவர் அறிந்திருந்தார்.
சிறு பிள்ளைகளோடு பேசும் பேச்சில்கூட இலக்கணப் பிசகின்றி ஆனால் அவர்களால் விளங்கிக் கொள்ளக்கூடிய இலகு மொழிநடையை பயன்படுத்துவது அவருக்கே உரிய தனிச்சிறப்பாக அமைந்திருந்தது.

தொடர்ச்சி 29 ம் பக்கம்






# காலங்களில் அவள் வசந்தம்

எனக்கு அருகே இருந்த மேசையில்தான் மலர்ச் செண்டு இருந்தது. மலர் செண்டை அந்தப் பெண் தேடியபோது அதை எடுத்து அந்தப் பெண்ணிடம் நீட்டினேன். அதை என்னிடம் வாங்கி, நன்றி சொல்லிக் கொண்டே அருகே நின்ற பிளவகேளிடம் கொடுத்தவள், சட்டென்று என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

'நீங்க ராஜேஸ் தானே?'
'ஆமா, நீங்க.. காயத்திரி தானே?'
என்னால் நம்பமுடியவில்லை, எவ்வளவு காலமாச்சு!
எனக்கும்தான். நாங்க மீண்டும் சந்திப்போம் என்று நான் நினைத்தும் பார்க்கவில்லை. அதுவும் அவுஸ்ரேலியாவில்! காயத்திரி நீ அப்படியேதான் இருக்கிறாய். நான் ஆச்சரியத்தோடு சொன்னேன்.

'நீங்களும் அப்படியேதான் இருக்கிறீங்க, இது என்னுடைய மகள் சிந்தியா.' அந்த திருமண வைபவத்தில் பிளவகேளாக நின்ற சிறுமியை அறிமுகப் படுத்தினாள். காயத்திரியின் முகச்சாயல் அப்படியே அவளிடம் இருந்தது.
'அப்பா படம் எடுக்கக் கூப்பிடுறாங்க' என்னுடைய மூத்தமகள் அகல்யா நினைவுகளைக் கலைத்தாள். என்னுடைய மகளை காயத்திரிக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டு மணமக்களை நோக்கி நடந்தேன். மணமகனின் நெருங்கிய உறவினர் என்ற முறையில் இலங்கையில் இருந்து இந்தத் திருமணத்திற்காக வந்திருந்தேன்.

எத்தனை வருடங்கள் கடந்தாலும் நினைவலைகள் பசுமையாய் கூடவே வந்தன.
காயத்திரியை முதன் முதலாக லண்டனில்தான் சந்தித்தேன். இலங்கையில் இருந்து வந்த நான் அங்கே பொறியியலாளருக்குப் படித்துக் கொண்டிருந்தேன். என்னைப்போலவே இலங்கையில் இருந்து தாதியாகப் பயிற்சிபெற அவளும் லண்டனுக்குத் தனியே வந்திருந்தாள். தாதிப்பயிற்சி முடிந்ததும் அங்கே உள்ள ஒரு வைத்தியசாலையில் கடமையுமாற்றினாள்.

ஒருமுறை லயன்ஸ் கிளப்பில் இருந்து இரத்ததானம் செய்வதற்காக வைத்திய சாலைக்குச் சென்றிருந்தபோது அவளைச் சந்திக்க நேர்ந்தது. அவள்தான் எனக்கு இரத்தம் எடுத்தாள்.
'எங்கே குத்த..?' என்று கேட்டாள்.
'கையிலே..!' என்றேன்.
'அது தெரியும், எந்தக் கையிலே..?' என்றாள்.
நான் சிறிது நேரம் யோசித்தேன். அவளது கேள்வி இரண்டு கையிலும் வேறு வேறாய் இரத்தம் ஓடுமோ என்று என்னைச் சந்தேகப்பட வைத்தது.
என்ன யோசிக்கிறீங்க..? என்றாள்.
'உங்களுக்கு எதில குத்த விருப்பமோ அதில குத்தி எடுங்க!' என்றேன்.
'அடடா.. என்ன தாராளமனசு' என்று நினைத்திருக்கலாம், அவளுக்குச் சிரிப்பு வந்திருக்க வேண்டும், காட்டிக் கொள்ளாமல் உதட்டுக்குள் சிரித்துக் கொண்டே வலது கையைத் தெரிந்தெடுத்தாள்.

இரத்தநாளத்தைக் கண்டுபிடித்து சரியான இடத்தில் ஊசியைக் குத்த, ஒரு விரலால் தடவித் தேடிக் கொண்டிருந்ததில் இருந்து அவள் சற்றுச் சிரமப்படுவது தெரிந்தது. இரத்தத்தைக் கண்டால் எனக்கு மயக்கமே வந்துவிடும் என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு, அந்த மென்னையான விரல்களின் வருடலின் சுகத்தை அனுபவித்துக் கொண்டு மிகஅருகே இருந்த அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

'இன்னும் குத்தவே இல்லை, ஏன் இப்படி தம் பிடிச்சிட்டு இருக்கிறிங்க, சாதாரணமாய் இருங்களேன்' என்றாள்.

நான் சாதாரணமாய் இருக்கத்தான் முயற்சி செய்தேன். ஏனோ என்னால் முடியவில்லை. அவளது அருகாமையின் தாக்கத்தில், இதமான வாசனைத் திரவியம் சுவாசத்தை நிறைத்தது. ஊசி ஏற்றும்போது, ஊ...! என்று என்னை அறியாமலே சத்தம் போட்டேன்.

'வலிக்குதா..?' என்றாள்.
ஆமா என்று தலையசைத்தேன்.
'என்ன சின்னப்பிள்ளைகள் மாதிரி..' என்று சொல்லிச் சிரித்தபடி கண்சிமிட்டினாள்.
மின்னலாய் வெட்டிச் சென்ற அந்தப் பார்வையில் என்னையறியாமலே அவள்பால் ஈர்க்கப்பட்டேன்.

என் வாழ்க்கையில் வசந்தம் குடிபுகுந்து விட்டது போன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது. வசந்த காலம் மறக்க முடியாதது. தென்றலின் குளிர்மை, பட்சிகளின் ஓசை, மலர்களின் வாசம், பரந்து விரிந்த வானம் எல்லாமே எனக்கே எனக்காய்க் காத்திருப்பது போல, எனக்கு என்ன ஆச்சு என்றே புரியவில்லை. என்னை மறந்து அவள்தான் எல்லாமே என்ற நிலைக்கு என்னை இழுத்துச் சென்றது. இது காதலா அல்லது அவள்மீது கொண்ட ஈர்ப்பா என்பது அப்போது எனக்குப் புரியவில்லை.
அவளை அடிக்கடி சந்தித்தேன். அன்று காதலர் தினம். ஏன் காதலைச் சொல்ல ஒற்றை ரோஜாவோடு அவளுக்காகக் காத்திருந்தேன். விழி உயர்த்தி வியப்போடு அதை ஏற்றுக் கொண்டாள்.

'மாலை ஆறுமணிக்குத்தான் வேலை முடியும், என்னோட டினருக்கு வர்றீங்களா?'
தன்னோடு இரவு விருந்திற்கு வரமுடியுமா என்று கேட்ட போது மகிழ்ச்சியோடு அவளது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன்.

அன்று இரவு உணவு விடுதியில் பல விடையங்களை நாங்கள் பரிமாறிக் கொண்டோம். உணவு விடுதிக்கு வந்திருந்த, எங்களைத் தெரிந்தவர்கள் சிலர், எங்களை வாழ்த்தினார்கள். விருந்து முடிந்து இருவரும் நடனமாடினோம். எல்லாமே நல்லபடியாய் நடந்தது. அவளைப் பற்றிய நினைவோடு நான் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியபடி இருப்பிடம் நோக்கி மிதந்தேன்.
மறுநாள் மாலை நேரம் அவளை அழைக்க நினைத்தேன். ஆனால் அவளே அவசரமாக என்னை அழைத்தாள். ஊரிலே தனது தாயார் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும், அவசரமாகத் தான் ஊர் திரும்ப வேண்டும் என்றும் அறிவித்தாள். அவளுடைய சோகத்தில் முழுமையாகப் பங்குபற்ற முடியாவிட்டாலும், அவள் போவதற்கு வேண்டிய பிரயாண வசதிகளை ஓடியாடிச் செய்து கொடுத்தேன்.

சீக்கிரமே திரும்பி வந்துவிடுவதாக வாக்குக் கொடுத்துப் பிரிந்து சென்றாள். பிரிய முடியாமல்தான் நாங்கள் பிரிந்தோம். காத்திருப்பதில் ஒருவித சுகம் இருந்ததால் அவளது நினைவுகளோடு அவளுக்காகப் பொறுமையோடு காத்திருந்தேன். ஆனால் குறிப்பிட்ட தினத்தில் அவள் திரும்பி வரவேயில்லை. பரிதவிப்போடு பல விதமாகவும் அவளுடன் தொடர்பு கொள்ள முயன்றும் பதில் கிடைக்கவில்லை.

தொடர்ச்சி 22ம் பக்கம்

நீங்கள் ஆயிரக்கணக்கான யூரோக்கள் நிதி நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்களா?
01522 7565934
0231 58695276
rajeevan.mahalingam@swisslife-select.de
நீங்கள் வீடு வேண்டப் போறீர்களா?
வீட்டுக்கடன்: 1,13 % லிருந்து
வங்கிக் கடன்: 1000 € = 1,65 € மாத வட்டி



21 ம் பக்கத் தொடர்ச்சி...

## காலங்களில் அவள் வசந்தம்.

ஒரு மாதம் வேகமாக ஓடிச் சென்ற போதுதான் ஒரு உண்மை தெரியவந்தது. தாயாரின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதற்காகத் தனது முறைப் பையனைத் திருமணம் செய்து கொண்டு அவுஸ்திரேலியாவிற்குப் போய்விட்டதாக செய்தி வந்தது.

மனமுடைந்துபோன நான் விரக்தியின் உச்சக் கட்டத்திற்கே சென்றேன். தனிமை என்னை வாட்டியது. லண்டனில் இருக்கப் பிடிக்காததால் திரும்பவும் ஊருக்குச் சென்றேன்.

சோகத்தைக் காலம் கரைத்தது. லண்டன் மாப்பிள்ளை என்று சொத்துப் பத்தோடு வந்த பெண்ணை மனைவியாய் ஏற்றுக் கொண்டேன். மூத்தவள் பெண்ணாகவும், அடுத்தவன் ஆணாகவும் பிறக்கவே இரண்டோடு நிறுத்திக் கொண்டோம்.

இருபத்தைந்து வருடக் கனவுகள் மீண்டும் நிஜமாக மறுபடியும் அதே காயத்திரி!
இரவு விருந்துபசாரத்தின்போது எங்கள் மேசையிலேயே அவளும் கணவரும் இருந்தார்கள். கணவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.
சிறிது நேரத்தால் கணவர் எழுந்து நண்பர்களைச் சந்திக்க அடுத்த மேசைக்குச் சென்றார். எனது மகளும் எழுந்து சினேகிதிகளிடம் சென்றாள். நான் எதுவும் பேசவில்லை. குற்ற உணர்வு உள்ளவளாக காயத்திரி தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை.
'என்ன யோசனை..?' என்றாள் திடீரென்று. இல்லை, கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தேன், லண்டன் காதலர் தின நடனத்தை என்னால் மறக்க முடியவில்லை என்றேன்.
அவளுக்கும் அந்த நினைவு வந்திருக்க வேண்டும். நினைவுகளை அசைபோட்டு மெல்லச் சிரித்தாள்.
'ராஜேஸ் அந்தந்த நேரவாழ்க்கையை நினைத்து காலமெல்லாம் ஏங்கிக் கொண்டிருக்கக் கூடாது. எது யதார்த்தமோ அதை ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வயதில் ஒவ்வொன்றும் முக்கிமாய்த் தெரியும். அதுதான் வாழ்க்கை என்ற மாயத் தோற்றத்தை அது ஏற்படுத்தும். அதை எல்லாம் தாண்டி யதார்த்த வாழ்க்கைக்கு எது முக்கியமோ அதை ஏற்றுக் கொள்ளவேணும். அதைத்தான் நான் செய்தேன். இப்போது என்னுடைய கவலை எல்லாம் என்னுடைய குடும்பத்தைப் பற்றியதுதான். உங்களுக்கும் குடும்பம் இருப்பதால் நீங்களுக்கும் அந்தக் கவலையோடுதான் இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களை மீண்டும் சந்தித்ததில் ரொம்பச் சந்தோஷம், வரட்டா..?
எனது பதிலைக்கூட எதிர்பாராமல் அவள் எழுந்து சென்றாள். யன்னலுக்கால் வானம் தெரிந்தது. தெளிந்த வானத்தில் ஆங்காங்கே மேகக் கூட்டங்கள் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டு வேகமாக ஓடிக்கொண்டிருப்பது என் பார்வைக்கு வேடிக்கையாய் இருந்தது. இந்த மேகங்கள்கூட எப்போதாவது கார்மேகமாய் மறைந்து போகலாம். இயற்கையிடம் இருந்து கற்றுக் கொள்ள நிறையவே இருக்கின்றது.
வசந்த காலமும் நிலையற்றதுதான் என்பதை இயற்கையின் மாற்றம் காலமெல்லாம் புலப்படுத்தி நின்றாலும் இப்பொழுதுதான் அதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் எனக்குள் வந்தது. நான்தான் ஏதோ தவறு செய்து விட்டது போல, குறுகிப்போய் அப்படியே உட்கார்ந்திருந்தேன். மங்கிய வெளிச்சத்தில் கணவனோடு கைகோர்த்து அவள் நடனமாடுவது இங்கிருந்தே தெரிந்தது!




### முதலும் வட்டியும்

இராயப்பு நகை அடைவு பிடிப்பவர், வட்டிக்கு காசு கொடுப்பவர்.
எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு திடீரென மாயமானார்.
திரும்பி வந்தவர் எல்லோருக்கும் கையை விரித்தார்.

பதம் பார்க்க பலரும் காத்திருந்தனர்.
ஒருநாள் பொலிஸ் ஸ்ரேசனுக்கு அருகில்,
சாக்கு மூட்டையைக் கவிழ்த்து மொத்தினார்கள்.

மயங்கிய நிலையில் கண்ட பொலிசார்,
“சத்தம் போட்டிருந்தா கலைச்சிருப்போமல்லே”
என்றதற்கு இராயப்பு வாயைத் திறந்து
பே பே என உழறினார்.

வங்காளவிரிகுடாவிற்குள் ஆறு தங்கப்பற்கள் ஜொலித்தன.




03 பக்கத் தொடர்ச்சி

## ஒரு பெண்ணை அதிபராக்க ஏன் தயங்குகிறது அமெரிக்கா?

ஆனால், அமெரிக்காவில் பெண்களுக்கு தெய்விக குணங்களை எல்லாம் சொல்வதில்லை. அதிகாரத்தை கைப்பற்றுவதே ஒரே நோக்கம். அந்த நோக்கத்துக்கு ஒரு பெண் தகுதியானவரா என்பதே அங்கு பார்க்க படுகிறது.




அமெரிக்க மக்களின் மனநிலையே ஒரு பெண்ணுக்கு உச்சபட்ச அதிகாரத்தை அளிப்பதில் பெரும் தயக்கமிருக்கிறது. அமெரிக்கா அதிபர் என்பது உலகம் தழுவிய அளவில் பெரிய அதிகாரம் கொண்ட பொறுப்பு என்கிற அளவில் அங்கு பார்க்கப்படுவதால், அந்தப் பொறுப்பை ஒரு பெண் ஏற்று திறம்பட செய்ய முடியும் எனும் நம்பிக்கை அமெரிக்கர்களுக்கு இல்லை. ஆண் மனநிலையோடுதான் பெண் சமூகமும் இயங்கி வருகிறது.

தெற்கு அமெரிக்கா உள்ளிட்ட பகுதிகளில் டிரம்ப்க்கு கிடைத்திருக்கும் வெற்றி ஆச்சர்யத்தைத் தருகிறது.
கறுப்பின மக்கள் வாழும் பகுதியிலும் டிரம்ப் பெற்ற வாக்குகள் எதிர்பாராத ஒன்று. ட்ரம்ப் வெற்றிக்கு இன்னும் சில காரணங்களைப் பார்க்க முடியும். ஜனநாயக கட்சி தொடர்ந்து இரண்டு முறைகள் ஆட்சியில் இருந்திருக்கிறது. அதனால் இந்த முறை ட்ரம்ப்பை முன்னிறுத்திய குடியரசுக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம். மேலும், அமெரிக்காவில் நிலவும் வேலையில்லா திண்டாட்டம், பல தொழிற்சாலைகள் மூடல் உள்ளிட்ட பலவும் அமெரிக்க மக்களிடையே ஜனநாயகக் கட்சிக்கு எதிரான கோபத்தை உருவாக்கியிருந்தது.

ஹிலரி கிளின்டனின் தோல்வியில், மின்னஞ்சல் விவகாரமும் ஒரு காரணம். என்னதான் ஹிலரி கிளின்டன் ஒரு பெண் என்றாலும், பெண்ணியவாதிகள் பலரும் அவரை பெண்களுக்கு ஆதரவான செயல்பாடுகள் கொண்டவராகப் பார்க்கவில்லை. கிளின்டன் அதிபராக இருந்தபோது, மோனிகா என்ற பெண் தொடர்பான பாலியல் ரீதியிலான புகாரில் அவர் சிக்கினார். இந்த விவகாரத்தில் ஹிலரியின் மௌனமான செயல்பாடுகள் பல பெண்ணியவாதிகளுக்கு அதிருப்தியை தந்தது. அதிகாரத்தின் ருசியை அனுபவிப்பவராகவே ஹிலரியைப் பார்த்தனர்” என்று சொல்கிறார் வாஸந்தி.
பெண் என்பதால் மட்டுமே ஹிலரி தோற்கடிப்பட்டார் எனும் பொதுவான கருத்து பற்றி இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தலைவர்களுள் ஒருவரான உ.வாசுகியிடம் கேட்டபோது,
அமெரிக்க அதிபர் தேர்தல்... ஆண், பெண் என்று பார்க்கப்படுவது இல்லை. குடியரசு கட்சி, ஜனநாயக கட்சி என்றுதான் பார்க்கப்பட்டது. ஹிலரி, ட்ரம்ப் இருவரும் முன்வைத்த கொள்கைகளுமே பெரிய அளவில் வித்தியாசம் இல்லை. அமெரிக்காவில் இருக்கும் பெரும் முதலாளிகள், தொழில் அதிபர்களுக்கு ஆதரவான கொள்கைகளைத்தான் இருவரும் முன்வைத்து பிரசாரம் செய்தார்கள்.

பெண் என்றால் போர் புரிய மாட்டார், ஊழல் செய்யமாட்டார்... அதனால்தான் ஹிலரி வெற்றிபெறவில்லை என்று பேசுவது அர்த்தமற்றது. மேலும் ஹிலரியும், அமெரிக்காவில் இருக்கும் சாதாரண பெண்களின் முன்னேற்றத்துக்கான கொள்கை எதையும் முன் வைக்கவில்லையே. அதனால் பெண்கள் என்றால் இப்படித்தான் எனப் பொதுமைப்படுத்திப் பார்க்க முடியாது.

ஹிலரி ஒரு பெண்ணாக இருந்தாலும், ஜனநாயக கட்சியின் கொள்கையின் பிரதிநிதிதான். ஜனநாயக கட்சி நிலைப்பாடு கடந்த காலங்களில் எப்படி இருந்ததோ, அதே நிலைப்பாடுதான் இவரிடமும் இருக்கும். மேலும் பெண்கள் குறித்த ட்ரம்பின் மோசமான சிந்தனை போக்கும் அனைவரும் அறிந்ததே. பெண்களை வெறும் போக பொருளாக பார்க்கும் ஓர் ஆணாதிக்க மனநிலையும், பிற்போக்கும் கண்ணோட்டமும் கொண்டவர்தான் ட்ரம்ப். இதைப் பற்றி எல்லாம் அமெரிக்க மக்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்பதையே இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.




இருவரையும் ஒப்பீட்டளவில் பார்த்தால் ஹிலரியைவிட பெரிய அபாயம் ட்ரம்ப் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அமெரிக்காவில் முக்கியமான பொருளாதார பங்கு ஆயுதத் தொழில்தான். அதனால் அமெரிக்காவைப் பொறுத்தவரை உலகின் மற்ற நாடுகளில் போரை உருவாக்குவது அல்லது போருக்கான சூழலை உருவாக்குவது. இதை முன்னெடுப்பது யார் என்பதைத்தான் பெரும்பான்மை அமெரிக்க மக்கள் எப்போதுமே பார்ப்பார்கள். இந்தத் தேர்தலிலும் அப்படியொரு நம்பிக்கையோடு ட்ரம்ப்பை தேர்ந்தெடுத்திருக்கிறது அந்த பெரும்பான்மை சமூகம்” என்றார் வாசுகி. **நன்றி வீரகேசரி**


1G வது ஆண்டு நிறைவான சேவை
**Kaneen Electronics**
Internet-sat, Receiver,Camera-Alam கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்
சகல Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்
Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal



உங்கள் தாய் மொழியில்....
**HK Hammacher**
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்





ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,
துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய
வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத்
தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: **0172 57 35 454**
**HK Hammacher**
Schleswiger Str .5
**44145 Dortmund**
**0231 81 55 94**
**0173 56 46 651**

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



**A.tu.Z Dolmetscher -**
**und Übersetzungsdienst**
**Für alle weltsprachen**
**மொழிபெயர்ப்புச் சேவை!**
**V.Ramakrishnan**
**Tel:0201 977 4957**
**Mobile 0176 28 44 85 89**
**0152 11 98 9603**
**Fax:0201 24 82 888**





உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com

10 பக்கத் தொடர்ச்சி

## அமானுஷ்யத்தின் அறிவியல் விஞ்ஞானம்





மனிதனின் இந்த இரண்டு கண்களும் உள்ளதை உள்ளபடி ஏற்றுக் கொள்ளும் சாதாரண சக்தியைக் கொண்டவைகள். மூன்றாவதாக உள்ள அகக் கண்ணுக்கே ஆராயும் சக்தியுள்ளது அதனால்த் தான் மூன்றாம் கண் திறந்தோரை முனிவர்கள் என்று கூறுகின்றோம். அதனால் தான் முனிவர்களுக்கு அமானுஷ்யத்தைக் கண்டு பயமில்லை காரணம் அதன் அறிவியல் உண்மையை ஆராயும் ஆற்றல் அவர்களிடம் இருந்துள்ளது. இன்று அவர்கள் ஆராய்ந்து சொன்ன ஒரு சில அமானுஷ்யத்தின் அறிவியல் உண்மைகள்.

ஆனால் இந்த அறிவியலை ஆராயும் ஆற்றலை வளர்க்க வேண்டும் என்றால் எம் தாய் மொழி தமிழை ஒழுங்காகக் கற்றுக் கொண்டாலேயே எல்லோருக்கும் மூன்றாவது கண் திறக்கும் என்று கூறப்படுகின்றது. காரணம் என்னவென்றால் மொழி என்பது பெயரிடுவது ஆகும். ஆரம்பத்தில் மனிதனும் மிருகங்கள் போன்று ஒலியெழுப்பி உணர்வைப் பகிர்ந்தான், அதைத் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியடைய மனிதன் பொருட்களுக்கு, உணர்வுகளுக்கு, செயற்பாட்டிற்கு என்று அனைத்திற்கும் பெயர் சூட்டத் தொடங்கினான். அடுத்த கட்டமாக நிலைப்பாட்டுப் பிரிவைக் கண்டு பிடித்தான். அதாவது யார் சொல்வது எந்தக் காலத்தைச் சொல்வது என்று நிலைப்பாட்டுப் பிரிவைப் பிறிதாகப் பெயரிட்டனர். இவ்வாறே மொழி வளர்ந்தது. இதைப் புரிந்து கொண்டால், ஒரு பொருளிற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது எந்த அடிப்படைக் குணத்தைக் கொண்டு பெயர் சூட்டப் பட்டது என்ற அறிவு ஞானம் பிறக்கும்.


கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே உருவான மொழி தமிழ் என்பதால், பொதுவாக அனைத்துப் பொருட்களதும் அடிப்படையும் எங்கள் மொழியில் இருக்கும். ஆகவே முதலாவதாக பார்த்த அமானுஷ்யத்தின் பெயர், சதுப்பு நிலத்தருகே துரத்தும் பேயின் பெயர் கொள்ளிவால்ப் பிசாசு ஆகும், கொள்ளி என்றால் நெருப்பு ( நெருப்புக்கு கொள்ளி என்று பண்டைய தமிழில்க் கதைப்பார்கள்.) வால் என்று சொல்லப் படுவது மனிதன் வேகமாக ஓடும் போது வளி மண்டலத்தில் ஏற்படுத்தப்படும் வாய்வு வெற்றிடமே ஆகும். இதற்க்கு இன்னுமோர் உதாரணம் வானில் தோன்றும் வால் வெள்ளியாகும். இழுபடும் ஒளியை வால் வெள்ளி என்பது போல விடுபடும் வளி வெற்றிடத்தை நெருப்பு வால் அதாவது கொள்ளிவால் என்று சொல்லப் படுகின்றது, இங்கு பிசாசு என்பதன் அர்த்தம் பிரிவூ அசைவு என்பதன் மருகிய பதமே பிசாசு என்று மாற்றப்பட்டுள்ளது. அதாவது நாம் ஓடும் பொழுது ஏற்படும் காற்றின் பிரிவால் தோன்றும் வெற்றிடத்தில் அசையும் நெருப்பு என்பதே கொள்ளிவாய்ப் பிசாசு என்பதன் அர்த்தமாகும்.

தமிழர்களாகிய எமக்கே தமிழில் உள்ள ஒரு பொருளின் அர்த்தம் தெரியாத காரணத்தால் பிசாசு என்றால் கொடூர பொருள் என்று நம்பத் தொடங்கிவிட்டொம், அதாவது முதலாவது முகக் கண் பார்க்க இரண்டாவது மனக் கண் பதியவைக்க மூன்றாவது அகக் கண்ணை திறக்காமல் மூடிக் கொண்டே அறிவிலியாக அனைத்தையும் நம்பி உள்ளோம் என்பதே உண்மையாகும்.

இரண்டாவதாக வீடுகள் இரவில் அசைவதற்குக் காரணம் என்னவென்றால் வாஸ்து என்ற கலையே ஆகும், வாஸ்து என்பது ஒரு புவி சார்புடைய அறிவியல் ஆகும். இன்றைய விஞ்ஞானம் ஆச்சரியப்படும் ஒரு பாரிய விடையம் இந்த புவியியல் வாஸ்துவாகும், வாஸ்துவை முறையாகாது தெரிந்தவர்கள் கணக்கிட்டுக் கொடுக்கக் கட்டப்பட்ட கோவில்கள் இன்று விண்வெளி விஞ்ஞானம் விருத்தியடைய மேலிருந்து பார்த்தால் அனைத்தும் ஒரே நேர்கோட்டில் இருப்பதை பார்த்து ஆச்சரியப் படுகின்றனர், இதற்க்கு வாஸ்துவே காரணம். இன்னுமோர் ஆச்சரியமான உண்மை என்னவென்றால் திருநள்ளாறு கோவிலை விண்கலங்கள் எதுவுமே படமெடுக்க முடியாது, இந்தத் திரு நள்ளாறு கோவில் சனிபகவானின் கோவிலாகும். இதையெல்லாம் துல்லியமாக செயற்படுத்த வாஸ்துவென்ற கலை முக்கியம், இக்கலையில் சிறந்தவர்கள் தமிழர்கள் என்பதற்கு எம்முடைய கோவில்களே தகுந்த உதாரணமாகும். ஆனால் அவ்வாறு வாஸ்து பார்க்காமல் பூமியின் அடியில் உள்ள தகடுகள் பொருந்தும் இடங்களில் வீடுகள் கட்டினால் இரவு நேரங்களில் தட்ப வெப்பநிலை மாறும் பொது புவியின் உள்ளே உள்ள தகடுகள் அசையும் அந்த அசைவின் காரணமாக வீடுகள் அசைகின்றன பொருட்கள் அசைகின்றன.

இதே போன்று பிறர் நினைப்பதை உணர்வதும் ஒருவகை விஞ்ஞானமே. மனிதனின் சிந்தனைகள் ஒருவகை அலைவடிவில் உருவாகின்றன அதாவது தொலைக்காட்சி அலை வானொலி அலை போன்று மனித எண்ணங்களுக்கும் ஒரு வகை துல்லியமான அலை வரிசை உண்டு. அதை உணரும் வகையில் உணரிகளை உருவாக்கினால் அனைவராலும் பேசாமலேயே புரிந்து கொள்ளலாம். உதாரணமாக 50 வருடம் சேர்ந்திருக்கும் கணவன் மனைவித் தம்பதியர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தனது துணை என்ன நினைப்பார் என்பதை அறிந்து வைத்திருப்பார்கள்.

இவ்வாறு நாம் ஆராய்ந்து பார்க்காமல் நம்பும் விடயங்களும் பயம் கொள்ளும் விடையங்களுமே அமானுஷ்யம். இன்று முதல் புரியாத புதிராக ஒன்று நிகழ்தேறினால் அதன் பின்னே ஆழ்ந்துள்ள அடிப்படை விஞ்ஞானத்தை அறிந்து கொள்வோம் என்றாலே பயம் நீங்கும், மூட நம்பிக்கை குறையும். தமிழைக் கற்போம்,தன்னம்பிக்கை வளர்ப்போம்,தரணியே வியந்திட தனித் தன்மை பெறுவோம்.





யேர்மனியில் ஆடற்கலாலய மாணவிகள் செல்விகள் சுவேதா ஜெயக்குமார், சபிதா தவநேசன் ஆகியோரது பரதநாட்டிய அரங்கேற்றம்

யேர்மனியில் கடந்த 29.10.2016 தீபாவளிதினத்தில் ஆடற்கலாயமாணவிகள் செல்விகள் சுவேதா ஜெயக்குமார்,சபிதா தவநேசன் ஆகியேரது பரதநாட்டிய அரங்கேற்றம் நடராஜர் பூஜையுடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக இடம் பெற்றது.
ஆரம்பம் முதல் இறுதி வரை அபிநயப்பூக்கள் சொரிந்த வண்ணமே இருந்தன. ஒரே மேடையில் இரு பரதமணிகள் ஆடுவது என்றால் பார்ப்பவர் வழிகளில் ஒரு ஒப்பீடு எப்பொழுதுமே இருக்கும். இந்த ஒப்பீடு எந்த இடத்திலும் மதிப்பீட்டைக் குறைக்கா வண்ணம் ஆடற்கலாலயத்தின் இளம் வாரிசு நாட்டியச் சுடரொளி நிமலன் சத்தியகுமார் அவர்கள் நாட்டிய மங்கையர் இருவரையும், அவரவர்க்கு ஏற்றவாறு செதுக்கி மேடையில் அவர்களை சிறப்புற அபிநயம் புரியவைத்திருந்தார்.

அவரது குருவும், அன்னையுமாகிய ஆடற்கலைமணி றெஜினா சத்தியகுமார் அவர்கள், தனது மாணவர்களும் பிள்ளைகளுமான செல்வன் நிமலன் சத்தியகுமார்,செல்வி தீபனா சத்தியகுமார் இணைந்து நட்டுவாங்கம் செய்ய, முன்வரிசையில் அமர்ந்திருந்து ஒரு பார்வையாளர் போல் மிகவும் இரசனையுடன் ஒவ்வொரு நடனத்தையும் இரசித்தவண்ணம் இருந்தார். இது ஒரு வாரிசு உருவாகிவிட்டான் என்ற திருப்தியில் உருவான அடக்கமும், அகமகிழ்வுமாகப் பார்ப்பவர்மனதைக் கொள்ளைகொண்டது. பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்த அனுஷா சற்குணநாதன் ( பரதாஞ்சலி நாட்டிய அதிபர் சுவிஸ்) தனது உரையில் நட்டுவாங்கம் புரியும் இளம் கலைஞன் நிமலன் அவர்களையும், நடனம் புரிந்த மங்கையரது அபிநய சுத்தங்களையும், வியந்து உரைத்தார்.

சிறப்புவிருந்தினராக கலந்து சிறப்பித்த வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தனது உரையில், இயல்பாகவே பரதத்திற்குரிய அத்தனை அம்சங்களும் பொருந்திய இந்த இரு நாட்டிமணிகளையும் ஒரு சிற்பி எப்படி தேவை இல்லாதவற்றை மட்டும் நீக்கிவிட உள்ளிருந்து தெய்வம் தோன்றுமோ! அதுபோல அழகாக தெய்விகச் சிறப்புடன் அவர்களிடம் இருந்த பரதக்கலையை வெளிக்கொண்டு வந்துள்ளார் நிமலன் சத்தியகுமார் என்றார்.
வாழ்த்துரைகளை திருமதி யஸ்ரின் உதயதேவி ( தமிழாலய நிர்வாகி கிரிபீல்ட்) திருமதி பாமினி குமாரச்சந்திரன் (சாயி இசைக் கல்லூரி யேர்மனி லண்டன்) சிவஸ்ரீ கிரிதரக்குரக்கள், திரு.செல்லக்கிளி ஆனந்தராஜன்,திருமதி சாவித்திரி இமானுவேல் (சலங்கை ஒலி நாட்டியப்பள்ளி அதிபர்) வழங்கினர்.
நட்டுவாங்கம் நிமலன் சத்தியகுமார் அவர்கள்புரிய, பாடல்களை ஏழிசைவேந்தன் எஸ்.கண்ணன் அவரது புதல்வி அனுஷ்யா கண்ணன் அவர்களும் சிறப்புறப்பாட மிருதங்கம், மிருதங்க கலாஜோதி லகிபன் தர்மபாலன், வயலின் கலைவித்தகர் செல்வன் பிரவீன் சாரங்கன்,தபேலா தபேலாவித்துவான் சண்முகலிங்கம் தேவகுருபரன் ஆகியோர் அற்புதமாக வாசித்து அரங்கேற்றத்தை மெருகேற்றினர்.
வெற்றிமணி அரங்கேற்ற மங்கையர்கள் செல்விகள் சுவேதா ஜெயக்குமார்,சபிதா தவநேசன் ஆகியோரது திறமைகண்டு அவர்கள் கலைவளர வளர்கலை விருது வழங்கிக் கௌரவித்தது. அரங்கேற்ற நிகழ்வை அளவாக அழகாக இராமேஸ் ஜெயக்குமார், வந்தனா முருகதாஸ் ஆகியோர் தொகுத்துவழங்கினர்.







# யேர்மனி குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் மேய்சிலிர்க்க வைத்த சூரன்போர்








கடந்த மாதம் யேர்மனி குமஸ்பார்க் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் சூரன்போர் நிகழ்வு மிகச் சிறப்பாக இடம்பெற்றது. கடந்த 22 வருடங்களாக திரு.இரவிந்திரன் குடும்பத்தினர் இத்திருவிழாவினை நடத்தி வருகின்றனர். இவ்வருடம் பல நூறு அடியவர்கள் கலந்து கொண்டனர்.
சூரனையும் முருகனையும் தோள்களில் சுமந்து சூரசம்காரம் செய்யும் காட்சி தாயகத்தை அப்படியே நினைவூட்டியது. தாயகத்திலும் சூரனைத் தூக்கவே இளைஞர் பட்டாளம் போட்டியிடும். இங்கேயும் அந்த அழகான போட்டி தெரிந்தது. மாமரத்தினுள் மறைந்து வரும் சூரன் மற்றும் வேறு வேறு தலை களுடன் வரும் சூரன் என்று அட்டகாசமாக இருந்து.

புலம்பெயர் நாட்டில் இவ்வாறு சிறப்பு சூரனை இளைஞர்கள் தோள்களில் சுமந்து வீரசகாசம் புரிய, தாயகத்தில் மாத்தளையில் சூரன் பிக்கப் வாகனத்தில் வந்து முருகனோடு போர்புரிந்தது வேதனை அளிக்கிறது. மாற்றும் தேவைதான் அது அவசியமாகும் இடத்தில் மட்டுமே. ஆடம்பரத்திற்காக மாற்றங்கள் நிகழ்வது ஆரோக்கியமானது அல்ல.

இறுதியில் முருகனின் அருகே வேலும் மயிலும் சேவலும் அழகாய் வீற்றிறிருந்த காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. சேவலும் மயிலும் பக்தர்களின் ஆரவாரத்தில் பறக்காமல் அப்படியே முருகனோடு ஒன்றாக இருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. இது போன்ற திரு விழாக்களில் பெற்றோர்கள் மட்டுமன்றி அவர்கள் தமது பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் அழைத்துவந்து இந்தப் பண்பாட்டுக் கோலங்களைக் காட்ட வேண்டும். இப்படியான அரிய நிகழ்வுகள் இப்போ தாயகத்திலும் சில நகரங்களில் அரிகிப்போகிறது அந்தப் பிக்கப் மோகத்தால்.



படங்கள்:வெற்றிமணி





ஸ்ரீ இலஷ்மி நாராயண
ஜோதிடாலயம்

இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும் பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த

பண்டித் கோவிந்தறாயு சாஸ்திரி

Tel: +49 152 190 315 55
+49 152 110 275 38

இறைவன் அருளால் கடந்தகால, நிகழ்கால, வருங்கால நடப்புக்கள் பற்றி விபரமாகக் கூறுகிறார்

எவ்வித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!

பிரபல மந்திரிமார்களுக்கும், நடிக நடிகைகளுக்கும் ஜோதிடம் பார்த்துப் புகழ் பெற்றவர். கைரேகை, முகரேகை, ஜாதகம், ராசி நட்சத்திரமும் பார்த்து பிறந்த ஆண்டு, திகதி பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப் போவது என்பவற்றைத் துல்லியமாக்க கணித்துச் சொல்வார்.

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்,
குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு,
திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம்
வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள்
ஆரோக்கியம், பாக்கியம், வியாழ முன்னேற்றம்
செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள்,
கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்

உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!

Praba Super markt _ Hindenburgstrasse 212 /41061 Mönchengladbach

Mönchengladbach
நகரில்...

Praba Super markt

15 மார்கழி தொடக்கம்
14 தை 2017 வரை

அதிரடி அதிரடி அதிரடி



எவரும் எதிர்பாராத சிறப்பு விலைக்கழிவில் உங்கள் வீட்டிற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் மீன் மரக்கறி என்பவற்றை வாங்குவதற்கு முன்சன்கிளட்பாக் நகரில் நாடவேண்டிய சிறந்த இடம்
Praba Super markt
சித்திரம் தொலைக் காட்சி சேவையினைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்.
ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி முதல் 10ம் திகதி வரை
மளிகைப்பொருட்கள் அனைத்தும் 10% விலைக்கழிவில்
பெற்று பயனடையுங்கள்.

Email. kavinmovie@live.de

Praba Super markt
Hindenburgstrasse 212
41061 Mönchengladbach

Tel. 021612946428 Mob. 015778247701



# திருமந்திரமும் வாழ்வியலும் 13

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

## திருமந்திரம் கூறும் மருத்துவம்



**நோய்வராமல் தடுக்கும் மருந்து எமது உடலுக்குள்ளேயே இருப்பதாக திருமூலர் எண்ணாயிரம் என்னும் நூலில் உள்ள பாடல் சொல்கிறது.**

மனிதனின் நல்வாழ்க்கைக்கு உடல், உள்ளம் இரண்டும் நலமுடன் இருத்தல் மிக அவசியமாகும். இக்கூற்றை வலியுறுத்தி திருமூலநாயனார் திருமந்திரத்தில் 724 ஆம் பாடலில் "உடம்பார் அழியில் உயிரார் அழிவர்.. " எனவும், 725 ஆம் பாடலில் "உடம்பினை முன்னம் இழுக்குஎன்று இருந்தேன்.. " எனவும் பாடியுள்ளார். அறம் செய்வதின் மூலம் சில வருத்தங்களைத் தடுக்கலாம் பாடல் எண் 263

"இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக(ம்) உரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே".

இருமல், இரத்தம் குறைவதால் வருகின்ற நோயான இரத்தசோகை, சளி சம்பந்தமான காசநோய், கணைச் சூடு, உஷ்ணத்தால் உண்டாகும் உபாதைகள் எல்லாம் தருமம் செய்யாதவர்களைத் தேடி வரும் நோய்களாகும். உயிரை அச்சுறுத்தும் இடி, மின்னல் தாக்குதல், கழுத்துக் கட்டி, பிளவை ஆகிய நோய்கள் தருமம் செய்து வாழ்பவர்களைச் சேரமாட்டா.
நோய்வராமல் தடுக்கும் மருந்து எமது உடலுக்குள்ளேயே இருப்பதாக திருமூலர் எண்ணாயிரம் என்னும் நூலில் உள்ள பாடல்

"மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனச் சாலும்
மறுப்பது இனிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே"

என்னும் பாடல் மூலம் கூறியுள்ளார். இந்நூல் திருமூல நாயனார் காலத்திற்குப் பின்பு திருமூலர் என்னும் பெயருடன் வாழ்ந்தவரால் எழுதப்பட்டது எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிறுநீரின் அருமையைப் பற்றி கூறும் பாடல் எண் 845

"உடலில் கிடந்த உறுதிக் குடிநீர்க்
கடலில் சிறுகிணற்று ஏற்றம்இட்டால் ஒக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக்கு இறைக்கில்
நடலைப் படாதுஉயிர் நாடலும் ஆமே".

உடலில் இருக்கும் உடலுக்கு உறுதி தருவதான சிறுநீரானது கடலுக்குப் பக்கத்தில் சிறிதாக ஒரு கிணறு வெட்டி அதில் ஒரு ஏற்றத்தை வைத்துத் தண்ணீரை இறைத்து மேல் ஏற்றுவது போன்ற அமைப்புடையதாகும். (உயிர்ச் சத்து ஊறும் மூலாதாரத்திற்கு அருகே சிறு நீர்த் தாரை உள்ளது குறிப்பிடப்படுகிறது) உடம்பின் ஒரு பக்கமாக கீழ் நோக்கிச் செல்லும் காம வாயுவை மூலவாயுவுடன் மேலேறச் செய்தால் உடலுக்கு வரும் துன்பம் எதுவும் இல்லாமல் உயிர் வாழலாம்.

சிறுநீரை வீர மருந்தென கூறும் பாடல் எண் 850
"வீர மருந்துஎன்றும் விண்ணோர் மருந்துஎன்றும்
நாரி மருந்துஎன்றும் நந்தி அருள் செய்தான்
ஆதி மருந்துஎன்று அறிவார் அகலிடம்
சோதி மருந்து இது சொல்ல ஒண்ணாதே".

சிறுநீர் உடலுக்கு வீரியத்தைத் தருகின்ற மருந்தென்றும், விண்ணுலகத் தேவர்கள் மருந்து என்றும் பெண் தரும் பேரின்ப மருந்தென்றும் எம்பெருமான் நந்திதேவன் அருளிச் செய்துள்ளான். இதனை எல்லாவற்றிற்கும் முதலான மூல மருந்து என்பதைத் தவயோகிகள் தெரிந்து வைத்துள்ளனர். அகன்ற இவ்வுலகிற்கு வழிகாட்டும் ஒளி போன்ற மருந்து இதுவே. இதன் அருமை பெருமைகளைச் சொல்லி மாளாது. **சிறுநீரின் எப்பகுதியை குடிக்கவேணும்** எனக் கூறும் பாடல் எண் 848

"கரைஅருகே நின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகர வல்லார்க்கு
நரைதிரை மாறும் நமனும் இங்கில்லையே".

உயிரணு ஊறும் கரைப்பக்கம் இருந்துவரும் சிறு நீர்த்தாரை வெளியே விட்டுவிட வேணும் என்பவர்கள் அறிவற்ற மூடமதியினர். வெளியேறும் சிறுநீரில் நுரைத்து முதலில் வருவதையும், தளர்ந்து முடிவில் வருவதையும் தவிர்த்து இடையில் வருவதைப் பருகியிருப்பவர்களுக்கு என்றும் **இளமையோடு எம பயம் இல்லாது இருக்கலாம்.**
எவ்வளவு சிறுநீரை குடிக்க வேணும் எனக் கூறும் பாடல் எண் 847

"நூறு மிளகு நுகரும் சிவத்தின்நீர்
மாறும் இதற்கு மருந்துஇல்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளிஉச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயிர் ஆமே".

சிறுநீரை நூறு மிளகு அளவு உட்கொள்ள வேண்டும். இதை தலையில் தேய்த்தால் தலைமுடி கருமை நிறம் அடையும். சிறுநீரைக் குடித்தால் **உடம்பு பொன்னாகும்** என்பதை கூறும் பாடல் எண் 845

"தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரும் ஓராண்டில் ஊனம் ஒன்றில்லை
வளிஉறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதரும் காயம் கனகம் அதாமே".

சிறுநீரைக் குடித்தால் ஓராண்டிற்குள் உடம்பில் ஒருவகை ஒளி தோன்றும்இ உடலுக்கு ஒரு குறைவும் ஏற்படாது. பிராணனாகிய மூச்சுக் காற்று பிரணவத்தில் லயித்திருக்கும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும். உடம்பு பொன்போல் பிரகாசிக்கும்.
**உடம்பு இளைக்க வழி கூறும் பாடல்** எண் 849

"அளக நல்நுதலாய் ஓர் அதிசயம்
களவு காயம் கலந்த இந்நீரில்
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளும் கபாலமே".

மிளகு, நெல்லிக்காய், கஸ்தூரி மஞ்சள், வேப்பங்கொழுந்து ஆகியவற்றை பொடி செய்து சிறுநீரோடு சேர்த்து உட்கொண்டால் உடம்பு இளைக்கும், தலைமுடி கருக்கும்.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!
KS Services
EVENT MANAGEMENT


Berliner Str. 49- 40880 Ratingen


E-Mail. info@ksservices.de Web. www.ksservices.de


Tel. 0049 21025300247 Mobil. 004917610247194
00491722192035


நேசத்துக்குரிய ஐரோப்பிய வாழ் வாடிக்கையாளர்களே..!
(Germany, France, England, Denmark, Swiss, Netherland, Belgium, Italy, Norway, Sweden, Finland)
ADCHAYA INTERNATIONAL
Adchaya International
வழங்கும்
மொத்த விற்பனை விலையில் ஓர்
சில்லறை விற்பனைத் திருவிழா...!
Happy New Year 2017
ஐரோப்பாவில் எங்கிருந்தாலும் பரவாயில்லை
ஒரு MISSED CALL கொடுங்க EASY யா SHOPPING பண்ணுங்க...!
தனித்தன்மை வாய்ந்த அல்ட்ரா தயாரிப்புகள் இப்போது ஐரோப்பாவில் எங்கும் பரபரப்பான விற்பனையில்...
ULTRA DURA +
ULTRA MICRO
GRIND + GOLD
ULTRA wet grinder PERFECT +
WITH ATTA KNEADER & COCONUT SCRAPER
✦ 1 வருட உத்தரவாதம்
✦ எலெக்ட்ரானிக் ரைமர் பொருத்தியது
✦ அரைத்து முடிந்ததும் பஸ்ஸர் ஒலி
✦ 150 வாட் மோட்டார் சிறந்த அரவைக்கு
ULTRA PRESSURE COOKER - ENDURA+
✦ சமைத்த பின்பும் உணவு 2 மணி நேரம் சூடாகவே இருக்கும்
✦ 10 வருட உத்தரவாதம்
✦ துரித சமையலுக்கு ஏற்றது
✦ அதிக அழுத்தம் தாங்கக்கூடிய கீழ்ப்பகுதி
✦ இண்டக்ஷன் ஸ்டவ்விலும் சமைக்கலாம்
✦ கவர்ச்சியான மிடுக்கான தோற்றம்
Electric Rice Cooker
தமிழ்மக்களின் ரசனைக்கேற்ப வடிவமைக்கப்பட்டு, நீடித்து உழைக்கும்
AYVIN RICE COOKER
பலதரப்பட்ட அளவுகளில் ஐரோப்பாவெங்கும் விற்பனையில்...!
AYVIN THE PERFECT CHOICE
உங்கள் இல்லத்தில் தெய்வீக மணம் பரப்பும் அகர் பத்திகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்கின்றோம். மணம் கமழ...! மனம் மகிழ்ச்சியில் துள்ள...!
நாக் சம்பா அகர் பத்திகள்
NAG CHAMPA AGARBATTI
World's Largest Exported Incense
NAG CHAMPA AGARBATTI
SPIRITUAL HEALING INCENSE
ROSE INCENSE
SANDALWOOD INCENSE
எமது CALL CENTRE க்கு (0049) 23113093010 என்ற எண்ணிற்கு
ஒரு MISSED CALL கொடுத்தால் போதும்..!
ஐரோப்பாவில் நீங்கள் எங்கிருந்தாலும் நாங்களே உங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை கேட்டறிந்து 2, 3 தினங்களுக்குள் நீங்கள் ஆர்டர் செய்யும் பொருட்கள் உங்களுக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்படும்...!
• 120 EUR,GBP,CHF மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 49 EUR,GBP,CHF பெறுமதியான ஓர் RICE COOKER அல்லது ROTTI MAKER FREE ! FREE ! FREE !
இச்சலுகை 18.11.2016 முதல் 15.01.2017 வரை ஐரோப்பாவில் எங்கிருந்தும் எங்களிடம் நேரடி கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும்..!
• உங்கள் உறவுகள் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்து அறிமுகச் சலுகையாக 15 EUR,GBP,CHF தள்ளுபடி பெறுங்கள்...
Premier Super-g Mixer Grinder
ஐரோப்பாவின் தரச் சான்றிதழ் (ce) பெற்ற ஒரே மிக்ஸி..!
Anjarai petti (Masala Box)
Puttupaanai
திருவலை
COCONUT SCRAPPER
STAINLESS STEEL BLADE
AJ HOME APPLIANCES GMBH
Premier Steamer
Designed for you
தரமான BRAND சமையலறை சாதனங்கள் தள்ளுபடி விலையில்..! அட்சயாவில் வாங்கும் தரமான தகுதியான அன்பளிப்புகள் உங்கள் உறவுகளை நிச்சயம் பரவசப்படுத்தும்...!
Juicer
Premier Non-Stick Handi
Traditional taste trendy new way.
Premier Non-Stick Paniyaram Pan
Megic Press
Thosaikkal
மேலதிக விபரங்களுக்கு :
Adchaya International, Alter Hellweg-115 - 117, 44379 Dortmund, Germany
0049 ( 0 ) 23113091030 Mobile : 0049 ( 0 ) 17663092804, email : adchayagermany@yahoo.com


உங்கள் திருநாளுக்கு தொலை தூரத்தில் நாங்கள் இல்லை! இன்றும் என்றும் உங்களோடு நாங்கள்!!!
Thushi -Deko
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....
Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram
நீங்கள் காணும் அலங்கார மணவறைகள்
யாவும் கனவல்ல நிஜயங்களே!
எம் கையிருப்பில்
அத்தனையும் நிஜயங்களும்!
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Tel:02305 - 85945 - 0176 608 108 13
Thushiyanthan.
Thiruselvam





வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333
புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 14ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்



## நவவலரது ஆழமானதும் அகலமானதும் அறிவு...

20 ம் பக்கத் தொடர்ச்சி....



அக்காலப் புலவர்களும் பண்டிதர்களும் தாம் கற்ற ஏட்டுச் சுவடிகளையும் மற்றும் குறிப்புக்களையும் ஏனையவர்கள் கற்றுத் தேறுவதற்கு அல்லது அதன் பயனைப் பெறுவதற்கு அனுமதிக்காதிருந்தனர். தமது குறிப்புக்கள் அனைத்தையும் அவர்களின் இறுதி நெருங்குகின்ற போது தீயில் இட்டு சாம்பலாக்கி விட்டுத்தான் அவர்கள் இறைவனடி சேர்வார்களாம்.

நாவலர் அவர்கள் அதற்கு மாறாக அச்சியந்திரங்களை இந்தியாவில் இருந்து தருவித்து அவ்வாறான அரிய ஏட்டுக்குறிப்புக்களையும் மற்றும் வேத நூல்களையும் அச்சில் பதிப்பிட்டு நூல்களாக வடிவமைத்து எல்லோரும் வாசிக்க இடம் அளித்தமை மிகச் சிறப்பான ஒரு நிகழ்வாகும்.

சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற முனைப்புடன் எமது மக்கள் கல்வி அறிவிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஏட்டுச்சுவடிகளையும் மற்றும் இன்னோரன்ன வேதக் குறிப்புக்களையும் தேடி எடுத்துவந்து அச்சேற்றி அவற்றை தமிழ் மற்றும் சமய கல்விகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு நூல்களாக வழங்கியமை அவர் சமயத்தின் மீது வைத்த பக்தியை எடுத்துக் காட்டுகின்றது.

கல்வித்துறையில் தீர்க்க தரிசனம் கொண்டிருந்தவர் நாவலர்.இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது 1947ம் ஆண்டில். ஆனால் 1909ம் ஆண்டில் சுப்ரமணியப் பாரதியார் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே...என்று பாடியிருந்தார்.

அவர் இறந்தது 1921ம் ஆண்டில். அப்படி என்றால் வரப் போவதைத் தீர்க்க தரிசனமாகக் கண்டு பாரதியார் பாடிய படியால் அவரைத் தீர்க்க தரிசி என்று அழைக்கின்றோம்.அதே போன்ற தீர்க்க தரிசனம் கொண்டிருந்தார் நாவலர். நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் நிகழப் போகின்றதை நூறு ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்திருந்தார் நாவலர். சி.டப்லியூ .டப்லியூ. கன்னங்கரா என்ற அமைச்சர் இலவசக் கல்வியை ஆரம்பித்தது 1945ம் ஆண்டில். அப்போது அச்செயல் உலகிலேயே வேறெங்கும் நடைபெறாத மிகப் பெரிய சாதனையாகக் கொண்டாடப்பட்டது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1846ம் ஆண்டில் இலவசக் கல்வியை நாவலர் ஆரம்பித்திருந்தார். இது அவரின் தீர்க்க தரிசனத்திற்கு எடுத்துக்காட்டு. நான் வடமாகாண முதலமைச்சர் என்று அறிந்ததும் டெல்லியில் நடந்த உலக இந்துக்களின் பொருளாதார மகாநாட்டின் போது ஒரு விஷ்வ ஹிந்து தலைவர் கூறினார் "உங்கள் நாவலர் தான் எங்களுக்கெல்லாம் முன்னோடி அவரே எங்கள் பாத்திர மாதிரி சுழடன ஆழன நட என்று.

அடுத்து தாய்மொழி மூலம் கல்வி இலங்கையில் படிப்படியாக ஏற்கப்பட்டு 1963ம் ஆண்டில் பி.ஏ. (BA) பரீட்சை முதன் முறையாக தாய்மொழியில் நடைபெற்றது.

சட்டக் கல்லூரியில் தமிழ் மொழிமூலம் முதன் முதலில் விரிவுரைகளை நான் 1971ம் ஆண்டில் தொடங்கிய போது தென்னிந்தியாவிலே உள்ள உயர் கல்விக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், சட்டக் கல்லூரிகளிலும் கலையியற் பாடங்களைக் கூட ஆங்கிலத்திலேயே நடாத்தினர்.

சட்டத்தைத் தமிழில் படிப்பிக்க முடியும் என்று அவர்கள் உத்தியோ கபூர்வமாக நினைக்கக்கூட இல்லை. இன்றும் அப்படித்தான். நாவலர் காலத்தில் தமிழ் நாட்டில் இருந்த முக்கிய பாடசாலைகள் யாவும் இன்றும் ஆங்கிலத்தையே போதனா மொழியாகக் கொண்டிருக்கின்றன.

நாவலர் கல்வி பயின்றது கூட அவ்வாறான ஒரு பாடசாலையிலேயே. அப்படி இருந்தும் ஆங்கிலேயர் எம்மை ஆண்டு கொண்டிருக்கும் காலத்தில்1848ம் ஆண்டிலேயே தான் தாபித்த வித்தியாசாலையில் தமிழையே எல்லாப் பாடங்களுக்கும் போதனா மொழியாக ஆக்கினார்.

தாய்மொழி மூலம் கற்பிப்பதே சிறந்தது என்று அறிந்திருந்தவர் நாவலர். அந்த விதத்தில் அவரின் தீர்க்க தரிசனம் இதிலும் புலனாகின்றது.அடுத்து 1848ல் நாவலர் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். எமது அரசாங்கமோ 1965ம் ஆண்டிலேயே GCE பரீட்சைக்கு சமய பாடத்தைக் கட்டாயமாக்கியது. இலங்கையின் கல்விப் போக்கு எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று ஈற்றிலேதான் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

நாவலர் சுமார் 100 வருடங்களுக்கு முன்னரே சமயக் கல்வியை மையமாக வைத்து ஏனைய யாவற்றையும் அதற்குத் துணையாக்கித் தமது கல்வித் திட்டத்தை அமைத்திருந்தார்.

நல்லொழுக்கத்திற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழி வகுப்பதே கல்வியின் முக்கிய நோக்கம் என்பதே ஆறுமுகநாவலரின் திட்டவட்டமான முடிவாக இருந்தது. இதைத்தான் இன்றைய இலங்கை அரசாங்கமும் பலதையும் படித்தறிந்தபின் வலியுறுத்துகின்றது. ஆகவே நாவலர் ஒரு தீர்க்கதரிசி என்பதில் மாற்றுக் கருத்தெதுவும் இருக்கத் தேவையில்லை.

ஆலய நித்திய நைமித்திய பூஜை பாராயணங்கள் முறையாக நடைபெறாவிட்டால் அல்லது கட்டடங்கள் வேத விதிமுறைகளுக்கு ஒப்பானவையாக அமையப்பெறாவிட்டால் அவை பற்றிக்கடுமையாக விமர்சிப்பதுடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபடுவாராம் நாவலர்.இதனால் கோவில் நிர்வாகஸ்தர்களும் வேறு பலரும் நாவலர் பற்றி வன்கருத்துக்களைப் பரப்ப முயற்சித்தனர். ஆனால் அவர் பற்றி அறிந்தவர்கள் அவரைப் போற்றினார்கள். அவர் ஒருமுறை சாட்சியம் அளிப்பதற்காக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றுக்கு சென்ற போது நீதிபதி தமிழ் மொழியில் ஒரு சொல்லைத்தானும் அறியாதவராய் இருந்தும் நாவலர் பேசிய வகையைப் பார்த்து, பாங்கைப் பார்த்து மிகவும் பாராட்டினாராம்.அவரின் தோற்றப் பொலிவையும் வருகையையும் கண்ட அப்புக்காத்துமார்கள் ஆங்கிலேயர்கள் உட்பட அனைவரும் எழுந்துநின்று மரியாதை செலுத்த நீதிபதி அவர்களும் சற்றே எழுந்தவர் போல காட்டிக் கொண்டாராம். பிரம்மச்சாரியான அவரின் ஒளிவட்டத்தின் சக்தி என்று கூட இதற்கான காரணமாகக் கூறலாம்.

நாவலரிடத்தில் கொலை, களவு,வஞ்சனை, காமம் முதலிய குற்றங்கள் எள்ளளவேனும் இல்லாத போதும் கோபம் எனும் குணம் மாத்திரம் மிகையாக இருந்ததாக கூறப்படுகின்றது. அதனை சிலர் குற்றமாக எடுத்துக் கூறுகின்ற போதும் தமக்குத் தீங்கு செய்தவர்களை அவர் கோவித்ததை ஒரு காலத்திலும் எவரும் கண்டதில்லை. மாறாக அவர் கோவித்தது சிவநிந்தை, சிவசாஸ்திர நிந்தை முதலிய சிலவற்றில் ஈடுபட்டவர்களையே. அவரின் கோபத்திற்கு குருமார், பிராமணர்கள், சிநேகிதர்கள், பிரபுக்கள், சுற்றத்தார் ஆகியோரும் ஆளாகத் தவறவில்லை.அவரின் கோபம் நற்கோபமே என அறிந்துகொண்டதாலும் எந்த அளவிற்கு கோபம் உண்டோ அந்த அளவிற்குப்பதின் மடங்கு இரக்கமும் அவரிடம் இருந்தது என்ற காரணத்தினால் அவரின் கோபம் பலராலும் பொறுத்துக் கொள்ளப்பட்டது.

இத்தனை சிறப்புக்களையும் கொண்ட நாவலர் பெருமான் அவர்கள் இன்று நினைவுகூரப்படுவது சாலச் சிறந்ததே. காலத்தின் கட்டாயமே.அவரின் தூர நோக்கு சிந்தனை, சைவத்திற்கும் தமிழிற்கும் அவர் ஆற்றிய உதவிகள்,சமயநெறிகள் மாட்சிமை பெறுவதற்கு அவர் ஆற்றிய பணிகள் யாவும்மேலும் மேலும் எம்மால் சிந்தித்துப் பார்க்க வேண்டியவையே தமிழர் என்றோர் இனம் உண்டு.

தனியே அவர்க்கோர் குணம் உண்டு"என்று மற்றவர்கள் எம்மைப் பார்த்து விளிப்பதற்கு ஏற்ற விதத்தில் நாவலர் வாழ்ந்து காட்டினார். எளிய வாழ்க்கை முறைமைக்கு அவர் எடுத்துக் காட்டாக விளங்கினார்.

ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் பெருமைகளையும் சிறப்புக்களையும் பற்றி நான்கு நாட்கள் தொடர்ச்சியாகக் கலை நிகழ்வுகளுடன் கூடிய மாநாட்டில் ஆராய இருக்கின்றீர்கள். இந்த நிகழ்வினை திறம்பட அமைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றேன் என வட மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் கூறியுள்ளமை குறிப் பிடத்தள்ளது.



**கொழும்பு அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளியின் பத்தாவது நிறைவு!**

### இராவணனின் நற்குணங்களைச் சித்தரிக்கும்

# தசக்ரீவன் நாட்டிய நாடகம்





“இராவணன் மேலது நீறு” எனத் திருஞானசம்பந்தரால் திருநீற்றின் மகிமை கூற திருமறைகளில் பெயர் பொதிக்கப்பட்ட தமிழ் உலகு தந்த மன்னன், வரலாற்றுத் திரிபுகளால் கொடுங்கோலன் ஆக்கப்பட்டான். செழிந்த இராஜ்யத்தையும், செறிந்த பலகலையையும் அறிந்த வேத வித்தகன், சந்திரஹாச வாளில் வீழும் பல சுரரும், சாமவேத ப்ரியத்தில் சிந்தனை மகிழும் சிவனும் என போற்றுவதிலிருந்து இராவணனிடத்து வேறுபட்ட தன்மைகள் அகத்திடை இருந்திருக்கும். அத்தோடு உடற்கூறு நூல், மலைவாகடம், மாதர் மருத்துவம், நாடி எண்வகை, பரிசோதனை நூல், இராவணன் வைத்திய சிந்தாமணி என எண்ணற்ற நூல்களையும் புனைந்த எண்ஜோதிட ஆயுள்வேத மருத்துவ நிபுணனாகவும் நல்ல கலைஞனாகவும் திகழ்ந்தவன். இவ்வாறு அடுக்கிச் செல்லக்கூடிய மகத்தான விடயங் களுக்கு சொந்தக்காரன் எவ்வாறு நம் செவிவழி வந்த கதைகளில் வன்முறை விலாசம் பெற்றான். இதுவே என் ஆராய்ச்சியின் ஆரம்ப எண்ணத்து மூலம் என்று கூறினார். அண்மையில் இராவணனின் நற்குணங்களைச் சித்தரிக்கும் வண்ணம் தசக்ரீவன் எனும் நாட்டிய நாட கத்தை வழங்கியிருந்த “கலாசூரி” திவ்யா சுஜேன்.

ஐந்தாம் வேதமான நாட்டியத்தில் சொல்லப்படாத விடயமே இல்லை. அதனால் சொல்லமுடியாத விடயமும் இல்லை எனும் வகையில் எண்ணங்களில் தோன்றும் கற்பனைகளுக்கு நாட்டிய வடிவம் கொடுத்து புது படைப்புக்களைத் தொடர்ந்து வழங்கிவரும் திவ்யா சுஜேன் தமது அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளியின் பத்தாவது நிறைவை ஒட்டிய தசவர்சிகா நிகழ்வில் இந்நாட்டிய நாடகத்தை வழங்கியிருந்தார்.

லங்காபுரி இராஜ்ய மன்னனும் தம் மாற்றாந்தாய் மகனுமான குபேரனிடத்து யாசகம் செய்த இராவணனின் ஏழ்மையையும், ஏளனத்தால் கொண்ட விரோதத்தையும் என சிறுபராய வாழ்வை சித்தரித்து தொடங்கியது நாட்டிய நாடகம். முசுறி மன்னன் மகாபலியினால் வசப்பட்டு ப்ரம்மனிடத்து பாடம் பயின்றார். வழங்கப்பட்ட பத்துப்பாடத்தையும் செவி ஏற்காது தம் குலத்தினை உயர்த்திட பத்து குணங்களோடும் பத்து முகத்தோனாக இருப்பேன் என அவ்விடம் விட்டு அகன்ற இராவணன் காட்சி அமைந்தது.

தன்னோடு தம்பியர் இருவர் கும்பகர்ணனும், விபுஷ்ணனும், மாமன்மார் சுமாலி, ஜம்புமாலி, பிரகஸ்தன், மாரீசஷன், மகாபலி படைத் தலைவர்கள் வஜ்ரதம்புரன், ருத்ராக்கன், தும்ரக்ஷகன் என பத்துபேர் கொண்ட முதற்படையை ஆரம்பித்து அவையோடு ஊழியனாய் சேர்ந்த பத்ரன் காட்சியில் அறிமுகமானான். இலங்கைக்கு வணிகர்களால் சென்றிட எண்ணம் பூண்ட இப்படைக்கான பயணக்கப்பல் அமைக்க பொறியியல் நிபுணத்துவன் மயன் வரவழைக்கப்பட்டான். தாயை இழந்த சேயாய் மயன் மகள் மண்டோதரியும் உடன் வர இராவணன் மண்டோதரி சந்திப்பு நிகழ்கிறது.

இலங்கை சென்ற திட்டம் பத்ரனால் முதன்முறை வீணாகிட மீண்டும் அவனே வஞ்சத்தால் வீரரை கொன்றிட இராஜ்யம் இராவணனிடம் சேர்ந்தது. வேந்தனானாலும் உதிரம் சிந்தாது பெற்ற வெற்றிக்கு உடன்படாதவராய் இருந்த நற்குணத்தை ஆடலமைப்பில் வலியுறுத்தினார்.

தொடர்ந்து மண்டோதரியோடான திருமணம், இராஜ்ய அமைப்பு, அமைச்சர்கள் நியமனம், அனாதை ஆச்சிரமம், அறக்கட்டளை நலன்புரி பணி அதைத்தல், போரில் இறந்தோர் குடும்பத்திற்கு மருத்துவமனை, கல்விக்கூட வசதி என அரச உதவிகள், நகர்ப்புற, நிர்வாக வளர்ச்சி உயர்ந்தமை என காட்சியமைப்பு வழங்கி,

“தன்போல் தன் மக்கள் தனைப்பேணும் தமிழ் தலைவர்
அன்பாகி இன்பாகி இறை வாழ்த்தி முறை வாழ்ந்தார்.
நன்நூல்கள் பல செய்து நாயகனாய் சானறோனாய்
இனத்தாரின் இடர் நீக்கி இசை பரவசத்திசை வாழ்ந்தார் ”

என இயல் வழங்கி இருந்தார் ஆசிரியர் திவ்யா. தமது படைப்புக்களுக்கு இயலாக்கம் வழங்குவதோடு ஜதியமைப்பு, இசை எண்ணங்களையும் வழங்கி நெறியாள்கை செய்து மொத்தமாய் வெளியீட்டினைத் தயாரிக்கும் திறமையை தன்னுள் கொண்ட நடன ஆசிரியராகத் திகழ்வதாலேயே பல விருதுகளுக்குச் சொந்தக்காரராயும், தனக்கென தனி இடத்தினையும் தக்க வைத்திருக்கிறார் திவ்யா சுஜேன். தசக்ரீவன் நாட்டிய நாடகம் பத்து காட்சியமைப்புக்களாக வழங்கப்பட்டு முதல் ஐந்து பகுதிகளும் மேற்சொன்ன இராவண விடயங்களை முன்வைத்தும் அடுத்த ஐந்து பகுதிகளும் இராமாயணத்தில் நாம் அறிந்த விடயங்களை இராவணன் பார்வையில் முன்வைத்தும் வழங்கினார். அதில் சூர்ப்பனகையின் அங்கங்களை அறித்தல், லங்கைக்கு சீதை கொணரப்பட்டு அசோக வனம் அமைந்தமை. ஒற்றன் என வந்த ஆஞ்சனேயன் இலங்கையின் சில பகுதிகளை தகனம் செய்த இழப்பு இலங்கைக்கு அழிவென ஜோதிடர் சொல்லியும், கேளாது அன்பினை வளர்த்த தம் மகளை பத்திரன் தொலைத்து நிற்க, கண்டெடுத்த ஜனகனின் மகள் சீதையிடம் தானே உன் தந்தையென சொல்லி நிற்பதையும், ஒருமுறை என் கண் பாராயோ என மண்டோதரி புலம்பி நிற்பதையும், இறைசுக இசை சுரவம் தந்த ருத்ரவீணை வேறொருவன் கைபட விரும்பிலன் ஆகி மங்கல வீணையை அமங்கலமாய் நொருக்கிவிட்டு உலகேழும் நிகரோ இவன் அன்பின் பெரிதோ என கண்மணி போலுள்ள பெண்மணி வண்டார்குழலியை பிரிய இயலாது பிரிந்து நுண்ணியன் இராவணன் போருக்கு சென்ற காட்சியையும் வழங்கியிருந்தோம் எனக்குறிப்பிட்டார் திவ்யா.

















# ஓ... சிட்டி அசத்திட்டீங்க கண்ணா!!!

கடந்த 20ம் திகதி நடந்த 2.0 முதல் தோற்ற வெளியீட்டு விழாவில் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி... ஒரே நேரத்தில் மேடையிலும் நிகழ்ச்சி நடந்த அரங்கிலும் இரு ரஜினி காட்சி தந்ததுதான். மேடையில் நிஜ ரஜினி வந்து நிற்க, அரங்கின் நடு நாயகமாக பெரிய நாற்காலியில் கால் மேல் கால் போட்டபடி சிட்டி ரஜினி செம ஸ்டைலாக அமர்ந்திருந்தார்.

இது எப்படி சாத்தியம்? எல்லாம் ஹோலோகிராம் மாயம். நேற்று முன்தினமே ரஜினி மும்பைக்குப் போய்விட்டார் அல்லவா... அவரை சிட்டி கெட்டப்புக்கு மாற்றி அங்கே சில காட்சிகளைப் படமாக்கினார் இயக்குநர் ஷங்கர். அதை ஹோலோகிராம் செய்து, நிகழ்ச்சியில் தொகுப்பாளராக இருந்த கரண் ஜோஹர் கேள்விக்கு சிட்டி ரஜினி பதிலளிப்பது போல மாற்றியிருந்தார்கள். இந்த நிகழ்ச்சியின் ஹைலைட்டாக அது அமைந்தது. நிகழ்ச்சியின் போது ரஜினிகாந்தை மேடைக்கு வருமாறு கரண் ஜோஹர் அழைத்தார். ரஜினி வருவதற்காக மேடையில் ஒரு கதவு திறந்தது. திறந்த வேகத்தில் மூடிக் கொனண்டது. ரஜினி வரவில்லை. "ரஜினி சார், நீங்க எவ்வளவு ஸ்பீட்னு எனக்குத் தெரியும்... ஆனால் இந்த அளவு ஸ்பீட் ஏன்.. என்ன ஆச்சு?" என அவர் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, சிட்டி நாற்காலியில் அமர்ந்தபடி "ஹலோ... ஐயாம் சிட்டி.. என்றாா, தி ரோபோட்.... ஸ்பீட் ஒன் டெராஹெட்ஸ், மெமரி ஒன் ஜெகாபைட்ஸ்..." என கரணை அழைத்தார். கரண் ஆச்சர்யத்துடன், "ஓ... சிட்டி..." சிட்டி: கண்ணா நான் எப்போ வருவேன், எப்டி வருவேன்னு யாருக்கும் தெரியாது.. ஆனா வரவேண்டிய நேரத்துல வருவேன்... கரண் புரியாமல் விழிக்க...

கரண்: சரி... உங்களத்தான் அக்குவேறு ஆணி வேறா பிரிச்சுப் போட்டுட்டாரே வசீகரன்.. இப்ப எப்படி? சிட்டி: ஹாஹாஹா... என்னை யாராலும் அழிக்க முடியாது! கரண்: ஆமா.. நீங்க உங்க பாஸ் காதலியை அபேஸ் பண்ணப் பாத்தீங்களே... அந்தக் கதை என்னாச்சு? சிட்டி: அது ஒரு சோகக் கதை கரண். அவர் என்னை நண்பனாக்கிட்டாரு. (இதயம் உடைஞ்சிப் போச்சு). -இப்படிப் போனது அந்த உரையாடல். பாலிவுட்டின் கிங் யார் என்ற கேள்விக்கு "மிஸ்டர் அமிதாப் பச்சன்" என்று சிட்டி ரஜினி பதிலளித்தது குறிப்பிடத்தக்கது. பண ஒழிப்பு குறித்துக் கேட்டபோது, "நான் இந்த வார்த்தையை என் பாஸ் உச்சரிக்கக் கேட்டிருக்கேன்" என்றார். "ஓ.. வசீகரன்?" என்றபோது, தன் தலையில் தட்டியபடி (மொட்ட பாஸ் ஸ்டைல்) "நோ.. சிவாஜி தி பாஸ்" என்றார் சிட்டி. இந்த கேள்வி பதிலுக்குப் பின் மேடைக்கு வந்த ரியல் ரஜினி, "கரண்.. ஏன் சிட்டிய தேவையில்லாம கேள்வி கேட்டு டிஸ்டர்ப் பண்றீங்க?" என்றார் சிரிப்புடன். ஒரே நேரத்தில் சிட்டி ரஜினி, ரியல் ரஜினியை அரங்கில் பார்த்தது ரசிகர்களுக்கு இரட்டை இன்ப அதிர்ச்சியாக அமைந்தது!





# இன்னும் காதலிக்கின்றேன்

இயக்குனர் விஜய்யை பிரிந்துவிட்டாலும் அவரை இன்னும் காதலிப்பதாக நடிகை அமலா பால் தெரிவித்துள்ளார். நடிகை அமலா பாலும், இயக்குனர் ஏ.எல். விஜய்யும் காதலித்து திருமணம் செய்த வேகத்தில் பிரிந்துவிட்டனர். விவாகரத்து கோரி இருவரும் சென்னையில் உள்ள குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில் விஜய் மற்றும் திரையுலகம் பற்றி ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அமலா பால் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

புது வாழ்க்கையை துவங்கியது போன்று உணர்கிறேன். 18 வயதில் நடிக்க வந்த எனக்கு 23 வயதில் திருமணமாகி 24 வயதில் இருவரும் பிரிந்துவிட்டோம். எனக்கு அறிவுரை கூற யாரும் இல்லாததால் தவறுகள் மூலம் பாடம் கற்றுக் கொண்டேன். விஜய் விஜய் விஜய்யை பிரிந்த பிறகு அழுதேன். ஆனால் அதில் இருந்தும் பாடம் கற்றுக் கொண்டேன். நான் இன்னும் விஜய்யை காதலிக்கிறேன், இனியும் காதலிப்பேன். அவர் எப்பொழுதுமே என் வாழ்வின் மிகவும் ஸ்பெஷலான நபராக இருப்பார். விட்டுவிடுவதும் கூட காதல் தான்.

விஜய்யை பிரியும் முடிவு தான் என் வாழ்வின் மிகவும் கடினமான முடிவு. யாருமே பிரிவதற்காக திருமணம் செய்வது இல்லை. வாழ்க்கையை புரிந்து கொள்ள முடியவில்லை. திருமணம் திருமணம் விஜய்யை திருமணம் செய்ய நான் எடுத்த முடிவில் தவறு இல்லை. நான் தவறான வயதில் திருமணம் செய்து கொண்டேன். 20களின் துவக்கத்தில் திருமணம் செய்வது நல்லது அல்ல. அதற்காக அது பற்றி நான் குறை கூறவில்லை. சுற்றுப்பயணம் சுற்றுப்பயணம் அடுத்தடுத்து படங்களில் நடிக்காமல் இருந்தபோது நான் தனியாக பல இடங்களுக்கு பயணம் செய்தேன். புதிய இடம், கலாச்சாரங்களை பார்த்தது அருமையான அனுபவம். அந்த அனுபவம் என்னை நான் புரிந்துகொள்ள உதவியது.




Hückelhoven நகரில்

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Vijay tv agent

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

VIJAY

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை

Ria Money Transfer
MoneyGram International Money Transfer
VALUTRANS MONEY TRANSFER




அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

# EurAsian - Tours



LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
நமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
VALUTRANS MONEY TRANSFER
துரித பண மாற்றுச் சேவை!

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com



# Jasmine Silk House

எமது ஸ்தாபனம்
14.12.2016 முதல்20.02.2017 வரை
திருத்த வேலைகளுக்காக மூடப்பட்டிருக்கும்
என்பதனை வாடிக்கையாளர்களுக்கு
அறித்தருகின்றோம்

புத்தம் புது வரவுகள் முந்துங்கள்
எமது இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
HP:0173 1937 325
Tel:02102 844744
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்





# ASIA BAZAR

Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
எமது இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்: பா. கனேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

# வீட்டுக்கடன் 1,2% வட்டிவீதத்திலிருந்து

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல் "Umschuldung"
எமது இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361 Th. Gobinath

எமது இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main





India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

# StaR - Impex

Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam



நமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்



Kipper Str.3 44147 Dortmund Germany